தை-பங்குனி 2024 நன்கொடை 30

# கண்ணாமூச்சி

மண்சார் இலக்கிய இதழ் தனிச்சுற்று ஆடல் 3 பாடல் 9



# ஸ்ரீ கணேஷ் ஜெராக்ஸ்

79/1, தாலுக்கா ஆபிஸ் ரோடு - மன்னார்குடி

## பொது 'இ' சேவை மையம்

**அனைத்து விண்ணப்பங்களும் கிடைக்கும்**

AADHAAR

Pradhanmantri Fasal Bima Yojana

பதிவுத்துறை
REGISTRATION DEPARTMENT

fssai

Passport Seva
Service Excellence

G.பிரபு - செல்: 9751786700 e-mail: praboo.praboo@gmail.com

'கண்ணாமூச்சி' இலக்கிய பணி தொடர வாழ்த்துகள்...

# ஈகமதை நெஞ்சிலேந்துவோம்

எளிய மக்களுக்கான வாழ்வியலை முன்வைத்து இலக்கியக் களமாடும் கண்ணாமூச்சி மூன்றாம் ஆண்டின் தொடக்கத்தில் அடியெடுத்து வைக்கின்ற மகிழ்ச்சியில் நிறைந்து தளும்புகிறோம் நாங்கள். சிற்றிதழ் நடத்துவது பெரும் பண / மன நெருக்கடிதான். ஆனாலும் தோழமை விரல்கள் எங்களைக் கைப்பிடித்து முன்னெடுத்துச் செல்கிறது என்பது பெரும் ஆறுதல். யாவருக்கும் அன்பு. அது நிற்க..!

இன்றைய பொழுதில் உலகத் தாய்மொழி நாளாகப் பிப்ரவரி 21 நாடு முழுவதும் கொண்டாடி வருகிறார்கள். வங்கத்தில் வெடித்துக் கிளம்பிய மொழிப் போராட்டத்தில் ஐந்து பேர் தம்முயிரைக் கொடையளித்த நிகழ்வுக்காக. ஏற்கிறோம். தமிழ்நாட்டில்...? "நாளை என் மொழி இறந்துவிடும் என்றால் இன்றே நான் மரணித்து விடுவேன்" என்றான் அவார்மொழிக் கவிஞன். அவன் சொன்னான். செய்தவர்கள் தமிழர்கள். மொழி காக்கும் போராட்டத்தில் வீதிக்கு வந்தவர்கள் தமிழர்கள் .நான்கு கட்ட மொழி காக்கும் போராட்டத்தில் கொத்துக் கொத்தாகச் செத்துப் போனார்கள். 600க்கும் மேற்பட்ட தமிழர்கள் மொழி காப்புப்போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்கள்; களமாடினார்கள்; சிறை சென்றார்கள். தம் உயிரையும் கொடையளித்தார்கள்.

அவர்களது ஈகங்களை நெஞ்சிலேந்தி மூன்றாம் ஆண்டு தொடக்கத்தில் கண்ணாமூச்சி ..

ஆசிரியர் குழு.

**கண்ணாமூச்சி**
மண்சார் இலக்கிய இதழ்
தனிச்சுற்று
திருவள்ளுவர் ஆண்டு 2055
தை - பங்குனி 2024

நிறுவனர்
**ப. பரிதிபாண்டியன்**

ஆலோசகர்
**அம்ரா பாண்டியன்**

ஆசிரியர்
**கோ.அருணகிரி**

ஆசிரியர் குழு
**கலைபாரதி**
**த.ரெ.தமிழ்மணி**
**சா.தமிழ்ச்செல்வன்**
**ஞா.ஜெயக்குமார்**
**சா.சிவகுமார்**
**பாலகுமரன்பரிதி**
**தமிழாதன்**
**க.சந்தானலட்சுமி**

இதழ் வடிவமைப்பு
**விடா பப்ளிகேஷன்ஸ்**

அட்டைப்பட உதவி
க.தங்கபாபு

தொடர்பு முகவரி
**சன்மேன் டெய்லர்ஸ்**
9 அரிசிக் கடைத் தெரு, மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம்-614001
செல்பேசி: 9976052585, 9655480092

படைப்புகளை அனுப்ப
வாட்ஸ் அப் எண் 9659335462
மின்னஞ்சல்
kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சியில் வெளிவரும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

# உள்ளே...

கட்டுரை

**எழுத்தாளர் தரிசனம்**
- தஞ்சாவூர்க் கவிராயர் | 8

ஆய்தல்

**பா.உஷாராணியின் இக்கணத்தின் மழை**
– சா.தமிழ்ச்செல்வன் | 15

கட்டுரை

**உப்புக்கருவாடும், உப்புக்கண்டமும் சங்கத்தமிழரின் உணவுப்பழக்க நீட்சியே**
- சு.இராமசுப்பிரமணியன் | 18

சிறுகதை

**பூதத்தாள்வார்**
– நெய்வேலி பாரதிக்குமார் | 37

கவிதை

இடங்காண்கோட்டை சிவக்குமாரின் **தெறிப்புகள்** | 47

போகிறபோக்கில்

**சாதல் இயல்பு**
- சின்னப்பயல் | 49

சந்தா விவரம்:
**தனி இதழ். 30**
**ஆண்டு சந்தா 150**
அஞ்சல் செலவு உட்பட
**மூன்றாண்டு சந்தா. 450**
அஞ்சல் செலவு உட்பட
சந்தா, நன்கொடை வளர்ச்சி நிதி தொடர்புக்கு
**கூகுள் பே 9659335462**

# நண்டு

## கலைபாரதி



அன்று தோழர் வெண்மணி செல்ராசுவிடம் பேசிக் கொண்டிருந்தேன். அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. நடப்பன, பறப்பன, நீந்துவனவற்றை எல்லாம் அன்றே தின்று தீர்ப்பதைப்போல கறிக்கடைகளிலும் மீன் கடைகளிலும் கூட்டம் திமிறிக்கொண்டு நின்றது. தோழர் சொன்னார்,

''எங்க காலத்துல எல்லாம் அப்ப இப்படி இல்ல. எதோ நடவுநாத்துக்குப் போயிட்டு வரும்போது நாலு வயல் நண்டும் ரெண்டு கீரக்குச்சியும் இருந்தா, அதுதான் எங்களுக்கு இராத்திநேரக் கறியாயிடும். அதுலயும், நண்ட நச்சி ரெண்டு மிளகத் தட்டிப்போட்டு ரசம் வச்சிக் குடிச்சா பகல் முழுவதும் வேல செஞ்ச அலுப்புப்போயி சும்மா ஒடம்பு கலகலன்னு ஆயிடும்...'' என்றார். ஆனாலும் இந்த மக்கள் நமமள மட்டும்தான் நண்டு 'தின்னிப் பயலுக, நத்த தின்னிப் பயலுக' என்று ஒதுக்கி வைக்கின்றனர். மருந்துன்னா இப்பதான் எல்லாரும் திங்குதுவளே என்று சொன்னது கூடுதல் செய்தி.

சாதி நடக்குற தெருவுல இருக்கும். குளிக்கிற குளத்துல இருக்கும். கும்புடுற கோயில்ல இருக்கும். செத்துப்போனா நம்மளப் போட்டு பொதைக்குற சுடுகாட்டுல இருக்கும். இன்னும் சொல்லப்போனா நாம சாப்புடுற சாப்பாட்டிலும் சாதி இருக்கும். இங்கு வயல் நண்டு திங்கறவன் கீழ்சாதி. கடல் நண்டு திங்கறவன் மேல்சாதி. நண்பர் த.ரெ.தமிழ்மணி எழுதுவார்,

**''சாப்பாட்டிலும்**
**இருக்கிறது சாதி.**
**நண்டுக்கறி நத்தைக்கறி**
**எனக்கு.**
**ஆடு கோழி**
**உனக்கு.**
**தயிர்சோறு புளிசோறு**
**அவருக்கு..''**

உண்மைதானே..! சாப்பாட்டிலும் சாதி பார்க்குற சமூகம்தானே இது. நண்டு ஒன்றுதான். அது கடலில் கிடந்தால் உயர்ந்தது. வயலில் விளைந்தால் தாழ்ந்தது. பொது சமூகத்தின் புத்தி இப்படித்தானே இருக்கின்றது.

சங்க காலத்தில் இந்தக் காலத்தைப் போன்ற கோளாறு எல்லாம் கிடையாது. புங்கை மரத்தை சங்கத் தமிழச்சி தங்கையாகப் பார்த்தது போன்று நண்டினையும் சங்கப் புலவர்கள் நெருங்கிய உறவாகப் பார்த்திருக்கின்றனர். மனிதர்கள் வாழ்வது வீடு. குருவிகள் வாழ்வது கூடு. நண்டுகள், எலிகள் வசிப்பது வளை. நண்டு கொழுத்தால் வளையில் தங்காது. எலி வளையானாலும் தனிவளை என்பதெல்லாம் நாமறிந்ததே. ஆனால், சங்கப்புலவர் ஓரம்போகி,

**''செந்நெலம் செறுவில் கதிர்கொண்டு கள்வன்**
**தண்அக மண்அளைச் செல்லும் ஊரற்கு ........''** ***(ஐங்குறுநூறு 27)***

என்று நண்டு குளிர்ச்சியான தன் அகத்தில் / வீட்டில் வாழ்ந்திருக்கிறது என்று முன்மொழிந்திருக்கிறார். ஓரம்போகி முன்மொழிந்ததைப் பரணரும்,

**''சிறுவீ ஞாழல், வேரளைப் பள்ளி**
**அலவன் சிறமனை சிதையப் புணரி ........''** ***(குறுந்தொகை 328)***

சின்னஞ்சிறு மலர்களை உடைய ஞாழல் மரத்தின் வேர்ப் பகுதியில் நண்டு தனக்கான சிறுவீட்டை கட்டிக்கொண்டு வாழ்கிறது என்று வழிமொழிந்திருக்கின்றார். இங்கு மனிதர்களைப் போலவே நண்டும் புதுமனை புகுவிழா நடத்தி நண்டகத்தில் அதாவது வீட்டில் வாழ்ந்திருக்கிறது என்பது நாமறியும் தகவல்.

உயிர்கள் அனைத்திலும் ஆண்–பெண் என்கிற பால்பகுப்பு உண்டு. ஆண் யானை–களிறு, பெண்யானை–பிடி, ஆண் பறவை–சேவல், பெண் பறவை–பெடை, குரங்குகளில் ஆண்–கடுவன், பெண்–மந்தி. பனைமரத்திலும் ஆண் பனை, பெண் பனை உண்டு. அதுபோலவே நண்டிலும் ஆண் நண்டு–அலவன், பெண் நண்டு – நள்ளி என்று அழைக்கப்படுகின்றது. இதனை,

**பள்ளிக் கமலத் திடைபட்ட**
**பகுவாய் அலவன் முகம்நோக்கி**
**நள்ளி ஊடும் வயல்**
**சூழ்ந்த நறையூர்**
**– பெரிய திருமொழி (6:7:6)**

என்ற பாடல்வழி அறியலாம்.

தாமரை மலருக்குள் புகுந்து மகரந்தத் துகள்கள் தன் மீது படிய தோற்றம் மாறி வந்த ஆண் நண்டான அலவனின் முகம் நோக்கி, பெண் நண்டாகிய நள்ளி ஊடல் கொள்கிறதாம். நம் களவு / கற்பு வாழ்வில் நடைபெறும் ஊடல், நண்டின் வாழ்விலும் நடந்து இருக்கின்றது என்பதும் நினைவுபடுத்த வேண்டிய ஒன்றாகும்.



சங்க காலத்தில் தலைவியும், தோழியும் கடற்கரையில் நண்டு பிடித்து விளையாடுகின்றனர். இதனை அம்மூவன்,

**''தொன்னிலை நெகிழ்ந்த வளைய
ளீங்குப்
பசந்தனள் மன்னென் தோழி
யென்னொடும்
இனினிணர்ப் புன்னையம் புகார்நிழற்
பொன்வரி அலவன் ஆட்டிய ஞான்றே''**

***(குறுந்தொகை 303)***

என்று புங்கை மரத்தின் கீழ் அழகிய புள்ளிகளை உடைய நிழலில் பொன் போன்ற கோடுகளை உடைய நண்டுகளைப் பிடித்து தலைவியும், தோழியும் விளையாடிய அந்தப் பொழுதில்தான் தலைவன் தலைவியைப் பார்த்திருக்கிறான்.

நண்டுக்கு இருப்பிடமான இல்லம் இருந்திருக்கின்றது. அந்த இல்லத்திற்குள் மனிதர்களைப் போலவே நண்டுகளுக்கும் ஆண் பெண் ஊடல் நிகழ்ந்திருக்கின்றது. அக்கால மகளிரது விளையாட்டுகளிலும் நண்டு இணைந்திருக்கின்றது என்பதிலிருந்து மனிதர்களுக்கு இணையான நண்டின் வாழ்வியலையும் நாம் அறிய முடிகிறது.

நண்டானது 'நண்டு' என்ற பெயரில் சங்க இலக்கியம் நெடுக எங்கும் காணப்படவில்லை. ஞெண்டு என்றே பரவலாகக் காணப்படுகிறது. ஆனால் போகர் நிகண்டு நரியுண்ணி, தலையில்லாச் சேவுகள், பத்துக்காலுடைய மன்னன், பருந்துக்கு விருந்தானன், கொத்துகின்ற குறடுவுள்ளோன், குளத்துக் குருவியானோன் என்ற பெயர்களில் நண்டினைக் குறிப்பிடுகின்றது.

குஞ்சு நண்டுகள் வெளிவர தாய் நண்டு இறந்துவிடும் என்ற செய்தியை ஔவையாரின் நல்வழி விழி முன்னரே பார்த்தோம். இக்கருத்துக்கு வலுசேர்ப்பதைப் போன்று நீலகேசி உரைமேற்கோள் பாடலொன்று,

**''புத்தன்தாய் நண்டிப்பி வாழை
புனமூங்கில்
கத்தும் விரியன் கடுஞ்சிலந்தி –
இத்தனையும்
வேலாலும் வாளாலும் இன்றியே
தாம்கொண்ட
சூலாலே தம்முயிர்க்குச் சோர்வு''**

என்று கூறுகிறது. இப்பாடலில் புத்தரின் தாய் மாயாதேவி புத்தர் பிறந்த ஏழாம்நாளே இறந்துவிட்டாள். மேலும் வாழை, மூங்கில், விரியன் பாம்பு, கடுஞ் சிலந்தி யாவும் வாளாலும் வேலாலும் இறக்கவில்லை. கருகொண்ட சூலால் இறந்துவிடுகிறது என்கிறார்.

தசரதன் மரணத்தைக் கூறும் கம்பரும்,

**''நோயும் இன்றி நோன்கதிர் வாள்வேல்
இவைஇன்றி
மாயும் செல்வ மக்களின் ஆக
மறமன்னன்
காயும் புள்ளிக் கற்கடம் நாகம்
கனிவாழை
வேயும் போன்றான் என்று மடங்கா
விழுகின்றாள்''**

***(கம்பராமாயணம் 1904)***

இப்பாடல் நண்டு, நாகம், கனி வாழை, மூங்கில் போன்றவை கருவுயிர்த்தப் பிள்ளைகளால் அழியும். அதுபோன்று தசரதனும் நோயில்லாமல், வாள்வேல் வாதை எதுவுமில்லாமல் பிள்ளைகளால் மாய்ந்து போனான்.

இன்னுமொன்று மௌனகீதம் படத்தில் புலவர் புலமைப்பித்தன் ஒரு பாடல் எழுதி இருப்பார். டாடி டாடி ஓ மை டாடி எனத் தொடங்கும் பாடலில்,




**''கரையோர நண்டெல்லாம்
தான்பெற்ற குஞ்சோடு எப்போதும்
அன்போட விளையாடுதே''**

என்று. அதற்கு ஒரு வாசகர் குஞ்சுகள் பிறந்த பிறகு நண்டு இறந்துவிடும். ஆனால், நீங்கள் கரையோர நண்டுகள் பிள்ளைகளோடு விளையாடுவதாக எழுதி இருக்கின்றீர்களே? என வினவியமைக்கு,

என் பாடலில் சரிதா பிள்ளைகளோடு விளையாடுவதைப் போல காட்சி இல்லை. தந்தையான பாக்யராஜ் பிள்ளைகளோடு பாடுவதைப்போல அந்தக் காட்சி. ஆக தாய் நண்டு பிள்ளைகளோடு விளையாடவில்லை. அங்கு விளையாடுவது தந்தை நண்டு, என்று சொல்லி இருக்கிறார். சரிதானே...! நகரும்... ●

# எழுத்தாளர் தரிசனம்

## தஞ்சாவூர்க் கவிராயர்

எழுத்தாளர்களை நேரில் சந்திக்க ஆசைப்படாதீர்கள். ஏமாற்றமே மிஞ்சும் என்பார் தஞ்சை ப்ரகாஷ். எழுத்தாளரை அவரது படைப்புகளில்தான் தரிசிக்க முடியும். நம்மில் எத்தனை பேருக்கு ஜி.நாகராஜனை நேரில் சகித்துக்கொள்ள முடியும் என்று சொல்லுங்கள்... என்பார்.

நாளை மற்றுமொரு நாளே போன்ற அற்புதமான நாவலையும் சிறுகதைகளையும் தமிழுக்குத் தந்த ஜி.நாகராஜன் ஒரு காலகட்டத்தில் தஞ்சாவூர் வந்து தங்கியிருந்தார். ப்ரகாஷின் பராமரிப்பில் தன் நாட்களை ஓட்டிய ஜி.நாகராஜனின் கைகள் சில சமயம் எங்களை நோக்கியும் நீளும். எங்களுக்கு மறுக்கத் தோன்றாது.

எங்கேயோ புழுதியில் புரண்டு எழுந்து வந்தவர்போல் இருப்பார். முழங்கை வரை நீளும் அரைக்கைச் சட்டை நோயாளி போன்ற முகத்தோற்றம். சுற்றியிருப்பவர்களைப் பற்றி கவலைப்படாத உரத்த பேச்சு. பேச்சும், பாதிக்கு மேல் குழலறலாக வெளிப்படும். அவர் சற்றுமுன் கஞ்சா புதைத்திருக்க வேண்டும். அல்லது குடித்திருக்க வேண்டும். குளியல் கண்டு நீண்ட நாட்களான உடம்பிலிருந்து வீசும் துரக்கந்தம்.

அவரது கதைகளைப் படித்துவிட்டு அவரை நேரில் பார்க்க துடியாய்த் துடித்தேன். ப்ரகாஷ், 'அவரே இங்கு நாளை வருவதாக இருக்கிறார். தாராளமாக அவரோடு உறவாடி மகிழுங்கள்' என்றார் நமுட்டுச் சிரிப்புடன்.

ஜி.நாகராஜன் வந்து சேர்ந்தார். ப்ரகாஷ் கடைக்கு முன்னால் நின்ற ரிக்ஷாவிலிருந்து முதலில் அவரது அழுக்க வேஷ்டி இறங்கியது. பிறகு அவர் இறங்கினார். 'ப்ரகாஷ்' என்ற அழுத்தமான கூவலுடன், 'ரிக்ஷாவுக்கு ஐந்து ரூபாய் கொடுங்கள் என்று அதிகார தோரணையில் கை நீட்டினார். நான் என் சட்டைப் பையிலிருந்து ஐந்து ரூபாயை ரிக்ஷாக்காரரிடம் கொடுத்தனுப்பினேன். என் அபிமான எழுத்தாளருக்கு ஐந்து ரூபாய் கூட தரக்கூடாதா?

''ஓ தேங்க்ஸ்'' என்றார் ஜி.நாகராஜன் என்னைப் பார்த்து.

''நான் உங்கள் தீவிர வாசகன் சார்!''

‘‘அப்படியா’’ என்று சிரித்தார். பற்களா அவை? வாய்க்குள் கோடரியால் வெட்டியது போல் இருந்தது.

இவர் அந்திமம் நெருங்கிவிட்டது என்று என் மனசுக்குப்பட்டது. இந்த வாய்ப்பை நழுவவிடக்கூடாது என்ற பயத்தில் “சார் உங்களுடன் ஒரு போட்டோ எடுத்துக்கொள்ள வேண்டும். பக்கத்துக் கடைதான் போட்டோ ஸ்டுடியோ..’’ என்றேன்.

ஸ்டுடியோவில் என்னை நெருங்கி உட்கார்ந்தார் சாதாரண ஸ்டூல் நாற்காலி.

‘‘சார் ஸ்மைல் பண்ணுங்க!’’ என்றார் மேகராமேன்.

‘‘என்னது ஸ்மைல் பண்ணணுமா? நான் எவ்வளவு மனக்கஷ்டத்தில் இருக்கேன் தெரியுமா? பொண்டாட்டி சாவக்கெடக்கறாடா. முட்டாள் மாதிரி என்னை ஸ்மைல் பண்ணச் சொல்றே. இதுதான் என் மூஞ்சி. எடுத்தா எடு. இல்லன்னா எந்திரிச்சுப் போறேன் உன் இஷ்டத்துக்கெல்லாம் சிரிக்க மடியாது’’ என்று சத்தம் போட்டார் நாகராஜன்.

காமிராமேன் இளைஞன். அப்படியே அரண்டுவிட்டான். ‘‘ஸார் கோவிச்சுக்காதீங்க. ஸாரி சார்! ஸாரி சார்! என்று சொன்னபடி படம் எடுத்தான்.

ப்ரூஃப் வாங்கியபோது தான் தெரிந்தது. படுகோணலாக உட்கார்ந்தபடி அகோரமான முகத்துடன் காட்சியளித்தார் ஜி.நாகராஜன். நிச்சயம் அந்தப் படம், அவருக்குப் பெருமை சேர்க்காது. கடைசி வரை அந்தப் படத்துக்கான ப்ரிண்ட்டை வாங்கவே இல்லை.

நாகராஜன் என்ற மகா கலைஞனுடன் நான் கொண்ட மகாமோசமான சந்திப்பு இவ்விதம் நிறைவு பெற்றது. அடுத்தடுத்த சந்திப்புகள் இதைவிட மோசமாக இருந்தன.

ஒருநாள் அரண்மனை வளாகத்தில் நான் பணிபுரிந்த அலுவலகத்தை தேடிக்கொண்டு வந்துவிட்டார்.

சூப்பிரண்டின் மேஜை அருகே நின்றபடி “கோபாலீ!” என்று கூவினார்.

‘‘அப்படி யாரும் இங்கே இல்லை. போய்யா…’’ என்ற சூப்பிரண்டு கத்த, நான் நாகராஜன் கண்ணில் பட்டுவிட்டேன்.

‘‘கோபாலி! இந்த ஆள் உன்னை தெரியாதுன்றான் பார்! நீ எவ்வளவு பெரிய கவிஞன்! அண்ட பகிரண்ட பெரும்பிடுகிக் கவிராயர் ஆச்சே நீ! இவனுக்கு உன்னைத் தெரியாதாம் கபோதி!’’

அலுவலகத்தில் எனக்கிருந்த நற்பெயரை இப்படியாக ஒரே நாளில் நாசமாக்கினார் நாகராஜன்.

1974இல் ப்ரகாஷின் அங்கிள் கதையைப் படித்துவிட்டுத்தான் அவரைத் தேடிப்போனேன். ரஜனீஷ் போன்ற தோற்றத்தில் ஞானத்தைப் பறைசாற்றும் முன்வழுக்கையும், கம்பீரமான கண்களும், கிருதாவுடன் சங்கமிக்கும் மீசையுமாக நான் பெரிதும் வியந்துபோன ஆகிருதியுடன் காட்சியளித்தார் ப்ரகாஷ். இந்த வியப்பு அவர் மறையும் வரை மட்டுமல்ல மறைந்து 24 ஆண்டுகள் ஆன பிறகும் நீடிக்கிறது.

ஜெயகாந்தன், நா.பார்த்தசாரதி, எம்.வி.வெங்கட்ராம் போன்ற பழம்பெரும் எழுத்தாளர்களின் தோற்றம் ஏதோ ஒரு வகையில் அவர்களின் எழுத்தோடும் சம்பந்தப்பட்டிருக்கிறது.

புராதனமான தஞ்சாவூர் போஸ்ட் ஆபீசின் குமாஸ்தா மேஜையில் ஒரு வௌவால் போல் தொற்றிக் கொண்டிருக்கும் நா.விச்வநாதன் என்ற ஆசாமி ஒரு கவிஞன் என்பதை அந்த அலுவலகத்தில் உள்ளவர்களே நம்பமாட்டார்கள். நான் நம்பினேன். நா.விச்வநாதனின் நீளமூக்கு, வெண்கலக் குரல், வார்த்தைகளின் லாவகம், அவன் குமாஸ்தா இல்லை.. கவிஞன் என்று கூவுவது போல் இருக்கும்.

பசித்த மானிடம் போன்ற புரட்சிகரமான கருத்துகளை உள்ளடக்கி நாவல்கள் எழுதிய கரிச்சான்குஞ்சு கட்டுக் குடுமியும், நெற்றி நிறைய விபூதிப்பட்டையுமாக வைதிகத் தோற்றத்தில் காட்சியளித்தார்.

சென்னைக்கு வந்த பிறகு பத்திரிகை நிமித்தமாக பல எழுத்தாளர்களைச் சந்திக்க நேரிட்டது. ஏமாற்றங்களுக்கு குறைச்சல் இல்லை.

அண்ணாசாலையில் நானும் நண்பரும் நடந்து போய்க்கொண்டிருந்தோம். தாடியும்,

மீசையுமாக அழுக்குச் சட்டையுடன் ஒருவர் எதிர்பட்டார்.

அவரது புனைபெயரைக் குறிப்பிட்ட போது அதிர்ந்துபோனேன். ‘ஆகா! இவர் கவிதைகளில் ஊடாடும் உணர்ச்சிக் குழப்பங்கள்...வாழ்வின் அவலங்கள்...அவரா இப்படி இருக்கிறார்?’’ என்று கேட்டேன்.

‘‘இவனை அழைத்துக்கொண்டுபோய் சலூனில் உட்காரவைத்து சம்மர் கட் செய்து குளிக்க வைத்து நல்ல சட்டை மாட்டி, கச்சிதமாக வேட்டி கட்டிவிட்டால் இவன் கவிதையும் ஒழுங்காக இருக்கும். இவன் கவிதையும் இவனைப் போலவே அழுது வடிவதற்கு அதுதான் காரணம்!

தி.சா.ராஜூ தஞ்சையில் எண்பதுகளில் நாங்கள் நடத்திய இலக்கியக் கூட்டங்களில் கலந்துகொள்வார். அவர் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். அந்த மிடுக்கையும், ஒழுங்கையும் அவர் எழுத்தில் காணலாம். தனிப்பட்ட வாழ்வில் அவர் சந்தித்த சோகங்கள் வேற யாருக்காவது ஏற்பட்டிருந்தால் சுக்குநூறாக சிதறி இருப்பார்கள். ஒரு தீரமிக்க ராணுவ வீரனாகவும், பக்குவம் பெற்ற படைப்பாளியாகவும் தன் வாழ்க்கைச் சோதனைகளை அவர் எதிர்கொண்டவிதம் நமது பிரமிப்புக்கு மட்டுமல்ல பின்பற்றலுக்கும் உரியது.

பழம்பெரும் எழுத்தாளர் ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்களை தஞ்சை தெற்குவீதி கமலாஸ்டோர்ஸ் ஜவுளிக்கடையில் காணலாம். கிராமத்து மனிதர்கள் அவர் கையில் தாம் வாங்கிய புதுத்துணிகளை கொடுத்து ஆசிபெற்றுச் செல்வது வழக்கம். மாணிக்க வீணை என்ற சிறுகதைத் தொகுப்பில் வரும் ரசனை மிகுந்த கதைகளின் மனித உருவமாக அவரைக் கண்டு வியந்துள்ளோம்.

தஞ்சையின் பழம்பெரும் எழுத்தாளர் அழகிரி விசுவநாதன் ரயில்வேயில் டிக்கெட் பரிசோதகராக வேலை பார்த்தார்.

‘தமிழ் எழுத்தாளர்களில் நானே உயர்ந்தவன்! என்று தமாஷாக சொல்வார். அவ்வளவு உயரம் அவர். தஞ்சை ரயில் நிலையத்தில் பணிபுரிந்த டி.எஸ்.கோதண்டராமன் குடுமியுடன் வைதிகக் கோலத்தில் காட்சி தருவார். ஆனால் அவர் எழுத்து ‘நவீனமாக’ இருக்கும்.

புயலில் ஒரு தோணி, கடலுக்கு அப்பால் போன்ற மகத்தான நாவல்களைப் படைத்த ப.சிங்காரத்தை நானும் ப்ரகாஷும் மதுரைக்குச் சென்று சந்தித்தோம். மிக எளிய தோற்றம். தனது படைப்புகளைப் பற்றி பேச மறுத்துவிட்டார். இன்று தமிழ் இலக்கிய உலகில் தலைசிறந்த நாவல்களாக அவரது படைப்புகள் பேசப்படுகின்றன.

எழுத்து வேறு, எழுதியவன் வேறாக இருப்பதில் தவறேதுமில்லை. எழுதுபவன். தான் எழுதுகிற எழுத்தைப் பிரதிபலிக்கும் புறத்தோற்றம் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. எழுத்தில் தென்படுவது எழுத்தாளரின் மனமுதம் என்று கொள்வதில் தவறேதுமில்லை.

**பழம்பெரும் எழுத்தாளர். மனித உணர்வுகளை, அறங்களை நுட்பமாக சித்தரிப்பதில் வல்லவர். இவரைத் தேடிச்சென்ற வாசகரை சாதி காரணமாக திண்ணையில் உட்கார வைத்துச் சாப்பாடு போட்ட கதை நாடறிந்தது.**

பழம்பெரும் எழுத்தாளர். பெயர் சொல்ல விரும்பவில்லை. மனித உணர்வுகளை, அறங்களை நுட்பமாக சித்தரிப்பதில் வல்லவர். இவரைத் தேடிச்சென்ற வாசகரை சாதி காரணமாக திண்ணையில் உட்கார வைத்துச் சாப்பாடு போட்ட கதை நாடறிந்தது.

எழுத்தாளனின் ‘புறத்தோற்றம்’ எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், மனத்தோற்றம் மனித மாண்புகளைச் சிதைக்கக்கூடாது.

ஒரு வாசகனுக்கு தன் எழுத்தின் வழி தரிசனம் தருவதற்கு எழுத்தாளன் எப்போதுமே காத்திருக்கிறான். இந்த தரிசனங்கள் ஏமாற்றுவதில்லை.

●

# கோலம்

## த.ரெ.தமிழ்மணி



முன்னிரவு நேரம்.

வாசலில் தூர்வாரி எந்திரத்தின் அலறல் கேட்டவுடன் தாத்தா குண்டு குண்டென்று வெளியே ஓடிவந்தார்.

''கம்னாட்டி பயலுவ... இவனுவோ கிட்டே தண்ணி இல்லேன்னு யாரு மாராடிச்சா?''

''தாத்தா! தாத்தா! சண்டை வளத்துடாதிங்க. நம்ம வீட்டு வாசல்ல மட்டும் குழாய் பதிக்கல. ஊரெல்லாம் பதிச்சுகிட்டிருக்காங்க'' தாத்தாவின் வேகத்தைக் கட்டுப்படுத்தினாள் பேத்தி இனியா.

''சம்பாதிக்க ஆயிரம் வழியிருக்கு. தண்ணி தேன் மாதிரி இருக்குற நம்ம ஊருக்கு எதுக்கு குழாத்தண்ணி?'' ஆத்திரம் அடங்காமல் நரைத்த மீசையை முறுக்கிக் கொண்டார்.

''தாத்தா! இப்படி உக்காருங்க...''

நாற்காலியில் உட்கார வைத்துவிட்டுப் படிக்கட்டில் அமர்ந்தாள். முழங்கைக்கு மேலே கட்டப்பட்டிருந்த தாயத்தைத் தடவிக்கொண்டே கேட்டாள்.

''ஏன் தாத்தா கோவப்படுறீங்க?''

''பின்னே என்னம்மா? வயவேலை முடிஞ்சவுடனே தாகம் தாங்காது. அப்படியே வாய்க்கா தண்ணிய ரெட்ட கையாலயும் தூசி விலக்கிட்டு அப்படியே குடிப்போம். ஆத்துத்தண்ணியும் குடிச்சு வளந்ததுதான் இந்த உடம்பு''. கைகளை மடக்கிக் காட்டினார். தன் வலுவைக் காட்டுவதில் கண்களில் அப்படியொரு பெருமிதம். ஆறு மாதங்களில் இந்த உடம்பு நூற்றாண்டைக் காணப்போகிறது. இன்றைக்கும் மிதிவண்டியில் சிட்டு மாதிரி பறப்பார். செங்கரும்பைச் சிறுபிள்ளையைப் போல கடித்துத் தின்னும் பற்களுக்காகக் உலக சாதனையாளர் விருது கொடுத்துவிடலாம். மகனுக்கும், மருமகளுக்கும் 6 மணிக்கு விடியும். பேத்திக்கு ஏழு மணி. தாத்தாவுக்கு சேவலோடு கருப்பாட்டைத் தேட முடியாத இருளிலேயே எழுந்து வயலுக்குப் போய் விடுவார்.

''யாரு இல்லேன்னா... உங்க காலம் அப்படி.இப்ப ஆத்துலதண்ணிவரும்போதே சாயக்கழிவு நுரையோடுதான் வருது. போதாதுக்கு மருத்துவ பல்கலைக்கழகக் கழிவே நம்ம ஆத்துல கலந்து நாறடிக்குது. எண்ணெய்க் கழிவு கசிவை சொல்ல முடியாது. இப்ப தண்ணி நஞ்சாயிட்டு தாத்தா''. பதின்பருவத்தைக் கடந்து விட்டு பல்கலைக்கழகமொன்றில் தொல்லியல் பயின்று வருகிறாள் தாத்தாவின் செல்லம்.

எல்லாவற்றையும் செவிமடுத்து அமைதியாகிக் கொண்டிருந்த தாத்தா, வாசலைத் தாண்டி மண்ணை எடுத்து மலைபோல குவித்ததைக் கண்டு வெப்பமானார்.

''மார்கழி மாசமும் அதுவுமா இப்படி வாசல புண்ணாக்குறீங்களே உருப்படுவீங்களா...?''

''அவங்ககிட்ட சண்டைக்குப் போயிடாதீங்க'', என்று பதறிக்கொண்டு வந்து தாத்தாவை அசமடக்கினார் பாட்டி. தாத்தாவின் சத்தம் அவர்கள் காதில் விழாமல் எந்திர யானையின் பிளிறல் தடுத்துவிட்டது. கவளம் கவளமாய் உணவை வாங்கிக் கொள்வது போல தன் இரும்புக் தும்பிக்கையால் மண்ணள்ளிக் கொண்டிருந்தது தூர்வாரி எந்திரம்.

‘ஆக தண்ணிய விலை வைத்து விற்கப்போவதோ... குடிநீருக்காகப் பன்னாட்டு நிறுவனங்களிடம் கையேந்தப் போவதோ கவலையில்லை. மார்கழி மாதத்தில் தோண்டுவதுதான் கொந்தளிப்புக்குக் காரணம். என்னவென்றுதான் கேட்டு விடுவோமே?”, நினைத்தவாறே கேட்டாள்.

‘‘தாத்தா? அப்படி என்னதான் இந்த மார்கழியில் இருக்கு?’’

‘‘மார்கழி திங்கள் மதிநிறைந்த

நன்னாளாம்

நீராடப் போதுவீர்! போதுமினோ

நேரிழையீர்’’ன்னு பாடின ஆண்டாளையும், மாதங்களில் அவள் மார்கழின்னு எழுதுன கண்ணதாசனையும்தான் உங்களுக்கத் தெரியும்? மார்கழி நம்ம பண்பாட்டோட அடையாளம். மண்ணுக்கும் நமக்கும் நெருக்கம் அதிகரிக்கிற மாசந்தான் மார்கழி. சோம்பேறிகளுக்குத்தான் இது பூடமாசம். உழைக்கிறவங்களுக்கு இது பூமாசம். அந்த மகிழ்ச்சி வெளிப்பாடுதான் கோலம். கோலம் போடுற வாசலை இப்படி கொதறிக்கிட்டிருக்கானுவளே...’’ மறுபடி வாசலைப் பார்த்தார். தூர்வாரி எந்திரம் வாசலைக் கடந்து அடுத்த இடத்திலும் மண்ணைப் பறித்தெடுத்துக் கொண்டிருந்தது. தாத்தாவிற்குப் பன்னிரு திருமுறையும் திவ்விய பிரபந்தமும் அத்துப்படி. இத்தனைக்கும் பள்ளப்படிப்பைத் தாண்டாதவர். ஒரு பள்ளிக்கூடம் பல்கலைக்கழகத்திற்குப் பாடம் எடுத்துக் கொண்டிருந்தது. கன்னத்தில் கையூன்றிப் பெருவியப்பாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள் இனியா. தாத்தா நிறுத்தவில்லை.

‘‘அப்போ நம்ம வீடு ஓட்டு வீடு. வாசப்பகுதியில் பெரிய கூரைக்கட்டு திண்ணை. அம்பது பேருக்கு மேல் படுத்துறங்கலாம். நான் திண்ணைக் கட்டையிலதான் படுத்திருப்பேன். 4 மணி ஆவும்போது சங்கு ஊதி பாட்டு பாடியபடி மணி அடிச்சுகிட்டே வருவார் சங்கு ஊதித்தாத்தா. குரைச்சிகிட்டே வர்ற நாயெல்லாம் அவர் திரும்பிப் பார்த்து மொறைச்சார்ன்னா இருந்த இடம் தெரியாம தெறிச்சு ஓடும். அவரு பின்னாடி பேய்ங்க வர்றதா ஒரு ஐதீகம். எனக்கு வெடவெடத்துடும். நம்ம வீட்டைக் கடந்து போயி அவரு சத்தம் ஓயிறமுட்டும் தலைவரைக்கும் இழுத்துப் போத்திப்பேன். கொஞ்ச நேரத்துல அறுவடைக்குப் போற ஆளுங்களோட பேச்சுக்குரல் கேட்ட பிறகுதான் அப்பாடான்னு இருக்கும். மெதுவா போர்வைய விலக்கிட்டுப் பாத்தா அப்படியொரு பனி. பக்கத்துல நிக்கிற ஆளுக கண்ணுக்குத் தெரியாதுன்னா பாத்துக்கோயேன். ஆத்தா, நெல்லவிக்கிற பானைக்கு நெருப்பு மூட்டும். அதுல குளிர் காஞ்சிட்டு, நெல்லிக்காய் பொறுக்க ஓடுவோம்’’. ஊரே கிடையாய்க் கிடந்து வாழ்ந்த தாத்தா தன் கதையில் ஒன்றி இருந்தாலும் வாசலை அவ்வப்போது நோட்டம் விட்டுக்கொண்டிருந்தார்.

பெரிய பெரிய இரும்புக் குழாய்களை கம்பியில் கட்டி அந்த எந்திரம் நீர்குழிக்குள் படுக்க வைத்துக் கொண்டிருந்தது. பெரிய அளவிலான ஆர்ப்பாட்டம் இல்லாமல் வேலை மும்முரமாய் நடந்து கொண்டிருந்தது.

‘‘இனியா! இன்னுமா தூக்கம் வரல? ஆத்தாவை அழச்சிட்டு வந்து படுமா’’ உள்ளிருந்து அழைத்தது அம்மாவின் குரல்.

‘‘நீ படும்மா. நான் வர நேரமாகும்’’ தாத்தாவிற்கு படுக்கை உள்திண்ணையில்தான். கயிற்றுக் கட்டிலில் போர்வை, தலையணை, ஒரு சொம்புத் தண்ணீர். துணையாய் ஒரு மூங்கில் கைத்தடி. அவ்வளவுதாம்!

‘‘நீ சொல்லு தாத்தா.’’ இனியாவின் கெஞ்சலில் தொடர்ந்தார்.

‘‘நெல்லித் தோப்புக்கு முந்துனாதான் உண்டு. எங்க வயசு பசங்களோட ஓட்டமும் நடையுமா போகும்போதே சொல்லி வச்ச மாதிரி எல்லா வீட்லயும் சாணி தெளிச்சுக் கூட்ட ஆரம்பிச்சுடுவாங்க. கோலமாவு விக்கிறவரு மணியடிச்சுக்கிட்டே கோலமாவுன்னு கத்திகிட்டு போவாரு. இருட்டுல யாரு மேலயாவது மோதிடுவோம்னு பயம்’’. தாத்தாவின் பேச்சை இடைமறித்தார் பாட்டி.

''ஆனா நாங்க கோலமாவு வாங்கமாட்டோம். செவப்புக்குச் செங்காமட்டை கருப்புக்கு கரி, மஞ்சளுக்கு மஞ்சக் கப்பி, நீலத்துக்கு சங்குப்பூவும் பூலாப்பழமும் சாறு புழிஞ்சு காய வச்சுடுவோம். இப்பவாட்டம் கல்லுமாவு ஏது? எல்லாம் அரிசி மாவுதான்.

''ஆனா பூப்பறிக்க மட்டும் நாங்க வேணும்''. பாட்டியைப் பொருள் பதிய பார்த்தார். பாட்டியின் முகத்தில் காலத்தின் புன்னகை.

''பொல்லாத பூவு... பொய்ப் பூவு...'' உதடு பிதுக்கினார்.

''நீங்க என்ன பேசிக்கிறீங்கன்னே புரியல'' இனியா தலைசொறிந்தாள்.

''அத உன் பாட்டிகிட்டேயே கேட்டுக்க. எனக்கு வேலை வந்துடுச்சு''. தோளில் கிடந்த துண்டை முண்டாசாகக் கட்டினார்.

மண்வெட்டியை எடுத்துக்கொண்டு வாசலுக்குப் போனார். அவர்கள் அடுத்த தெருவில் குழி தோண்டிக் கொண்டிருந்தார்கள். வாசலில் மலை மாதிரி குவிந்துக் கிடந்த மண்ணை ஒண்டியாளாய்ச் சரிசெய்யப் போனார்.

''நீங்க சொல்லுங்க பாட்டி'' தாத்தாவிடமிருந்த கண்களைத் தன் பக்கம் இழுத்தாள்.

''பூசணி பரங்கி இதுகள்ல எல்லாப் பூவும் காய்க்கிறதுல்ல. பூவுக்கு கீழ பிஞ்சு இருக்கிற பூவுதான் காய்க்கும். மத்ததெல்லாம் உதிர்ந்துடும். பெரும்பாலும் முதல்ல பூக்குற பூவு இப்படித்தான் இருக்கும். அதத்தான் மார்கழிக் கோலத்துக்கு நடுவுல வைப்பாங்க. எங்க வீடு மூணாவது தெருவுல. அதுதான் உனக்குத் தெரியுமே. என்னோட இளவயசுல கோலம் போடுறது மட்டும்தான் என் வேலை. நெல்லிக்கா பொறுக்க போறப்ப யாருக்கும் தெரியாம கோலத்துக்குப் பூ வெச்சிடுவாரு. இதுல 'உனக்கு எப்படி பூ வச்சி உடுறது'ன்னு பாட்டு வேற''

''என்ன பாட்டி என்னென்னவோ நடந்திருக்கு''. கண்சிமிட்டினாள்.

''கேளுடி... இது மாதிரி ஒருநாள் இருட்டுல பூ பறிக்க போனப்ப ஐயோ அம்மான்னு சத்தம். பதறியடிச்சுட்டு ஓடிப்போய் பார்த்தா அவர் கையில பாம்பு தீண்டிடுச்சு''

''ஐயையோ... அப்பறம் என்னாச்சு?'' கடந்த காலத்திற்கு நிகழ்காலப் பதற்றம் காட்டினாள்.

''மாட்டு வண்டியில தூக்கிப் போட்டுகிட்டு போயி மடப்புரத்துல வச்சிருந்து ஆளைக் காப்பாத்திக் கொண்டாந்தாங்க. அந்த ரெண்டு நாளும் எனக்கு உசிரே இல்ல''

ஆண்டுகள் பல கடந்தும் உணர்வு குறையவில்லை. அதை விவரிக்கும்போது பாட்டியின் கண்கள் பனித்தன. கொஞ்சம் நேரம் பெருத்த அமைதி. மண்வெட்டி கொத்துவதும் வறண்டுவதுமான சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. பாட்டியை இப்படியோர் உணர்ச்சிக் கோலத்தில் இனியா பார்த்ததே இல்லை.

''கொஞ்ச நஞ்சமா இருந்த ஆசை, எனக்காக பூப்பறிக்க போயி, உயிர பணயம் வச்சதால எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் அவரோடுதான் வாழணும்னு முடிவெடுத்துட்டேன். அதுக்கு நாங்க கொடுத்த விலை பெரிசு. ஊரே சாதி கலவரமாயிட்டு. எல்லாத்துக்கும் முகங்கொடுத்து என்னைக் கைப்பிடிச்சு வாழ்ந்து காட்டுனாரு உங்க தாத்தா. நீ சிறுபிள்ளைங்கிறதால இதை இன்னவரைக்கும் உனக்கு சொல்லாம இருந்தோம். சரி.. சரி.. நேரமாயிட்டு போய் தூங்கு...''

''இல்ல பாட்டி. நீங்களும் வந்தாதான் தூங்கப்போவேன்'' வம்படியாய்ப் பாட்டியைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனாள் இனியா. குளிர்காலம் என்பதால் மின்விசிறி போடாமல் படுத்தார்கள். கதவுகள் சாத்தப்பட்டிருந்தும் வாசலில் மண்வெட்டும் சத்தம் உள்ளே கேட்டுக் கொண்டேயிருந்தது. தன்னையறியாமல் உறங்கிப் போனாள் இனியா.

காலை ஏழு மணிக்குத்தான் எழுந்தாள்.

ஐந்து மணிக்கெல்லாம் விழித்துவிடும் தாத்தா கயிற்றுக் கட்டிலை விட்டு எழவில்லை. அசந்து தூங்கிக் கொண்டிருந்தார். கால்மாட்டில்

உட்கார்ந்தபடி வெற்றிலை மென்று கொண்டிருந்தார் பாட்டி.

''என்னா இன்னும் தாத்தா எழுந்திரிக்கல?'' என்று கேட்டவாறே வாசலைப் பார்த்த இனியாவிற்கு அதிர்ச்சி காத்திருந்தது. நேற்று குழாய் பதிந்த சுவடே இல்லாமல் சமப்படுத்தப்பட்டிருந்தது. நேற்று எதுவும் நடவாதது போலவே ஓர் அழகிய கோலத்தைத் தாங்கி நின்றது! கோலத்தின் நடுவில் பரங்கிப்பூ வேறு!


கூண்டுக்கிளிக்குள் விக்கிரமாதித்யனின் உயிர் இருப்பதுபோல கோலத்திற்குள் குடியிருக்கிறது இவர்கள் காதல். அது ஒவ்வொரு மார்கழியிலும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது என்று எண்ணியபடி கோலத்தைப் பார்த்தவாறு சிலிர்த்து நின்றாள். மேலிருந்து விழுந்த பனித்துளி ஒன்று பரங்கிப் பூவில் வழிந்து அழகு காட்டி நின்றது.

●

---

கவிதை

# யாசக தவம்



திட்டமிட்டு நெடுந்தூரம் பயணித்து
நீண்ட வரிசையில் கால்கடுக்க நின்று
உள்ளே சென்று மனம் உருகி வேண்டி
காணிக்கை செலுத்தி வைக்கப்படும்
வேண்டுதல்கள் நிறைவேற காலங்கள் ஆகிறது.

வேண்டுதல்கள் சில நேரம்
ஆளுநருக்கு அனுப்பப்படும் மசோதாக்கள் போல
பல ஆண்டுகள் பரிசீலனைக்கு
வைக்கப்படுகின்றன. நிறைவேறுமா நிறைவேறாதா
விடை தெரிவதில்லை...!

வழிபாட்டுத் தலங்களின்
வாசலில் அமர்ந்து கையேந்தி
குரல் எழுப்பித் தனது தேவையை
கேட்பவர்களுக்கு உண்டு இல்லையென்ற
பதில் உடனே கிடைத்து விடுகிறது.

நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட
வழிப்பாட்டுத்தலங்களில் குடியிருக்கும்
கடவுளர்கள் மாறுவதே இல்லை
அவர்களிடம் வைக்கப்படும் வேண்டுதல்கள்
ஆளுக்கேற்றவாறு வேறுபடுகிறது.

வாசலில் அமர்ந்து யாசகம் கேட்பவர்களின்
கடவுளர்கள் தினம் இனம்
மாறிக்கொண்டே இருக்கின்றனர்.
வேண்டுதல் மட்டும் மாறுவதே இல்லை
எப்பொழுதும் ஒரே வேண்டுதல்தான்.

பக்தன் கடவுளைத் தேடிச் செல்கின்றான்
யாசகன் அமர்ந்திருக்கும் இடம்தேடி
அவனின் கடவுள் இறங்கி வருகிறார்.

பக்தர்கள் வருகையைப்பற்றி
கடவுளர்கள் கவலைப்படுவதில்லை
பக்தர்கள் வருகை குறைந்தால்
யாசகன் விரதத்தை தொடங்குகிறான்.

யாசகம் பெறுபவர் கருவறைக்குள்
இருக்கும் கடவுளைநம்பி
ஒரு நாள்கூட வாசல்படி தாண்டி
நாடிச் சென்று வேண்டுதல்
வைத்ததை யாரும் பார்த்ததில்லை.
கண்கண்ட தெய்வத்தை கண்ணெதிரே
தினமும் பார்த்துவிடும்
இறுமாப்பில் காத்திருக்கிறான்
அடுத்த நாளும் கையில்
திருவோட்டுடன்...

**நாகை பாலா**

●

# பா.உஷாராணியின் இக்கணத்தின் மழை

## சா.தமிழ்ச்செல்வன்




ஆகாயம் கருக்கும்போதே மழையானது மனிதர்களின் கண்களில் விரியத் தொடங்குகிறது. இதற்கு முன்னர் எத்தனையோ தருணங்களில் எதிர்பாராத நேரங்களில் திடீரென கிடைத்திட்ட வெவ்வேறு அனுபவங்கள் கண்முன் நிழலாடுகின்றன. மழை எப்போதும் வரம்.

வருடம் என்பது நமக்கெல்லாம் இளங்கோடை, கோடை என்பதாக இருக்கும். வாடைக்காலமும் அப்படியே. ஆனாலும் நாம் சொட்ட சொட்ட அனுபவிக்கும் மழைக்காலம்தான் நம் நிலத்தைக் குளிர்விக்கும்; மனத்தை மகிழ்விக்கும்.

மழையை ரசிக்கவும், வாழ்த்தவும், வாழ்வியலோடு, வாஞ்சையோடு தொடர்புபடுத்தவும், நிகழ்வுகளின் நகர்வுகளோடு இணைக்கவும், பாதிப்புக்குள்ளோரைப் பார்த்து பதைக்கவும் இன்னும் எல்லோராலும் மழையை எப்படியெல்லாம் பார்க்க முடியாதோ, அத்தனை பார்வை கொண்டு மழையைத் தரிசிக்கிறார் இக்கவிதை நூலில் கவிஞர் பா.உஷாராணி. தான் கண்ட தரிசனங்களை வாசகர்களுக்கு கடத்துகின்ற வார்த்தை அற்புதத்தை பக்கம் நெடுக பொதிந்து வைத்துள்ளார்.

இவரது கவிதை நூலான இக்கணத்தின் மழையில் குடைபிடிக்க மனமின்றி ஈரம் சொட்ட முழுநூலையும் ஒரு நள்ளிரவுக்குள் வாசித்து நனைந்துவிட்டேன். தூறல் தொடங்கும்போது கூரையின் கீழ் ஒதுங்கி பின் விட்டதென பயணத்தை தொடங்கும்போது மீண்டும் கனமழையில் மாட்டி வீடு வந்தடைந்த அனுபவத்தைப் போல, நூல் முழுவதும் தூறலாகவும், சாரலாகவும் அங்கங்கே தெளித்து வைத்திருக்கிறார். அடைமழையில் நனைந்தபடி சூடாகப் பருகும் கோப்பைத் தேநீரைப் போன்ற பரவசம் பா.உஷாராணியின் கவிதை முழுதும் கொட்டிக் கிடக்கின்றது.

மழலை மழையானதைக் கண்டு மரம் வியக்கும் அற்புதப் பதிவு ‘மேகமானவள்’ என்ற கவிதை. மீதமிருந்த தண்ணீரை செடியின் மீது ஊற்றிச் செல்லும் பள்ளிச் சிறுமியின் காருண்யத்தை மரமானது கைகால் முளைத்த மேகமென்று பறவைகளிடம் பகிர்ந்துகொள்கிறதாம். இயற்கையின் உரையாடல்கள் கவிஞருக்கு கேட்டிருக்கின்றது என்றும் அவதானிக்க முடிகிறது.

இல்லாமையும், இயலாமையும் காணும் தருணங்களில் பரிதாபம் வருகிறது நமக்கு. ஆனால், கவிஞருக்கோ கண்ணில் நீர்த்துளியும் வானில் மழைத்துளியும் பூத்துவிடுகிறது. மேல்நோக்கி வண்டியைத் தள்ள முயற்சிக்கும் முதியவருக்கு அருகிலுள்ள தேநீர் கடையிலிருந்து ஒருவர் உதவுகிறார். மதங்களில் இல்லை கடவுள்... பின் எங்கிருக்கிறார்? உடையும், தோற்றமும் அழுக்கும் அழகற்று இருந்தாலும் ஒளிர்கின்ற மனிதத்திலேயே கடவுள் நிறைந்திருக்கிறார் என்கிறார் கவிஞர்.

மழையின் பெருங்கோவத்தை மனிதர்கள் உணரும் காலம் தற்போது. வான்மழை பூமியில் தங்க இயற்கை வடிவமைத்துள்ள பெருஞ்சிறு பள்ளங்களே நீர்நிலைகள். அவையும் தூர்க்கப்பட்டு

அடுக்ககங்களாகிவிட்டன. மக்கள் நெருக்கிப்பிடித்து வாழ்வதைபோல கட்டடங்களும் நெருக்கிப் பிடித்து வளர்ந்து நிற்கின்றன. மழை தன் இருப்பிடம் தேடும் நிகழ்வுதான் நகர்ப்புறங்கள் வெள்ளத்தில் மிதப்பது. இதனைக் கவிஞர், விளைநிலங்களில் வீடுகள்/இளைப்பாற மரங்களற்றுப் பறவைகள் என்றும் இயற்கை அழிப்பை இயற்கையே மீட்டெடுக்கும் முன்முயற்சியே மழை என்றும் கூறுகிறார். இயற்கை தனக்குத்தானே சமன்செய்து கொள்ளும் இயங்கியல்தானே அது.

நூற்றாண்டு கடந்த வேப்பமரமொன்று மழையில் சாய்ந்து விடுகிறது. மரம் சாய்ந்த கோபத்தில் மழையை சனியன் என்கிறார் கவிஞர். வேப்பமரத்தை ஆதிதெய்வம் என்றும் வழிபடுகிறார். வேம்புவை வணங்குவது நம் மரபு. அம்மரத்தில் வாழந்த பறவைகளும், அதன் நிழலில் கடைவிரித்து பிழைப்பு நடத்தியவர்களும், வெயிலுக்கு ஒதுங்கியவர்களும் விளையாடிய சிறியவர்களும் மரமின்றித் தவிக்கின்றனர். சாய்ந்த மரம் துண்டுகளாக்கப்பட்டு சரக்குந்தில் பயணம் செய்கிறது. வேம்பின் வெற்றிடம் பார்த்து தாய்மண் இரங்குகிறது. மீண்டும் ஒரு மரம் தழைக்க இயற்கையும் மனிதர்களின் அக்கறையும் ஒன்றுசேர காத்திருக்க வேண்டும் என்றும் கவலைப்படுகிறது.

இயற்கைச் சுரண்டலை, இன்றைய தலைமுறையின் முதியோர் புறக்கணிப்பை வருத்தத்தோடு ‘வாஞ்சை’ என்னும் கவிதையில் பதிவு செய்கிறார். இயற்கைக்கு எதிராகவும், மழை வருவதற்கு முகாந்திரமில்லா மரமழிப்பை மனிதன் செய்தாலும் மழை தன் பெருங்கருணையை நிலத்தின் மீது காட்டிக் கொண்டுதான் இருக்கிறது. மழையின் இக்கருணை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்ட பின்பும் பிள்ளைகள் மீது பாசம் வைத்திருக்கும் பெற்றோரின் வாஞ்சை போன்றது என்கிறார்.

வானிற்கும், மண்ணிற்குமான உறவாய் மழையை உருவகம் செய்கிறார். வான் சுரந்து வானுக்கே நீர் கொடுக்கும் இயற்கை விதியை கொடுக்கல் வாங்கல் என்கிறார். சிலவற்றை கடந்தும், பலவற்றை ரசித்தும் வியந்தும் அனுபவிக்கும் மழையனுபவத்தைத் தருகிறது கவிஞர் பா.உஷாராணியின் இக்கணத்தின் மழை. நூல் முழுவதும் மழைக்குள் வாசகனை இழுத்துச் சென்று தொப்பலாய் நனைய வைக்கின்றது. இக்கணத்தின் மழை எக்கணமும் நம் நினைவில் நிற்கும். மழையில் நனைய நனைய நீங்களும் வாசியுங்கள்.

●

## படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!

கதை சொல்லிகளிடமிருந்து கதைகள், கவிஞர்களிடமிருந்து கவிதைகள், கட்டுரையாளர் களிடமிருந்து கட்டுரைகள், பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் அறிவியல் சார்ந்த, கல்வி சார்ந்த செய்திகள் என வாசகர்களின் பங்கேற்பினை கண்ணாமூச்சி எதிர்பார்க்கிறது...

மன்னார்குடி பற்றிய நல்ல செய்திகள் பழைய நினைவுகள் மன்னார்குடி சார்ந்த உங்களின் கனவுகள் அனைத்தையும் எழுதி அனுப்புங்கள்.
தகுதியான படைப்பிற்கு களம் அமைத்துக் காத்திருக்கிறது கண்ணாமூச்சி!

படைப்புகள் அனுப்ப வாட்ஸ்அப் எண்: 9659335462
மின்னஞ்சல்: kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சிக்கு இதழ் வளர்ச்சி நிதி அனுப்ப கூகுள் பே
9659335462 விவரத்தை எங்கள் வாட்ஸ்அப் எண்ணிற்குத் தெரிவிக்கவும்.

கவிதை

# மரணத் திருவிழா

குளிரூட்டும் கண்ணாடிப் பேழையற்ற அந்நாளில்
திருவிழாக்கோலம் பூண்டன
வயோதிக மரணங்கள்.

மஞ்சள் நீராட்டி நாற்காலியிலோ விசைப்பலகையிலோ
கதாநாயகர்களாய்க்
கிடத்தப்பட்டிருப்பார்கள்
மூர்ச்சையானவர்கள்.

கீற்று மூங்கிலால்
வேயப்படும் பந்தலை
அலங்கரித்தது குருத்தோலை.

இரா முழுதும் துஞ்சாப் பெண்டுகளின்
கும்மியாடலையும் குழு ஒப்பாரியையும்
வாங்கும் ஒலிப்பெருக்கி
பக்கத்து ஊரையும்
தூங்கவிடாது...!

கீழவாசலிலிருந்து அழைத்துவரப்பட்ட
ஆடற்கலைஞர்களின் விரச உரையாடலும்
டப்பாங்குத்து ஆட்டமும்
கூடி நின்று பார்ப்போரையும்
குத்தாட்டம் போடவைக்கும்.

தெருமுனையிலிருந்து தாம்பூலமேந்திய
சம்மந்தி சீர்வரிசைகள் மேளதாளத்தோடே
கூட்டிவரப்படும்.

சவத்தைக் குளிப்பாட்டி
தாய்மாமன் கோடிபோர்த்தி
பல்லக்கில் ஏற்றியதும்

வழிநெடுக உதிர்மலர்தூவி
நாடி நரம்புகள் புடைக்க
கொட்டி முழங்கிச் சேர்க்கப்படும்
கொண்டாட்டத்திற்குரிய
மரணங்களை
குழிதோண்டி
புதைக்கின்றன
ஐம்பதிற்குள்ளேயே
போய்ச்சேர்வதைச் சொல்லும்
கண்ணீர் அஞ்சலிப் பதாகைகள்

**செழியரசு**

●

**துளிர்ப்பு**

நான்
சொற்களுக்குள்
பூக்கும் செடி.

ஞாபகங்கள்
என்
வேர்.

காலம்
என்
கிளைகள்

நீங்கள்
என்
காற்று

**சொற்காடு**

அவளுக்கு
அதிகம்
பேசத்தெரியவில்லை.

பேசாமல் பேசி
வாழும் கலையை
திருமணத்திற்குப்
பிறகுதான்
கற்றுக்கொண்டாள்.

வலிப்பு வந்து
இறந்த அன்று
யாரோ
நாக்கைப் பிடித்து
உள்ளே தள்ள
எத்தனித்தபோது
கண்டேன்
வளர்ந்து வளர்ந்து
கருகிக் கிடக்கிறது
மாபெரும் சொற்காடு.

## விதை

என்னிடம் ஒரு பழமிருந்தது.
அதையவர்கள்
பறித்துச் சுவைத்தார்கள்.

என்னிடமொரு பூவிருந்தது
அதையவர்கள்
பிடுங்கி எறிந்தார்கள்.

என்னிடமொரு கிளையிருந்தது
அதையவர்கள்
முறித்துப் போட்டார்கள்.

என்னிடமொரு விதையிருந்தது
நானதை
எடுத்து வந்திருக்கிறேன்.
இப்போது என்னிடம்
எல்லாமிருக்கிறது..!

**தீபிகா, ஈழம்**

கட்டுரை

# உப்புக்கருவாடும், உப்புக்கண்டமும் சங்கத்தமிழரின் உணவுப்பழக்க நீட்சியே

## சு.இராமசுப்பிரமணியன்



தமிழ் மண்ணில் மீனும். கருவாடும் எழைகளின் உணவாக காலம்காலமாக இருந்துவருகிறது. இன்று மீனின் விலை அதிகம் என்றபோதும் அது ஏழைகளின் உணவாக இருப்பதைப் பார்க்கமுடிகிறது. காரணம். குறைந்த அளவில் மீன் வாங்கிக் குழம்பு வைத்துவிட்டால் மொத்தக்குடும்பமும் சோறுண்டு பசியாறிவிடும். தனியே தொடுகறி என ஒன்று தேவையிருக்காது; மாத்திரமல்ல, சில குடும்பங்களில் ஆறு, குளம், ஓடைகளில் அவர்களே மீன்பிடித்துவருவதும் உண்டு. அதேவேளையில், பணக்காரர். ஏழை என்னும் பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டு, கருவாட்டுக்குழம்பு மிகப்பலரின் விருப்ப உணவாக உள்ளது என்பதும் உண்மை. நெல்லை, குமரி மாவட்டங்களில் உளுந்தஞ் சோறுக்குக் கருவாட்டுக்குழம்பு மிகச்சிறந்த இணைசேர்வாகும்.

பெரும்பாலும் கருவாடு என்று சொன்னால், அது கடல்மீனாகவே இருக்கிறது. நன்னீர் மீன்களை அப்படி கருவாடாக்க முடியாதா அல்லது அவ்வப்போது பிடித்துக்கொள்வதால் தேவையில்லையா என்பது தெரியவில்லை. நெல்லைமாவட்டம் பாபனாசம் மலைப்பகுதி என்பதால், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அங்கு கடல் மீனெல்லாம் வருவதில்லை. ஆனாலும் என் சிறுவயதுக் காலத்தில் பனையோலை நறுக்கில் பொதிந்து வைத்திருக்கும் மஞ்சப்பாரை என்னும் கருவாட்டைப் ' ' பெண்கள் வீட்டுவாசலுக்கு விற்பனைக்குக் கொண்டு வருவதைப் பார்த்திருக்கிறேன். அக்கருவாடு தூத்துக்குடியிலிருந்து வந்திருக்கவேண்டும். கருவாட்டைச்சுட்டுக் கஞ்சிகுடிப்பது பலருக்கும் விருப்பம். பிள்ளைபெற்ற பெண்களுக்கு பால் அதிகம் சுரப்பதற்காக மஞ்சப்பாரைக் கருவாடு உணவுடன் சேர்த்துக் கொடுப்பார்கள். சித்த மருந்துகளை பயன்படுத்தும்போது, கருவாடு மருந்தை முறித்துவிடும் என்றுசொல்லி பத்தியம் வைப்பதும் உண்டு.

கன்னியாகுமரி மாவட்டத்தில், அந்தக்காலம் முதல் இந்தக்காலம். வரையிலும் மீன் உணவு மிகவும் விருப்பமானது. அப்போதெல்லாம், பனிக்கட்டியில் வைத்துப் பதப்படுத்தப்படாமல், காலைவேளையிலேயே கடலிலிருந்து மீன்கள் நேரடியாக வீட்டு வாசலுக்கு விற்பனைக்கு வந்துவிடும்.

அயிரை, சுறா, நெய்மீன் (வஞ்சிரம்), வாளை, துப்புவாளை, நெத்திலி, வாவல், விளமீன், ஊழி என்று பலவகையான மீன்கள் கிடைத்தாலும் சாளைமீன்

அதிகம்பேரால் விரும்பப்படுகிறது. வாரத்தில் ஆறு நாட்கள் பச்சைமீன் ஏழாம் நாளான ஞாயிறு அன்று மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் ஓய்வு எடுப்பார்கள் அதனால், ஞாயிறு அன்று வீட்டுவாசலுக்குக் கருவாடு வந்துவிடும். இப்பழக்கம் இன்றும் தொடர்கிறது. நண்டு உண்ணும் வழக்கம் மன்னார்குடிக்கு வந்தபிறகே எங்களுக்கு அறிமுகமானது. அதுவும் மறைந்த தோழர் நெடுவாக்கோட்டை இராஜேந்திரன் வீட்டில் அவரது துணைவியார் மலர் டீச்சர் கைப்பக்குவத்தில் முதன்முதலாக நண்டு உண்டது மறக்கமுடியாதது.

**சங்க காலத்தில் மீன் உணவு:**

சங்க இலக்கியப் பாடல்களில் இருந்து அன்றைய தமிழர்களின் உணவுமுறையை அறிந்துகொள்ளமுடிகிறது. இறைச்சியைப் பெரிதும் விரும்பி உணவாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

காடை, கௌதாரி, பெடைக்கோழி, நீர்க்கோழி, குப்பைக்கோழி போன்ற புள்ளினங்களின் இறைச்சியையும், புற்றீசல்களையும், மான், ஆடு, கேளல் என்னும் காட்டுப்பன்றி, ‘எய்ம்மான் என்னும் முள்ளம்பன்றி, உடும்பு. முயல் போன்ற நிலத்தில் வாழும் விலங்குகளின் இறைச்சியையும், மீன், நண்டு, ஆமை ஆகிய நீர்வாழினங்களின் இறைச்சியையும் உணவாகக்கொண்டிருக்கின்றனர்.

**“மென் புலத்து வயல் உழவர்**
**வன் புலத்துப் பகடு விட்டுக்**
**குறு முயலின் குழைச் சூட்டொடு**
**நெடு வாளைப் பல் உவியல்**
**பழஞ் சோற்றுப் புக வருந்திப்**
**....................................”**

*(புறநானூறு. பாடல் 395)*

நெல் பயிரிடுவதற்காகப் பண்படுத்தப் பட்ட வயலில் ஏர் உழுதவர்கள், பண்படாத மேட்டுத் தரிசு நிலத்தில் தங்களது மாடுகளை மேய்ச்சலுக்குவிட்டுவிட்டு, சூடான முயற்கறியும், பலவிதமாக சமைக்கப்பட்ட வாளைமீனுடனும் பழைய சோற்றை விரும்பி உண்டு மகிழ்ந்திருககின்றனர். நான் கல்லூரிப் படிப்பு முடிந்து பணிக்குச் செல்லும் வரையிலும், இரண்டுவேளை பழைய சோறுதான். ஈராயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்துவந்த பழைய சோறு உண்ணும் வழக்கம், கடந்த ஐம்பது ஆண்டுகளில் இல்லாமல் ஆகிவிட்டது. பழையசோறு சாப்பிடுவது இழுக்கு என்றுகூட சிலர் எண்ணுவதும் உண்டு.

சமவெளிப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள், நன்னீரில் வசித்த மீன், ஆமை, நண்டு ஆகியவற்றை ஆறுகளிலும், குளங்களிலும் பிடித்து உணவாக பயன்படுத்தியிருக்கின்றனர்.

மருதநிலம் என்று சொல்லும்போது, மழைநீரால் நிறைந்திருக்கும் குளங்கள் இருந்திருக்கின்றன. கடுங்கோடையிலும் வற்றாத குளங்களாக அவை இருந்திருப்பது சிறப்பாகும்.

**இளையரு முதியருங் கிளையுடன் துவன்றிப்**
**புலவுணுளைப் பகழியுஞ் சிலையு மானச்**
**செவ்வரி கயலொடு பச்சிறாப் பிறளும்**
**மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்**
**கோடை நீடினும் குறைபட லறியாத்**
**தோடாழ் குளத்த கோடுகாத் திருக்கும்**
**கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பின்**
**.....................................................**
**தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவீர்.**

*(பெரும்பாணாற்றுப்படை 268–282)*

வலைஞர் குடியைச் சேர்ந்த இளைஞர்களும், முதியவர்களும் ஒன்றாகச் சேர்ந்து, கயல் மீனும், இறால் மீனும் துள்ளிக்கொண்டிருக்கும் கோடையிலும் வற்றாத குளங்களில் இறங்கி மீன் பிடித்து வருவார்கள். வலைஞர்குடிப் பெண்கள் அவர்களே உண்டாக்கிய மணம் மிகுந்த கள்ளினை வேகவைத்த பச்சைமீன்(தண்மீன்) துண்டுடன் தருவார்கள். உண்டு மகிழ்ந்து பயணக்களைப்பைப் போக்கிக்கொள்ளலாம் என்று பெரும்பாணன் கூறுகிறான்.

நெய்தல் நிலத்துக் கடற்கரை மக்கள், கடலுக்குச்சென்று வலைவீசி சிறுமீன்கள் முதல் சுறா போன்ற பெருமீன்கள் வரையிலும் பிடித்து வந்து உணவாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

**மீன்சோறு (மீன் பிரியாணி) :**

கூட்டாஞ்சோறு, உளுந்தஞ்சோறு, புளிச்சோறு, எலுமிச்சைச்சோறு.

தயிர்ச்சோறு, நெய்ச்சோறு பதநீர்ச்சோறு என்றெல்லாம் உண்டதுண்டு. ஆனால், இதுவரையிலும் எங்குமே கேள்விப்படாத மீன்சோறு என ஒன்றும் அன்றைய தமிழர்களின் உணவுப்பழக்கத்தில் இருந்திருக்கிறது என்பதை மலைபடுகடாம் வாசித்தபோதுதான் தெரிந்து வியந்தேன்.

*''முள்ளரித்து இயற்றிய வெள்ளரி*
*வெண்சோறு*
*வண்டுபடக் கமழும் தேம்பாய்க் கண்ணி*
*திண்தேர் நன்னர்க்கும் அயினி*
*சான்மெனக்*
*கண்டோர் மருளக் கடும்புடன் அருந்தி*
*எருதுஎறி கலமர் ஓதையொடு நல்யாழ்*
*மருதம் பண்ணி அசையினர் கழிமின்"*
*(மலைபடுகடாம். வரிகள் 465–470)*

முள் நீக்கிய மீனின் இறைச்சியைக் கல், மண் நீக்கிய அரிசியுடன் கலந்து பொங்கிய வெண்மை நிறமுடைய ஊன்சோற்றை உண்டு, மன்னன் நன்னனுக்கே இது பொருந்தும் என்னும் பெருமைகொண்டு சுற்றத்துடன் அமர்ந்து நெல்லேர் உழவர் பாடும் 'ஏர் மங்கலப் பாட்டுடன் மங்கல யாழ் இசை பொருந்தும் விதத்தில் மருதப்பண்ணை பாடி, மகிழ்ந்து தங்கிச்செல்வீர்' என்று ஆற்றுப்படுத்தும் கூத்தன் கூறுகிறான். ஏர் உழும்போது உழவர்கள் மங்கலப்பாட்டு பாடியிருக்கிறார்கள் என்னும் செய்தியும் இப்பாடலில் இருந்து நமக்குக் கிடைக்கிறது.

ஆட்டிறைச்சி பிரியாணி, மாட்டிறைச்சி பிரியாணி. கோழியிறைச்சி பிரியாணி என்றெல்லாம் இருக்கும்போது மீன் பிரியாணி ஏன் இல்லை என்னும் கேள்வி எனக்கு அவ்வப்போது எழும். அந்தக் கேள்விக்கு விடைசொல்வதுபோல் இந்த மலைபடுகடாம் வரிகள் அமைந்திருக்கின்றன.

**சங்க காலத்தில் கருவாடு:**

மீனை உலர்த்தி கருவாடாக மாற்றும் தொழில்நுட்பம் ஈராயிரம் ஆண்டுகள் பழமையானது என்கிறது. 45வது நற்றிணைப்பாடல்...

*''இவளே, கானல் நண்ணிய காமர்*
*சிறுகுடி*
*நீல்நிறப் பெருங் கடல் கலன உள்புக்கு*
*மீன் எறி பரதவர் மகளே; நீயே*
*நெடுங் கொடி நுடங்கும் நியம மூதூர்க்*
*கடுந் தேர்ச் செல்வன் காதல் மகனே.*
*நிணச் சுறா அறுத்த உணக்கல் வேண்டி*
*இனப் புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ?*
*புலவு நாறுதும் செல நின்றீமோ!*
*பெரு நீர் விளையுள் எம் சிறு நல்*
*வாழ்க்கை*
*நும்மொடு புரைவதோ அன்றே*
*எம்மனோரில் செம்மலும் உடைத்தே''*
*(நற்றிணை 45. நெய்தல்)*

''கடற்கரையில் சுறாமீனை அறுத்துத் துண்டங்களாக்கி உலர்த்திக்கொண்டும், அவற்றை பறவைகள் கவராமல் காவல்காத்துக்கொண்டும் இருக்கும் இளம்பெண்மீது, ஓர் இளைஞன் ஆசைப்படுகிறான். அவனிடம் தோழி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. 'பெருங்கடலில் வலைவீசி மீன் பிடிக்கும் பரதவரின் அன்புமகள் இவள். மீனோடும். கருவாடோடும் (நிணச் சுறா அறுத்த உணக்கல்) வாழ்கின்ற இவளது மேனியில் புலால் நாறும். நீயோ தேரோடும் வீதிகளையும், உயரமான கம்பங்களில் கொடிபறக்கும் மூதூரைச் சேர்ந்த செல்வந்தரின் மகன். உனக்கும், அவளுக்கும் ஒத்துவராது. அதனால் நீ நீங்கிப் போ என்று தோழி உரைக்கிறாள் கடைசி வரி சொல்லும் செய்தி வாழைப்பழத்தில் ஊசி இறக்குவதுபோல் (punch) உள்ளது. தலைவி திருமணம் செய்துகொள்வதற்கு, எம் மீனவர் குலத்திலும் உம்மைப்போன்ற செல்வம் உடைய இளைஞர்கள் பலர் உண்டு." என்று உரைக்கிறாள் தோழி.

*''பெருங் கடற் பரதவர் கொள் மீன்*
*உணங்கலின்*
*இருங் கழிக் கொண்ட இரவின்*
*வாடலொடு*
*நிலவு நிற வெண் மணல் புலவ, பலஉடன்''*
*(குறுந்தொகை, பாடல் 320,*
*வரிகள் 1,2,3)*

பெருங்கடலில் சென்று மீனவர்கள் பிடித்துவந்த பலவகை மீன்கள் நிலவின் ஒளியை ஒத்த கடற்கரையின் வெண்மணலில் உலர்த்தப்பட்டிருக்கின்றன. அந்தக் கடல்மீன்களுடன், உப்பங் கழிகளில் பிடித்துவந்த இறால் மீன்களும் உலர்த்தப்பட்டுக் காய்ந்து கொண்டிருப்பதால் அங்கு புலால் நாறும்.

கொள் மீன் உணங்கல்' என்பது கடல் மீன்களின் கருவாட்டையும், 'இரவின் வாடலொடு' என்பது உப்பங்கழி இரால் மீனின் கருவாட்டையும் குறிப்பன ஆகும்.

நெய்தல் நிலமான கடற்கரையில் வாழ்ந்த பரதவ மக்களின் முதன்மையான உணவே கடல் மீன்கள்தான். மீனவ மக்களின் வாழ்வாதாரமே மீன்கள். மீன்களை நீண்ட நாட்கள் கெட்டுப்போகாமல் பதப்படுத்தி வைத்திருக்கும் தொழில்நுட்பம் அப்போது இல்லை அதன்பொருட்டே மீன்களைத் துண்டுகளாக்கி, உப்பைத்தடவி, வெயிலில் காயவைத்து கருவாடாக்கிப் பயன்படுத்தியிருக்கின்றனர் என்று புரிந்துகொள்ளமுடிகிறது.

ஆனாலும் பாருங்கள். இன்று மீனைப்பதப்படுத்தும் தொழில்நுட்பம் வந்துவிட்ட பிறகும், மக்கள் கருவாட்டுக்குழம்புச் சுவையை மறக்காமல், ஒதுக்காமல் இருப்பது ஈராயிரம் ஆண்டு பழக்கத்தைத் தொடர்கிறார்கள் என்பதையே காட்டுகிறது. நான் பார்த்த அளவில், பாமரர் முதல் படித்தவர்கள் வரையிலும், அடித்தட்டு மக்கள் முதல் மேல்தட்டு மக்கள் வரையிலும் அனைவரும் கருவாட்டை விரும்பி உண்ணும் மக்களாக தஞ்சை மக்களே இருக்கிறார்கள்

**உப்புக்கண்டம் :**

மிளா என்பது மான்போல உருவம்கோண்ட பெரிய காட்டுவிலங்கு. அதன் கறி சற்றேறக்குறைய ஆட்டு இறைச்சி போலவே இருக்கும். பாபனாசம் மலையில் மிளாக்கள் நிறைய உண்டு. முன்பெல்லாம் மிளாக்கறி அவ்வப்போது எங்களுக்குக் கிடைக்கும். மாத்திரமல்ல, சில வீடுகளில் மிளாக்கறியை உப்புக்கண்டமாக்கி அவற்றை ஒரு கயிற்றில் கோர்த்துவைத்திருப்பார்கள். தேவைப்படும்போது சில துண்டுகளை எடுத்து சமைப்பார்கள். இன்று மிளாக்களை வேட்டையாடினால் சிறை உண்டு. இப்பழக்கம் தமிழகம் எங்கும் பரவலாகக் காணப்படுவதுதான்.

சங்க காலத்தில், கடற்கரை மக்கள் மீனை உலர்த்தி, கருவாடாகப் பயன் படுத்தியதுபோல, சமவெளியில் வாழ்ந்த மக்கள் இறைச்சித் துண்டங்களை, உப்புத்தடவி, வெயிலில் காய வைத்து. உப்புக் கண்டங்களாக்கிப் பயன்படுத்தினார்களா என்னும் கேள்வி என்னுள் இயல்பாகவே எழுந்தது. தேடிப் பார்த்ததில், விலங்குகளின் பச்சைக்கறியைக் காயவைத்துப் பயன்படுத்தியது தெரியவந்தது.

*"...................... நெடுங்கிணற்று*
*வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை*
*முரவுவாய்க் குழிசி முரியடுப்பேற்றி*
*வாரா தட்ட வாடூன் புழுக்கல்"*
*(பெரும்பாணாற்றுப்படை,*
*வரிகள் 97–100)*

ஆழமான கிணற்றில் கொஞ்சமாக ஊறுகின்ற உப்புநீரைக் கொண்டுவந்து, வாயுள்ள மண்பானையில் உலைநீராக ஊற்றி கழுவாத அரிசையைப் போட்டு சமைத்த சோற்றை, வேகவைக்கப்பட்ட உப்புக்கண்டத்துடன் தேக்கு இலையில் வைத்து எயிற்றியர் பெண்கள் உணவாகத் தருவர்.

இப்பாட்டில், 'வாடூன்' என்பது வெயிலில் காயவைக்கப்பட்ட உப்புக் கண்டங்களையே குறிக்கிறது. 'வாடூன் புழுக்கல்' என்றால், சுடப்பட்ட அல்லது வேகவைக்கப்பட்ட ஊன்துண்டம் என்று பொருள்கொள்ளலாம். இப்பாடலில் 'வாடூன் புழுக்கல்' என்று வருவதாலும், புழுக்கல் என்பது வேகவைத்தல் என்னும் பொருளில் வருவதாலும் 'வாடூன்' என்பது உப்புக்கண்டத்தையே குறிக்கிறது என்று கூறலாம்.

பொதுவாக, சங்க இலக்கியப்பாடல்களில், 'பச்சூன்' என்பது, ஆடு, மான், உடும்பு, கேளல் போன்றவற்றை அறுத்து அவற்றின் பச்சைஇறைச்சியைச் சமைத்துக் கொடுத்தல் என்று பொருளாகும். எனவே பெரும்பாணாற்றுப்படையில் வரும் 'வாடூன் புழுக்கல்' என்பது வேகவைக்கப்பட்ட உப்புக்கண்டங்களையே குறிக்கிறது என பொருள்கொள்ளலாம். 'பச்சூனை' வாடவைத்தால் 'வாடூன்',

*"வள்ளத் திடும்பால் உள்ளுறை தொட....*
*களவுப் புளியன்ன விளை ....*
*............. வாடூன் கொடுங்குறை*
*கொய்குரல் அரிசியொடுனெய் பெய்து*
*அட்டுத்.."*

*(புறநானூறு, பாடல் 328, வரிகள் 7,8,9)*

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் ஊரில் பெண்கள், பாலை உறை ஊற்றுவதற்காக 'உறைமோர்' வேண்டும் என்று அண்டை வீடுகளுக்குச் செல்வதை நான் பார்த்திருக்கிறேன். இருள்கவிந்து விளக்குவைத்துவிட்டால் உறைமோர் தரமாட்டார்கள். அது ஒருவகையான மூட நம்பிக்கை. இந்தப்பாட்டிலும், 'பால் உள்ளுறை' என்பது உறைமோரைக் குறிப்பதால், எங்கள் வீடுகளில் அன்று இருந்துவந்த வழக்கத்தை நினைவுக்குக் கொண்டுவந்தது. அதுவும் ஈராயிரம் ஆண்டு தொடர்ச்சியே.

**சமவெளிக்குவந்த கடல் மீன்கள்:**

பணம் கண்டுபிடிக்கப்படாத பண்டைய தமிழகத்தில். பண்டமாற்று முறையிலேயே மக்கள் அவரவருக்குத் தேவையானவற்றைக் கொடுத்தும், வாங்கியும் இருக்கின்றனர்.

குறிஞ்சி நிலத்தின் தேன், முல்லை மருத நிலத்தின் பால், தயிர், வெண்ணெய், நெய், மீந்த மாநிலலத்தின் வெண்ணெல். செந்நெல், நெய்தலின் மீன், கருவாடு உப்பு இவை அனைத்துமே பண்டமாற்றுமுறையில் மக்கள் கொடுத்தும் வாங்கியும் இருக்கின்றனர்.

இப்படிப்பட்ட பண்டமாற்று காரணமாகவே கடற்கரைவாழ் மக்கள் பிடித்துவரும் கடல் மீன்களும், கருவாடும், சமவெளிப்பகுதிக்கு வந்திருக்கவேண்டும். கடற்கரைவாழ் பரதவ மக்கள் உப்பு விளைவித்திருக்கின்றனர். உமணர்கள் உப்பைச் சமவெளி மக்களிடம் கொடுத்து, அதற்கு ஈடாக வெண்ணெல்லையும், செந்நெல்லையும் பெற்றிருக்கின்றனர். இதற்குச் சான்று உள்ளது.

***உப்பை மாறி வெண்ணெல் தரீஇய***
***உப்பு விளை கழனிச் சென்றனள்***
***அதனால்***

*(குறுந்தொகை. பாடல் 269. வரிகள் 3–6)*

கடற்கரை மக்களான பரதவர்கள்தான், ஆதியில் உப்பு விளைவித்திருக்கின்றனர். அந்த உப்பைக் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லையும், தங்களுக்குத் தேவையான மற்ற பொருட்களையும் பெற்றிருக்கின்றனர். பிற்காலத்தில். உப்பு விளைவித்தலும், உப்பு வணிகமும் பரதவர் கையைவிட்டு நீங்கியிருக்கிறது. அது முதற்கொண்டு அம்மக்கள் பொருளாதாரம் உள்ளிட்ட பல பின்னடைவைச் சந்தித்துவருகின்றனர் என்று கடற்கரைப் படைப்பாளிகள் பதிவு செய்கின்றனர்.

**உமணர்**

***வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்***
***கண நிரை கிளர்க்கும் நெடு***
***நெறிச் சகடம்''***

*(நற்றிணை பாடல் 4, வரிகள் 7,8,9)*

கடற்கரையிலிருந்து உப்பு உள்நாட்டிற்கு வந்ததுபோல, கடல்மீனும், கருவாடும் சமவெளி மக்களுக்குக் கிடைத் திருக்கவேண்டும் என்று நாம் யூகிக்கலாம்.

சங்க இலக்கியங்களை வாசிக்கவாசிக்க நம் அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் பல நடைமுறைகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்களிடம் புழக்கத்தில் இருந்து அடுத்தடுத்தத் தலைமுறைக்குக் கடத்தப்பட்டு நம்மிடம் வந்துசேர்ந்தவைதான் என்று உறுதியாக நம்பமுடிகிறது. ●

## அன்பான வேண்டுகோள்!

**கண்ணாமூச்சிக்கான ஆண்டுக்கட்டணம் சென்ற இதழோடு நிறைவடைந்தவர்கள் தாங்களாகவே ஆண்டுக் கட்டணத்தைப் புதிப்பித்து கண்ணாமூச்சி ஆட்டத்தில் பங்கேற்க அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.**

**- கண்ணாமூச்சி**

# பூ போட்ட கைலி

## கோ.அருணகிரி

"இத்தினி வருசம் கழிச்சி ஏம்ப்பா நீ வந்தே? ஓங்களத்தான் வரக்கூடாதுன்னு ஊர்க்கூட்டத்துல முடிவு பண்ணி பல வருசமாச்சே?"

"ஏதோ மறந்துருப்பிய... மன்னிச்சிருப்பியன்னு ஒரு நப்பாசையில வந்தோம். எத்தினி ஊரச் சுத்தினாலும் எங்களுக்கு இந்த சனங்க கொடுத்த மரியாதையும் பிரியமும் போட்ட சோறும் மறக்க முடியலங்கைய்யா?"

"அப்படி செஞ்ச ஊருக்குத்தா நீங்க நல்லா நடு எலயில நரகல வச்ச மாதிரி பண்ணிட்டுப் போனியளே காரியம்.."

"போனியன்னு என்ன சொல்லா திங்கைய்யா பெத்த புள்ள மாதிரி வச்சிருந்த எனக்கு, அந்தப் பய பண்ணிட்டுப் போன காரியத்துக்கு நா ஒங்கக்கிட்ட தல குனிஞ்சு நிக்கிறேன்.."

"ஊரு அவனையா நம்புச்சி, ஒன்ன தான நம்புச்சி.."

"இல்லேன்னு சொல்லல. நீங்க கேட்டாலும் சரி. கேக்காட்டியும் சரி, எரியுற வெளக்கு சாச்சியா சொல்றேன். அதுக்கப்புறம் சைக்கிள் சுத்துற பொழப்பையே நா விட்டுட்டேன். அதுக்கப்புறம் என்னென்னம்மோ வேல பாத்தேன். கூத்தாடி பொழச்ச எனக்கு எதுவும் சரியா வரல, எங்களுக்கு. எந்த ஊருல பொழப்ப உட்டேனோ, அந்த சனங்க மறுபடி சிரிச்சி கை தட்டி எங்கள ஏத்துக்கிட்டா மனசுல உறுத்தல் இல்லாம மத்த ஊருலப் போயி பொழப்ப பார்ப்போம்."ன்னு நெடுஞ்சா கிடையா சிங்கப்பூரார் கால்ல விழுந்தாங்க புருசன் பொண்டாட்டி ரெண்டு பேரும்.

**"திருச்செந்தூரின் கடலோரத்தில்**
**செந்தில்நாதன் அரசாங்கம்**
**தேடித்தேடி வருவோர்க்கெல்லாம்**
**தினமும் கூடும் தெய்வாம்சம்**
**அசுரரை வென்ற இடம் – அது**
**தேவரைக் காத்த இடம்..."**

ஏய் சைக்கிள் சுத்துறத ஆரம்பிக்கப் போறாங்கடின்னு பொண்டுவ புள்ளையோ எல்லாம் அரக்கப் பரக்கத் துணிமணிய மாத்திக்கிட்டு மூஞ்சியில பவுடர அடிச்சிக்கிட்டு கெளம்புனுச்சிவோ.

ஏய் இப்பதாண்டி மொத சாமிபாட்டு போட்டுருக்கான். இன்னும் ரெண்டு பாட்டு போட்டப்புறம் தாண்டி ஆரம்பிப்பானுவோ. வவுத்துக்கு ரெண்டு பருக்கைய அள்ளிப் போட்டுட்டு போடி, ஆகாலத்துல வரயில சோறு தண்ணிவுட்டுப் போயிடும். வெறும் வவுறாப் படுக்கிறாப்புல்ல ஆயிடும். பாட்டப் போட்டாத்தான் சனங்க வருமுன்னு போடுவானுவ.. மொல்ல போங்கடி"ன்னு வாசல்ல பாய விரிச்சி நெலா வெளிச்சத்துல படுத்திருந்த கெளவிவோ சொல்லிச்சி.

"ஆமாக்கா... மூனு முருகன் பாட்டு போட்டுத் தா நேற்றைக்கும் ஆரம்பிச்சானுவோன்னு ஜவகர் பயலும் சொல்லிக்கிட்டு வந்தான்."

ஜவகர் பய அப்பா ஒரு நாடக நடிகர். என்னவொன்னு வவுத்துப் பொழப்புக்காக வேசம் கட்டுறப்ப நெலம் நீச்சின்னு வசதியான மனுசனா வேசம்கட்டி நடிக்கிறதுல அவருக்கு ஒரு ஆர்வம். கோயில் திருவிழாவுல நாடகம் போடுறதுன்னா மனுசன் பயங்கர ஆர்வம் ஆயிடுவார். போன வருசம் வந்த தஞ்சாவூர் செட்டு சரியில்லப்பா. வலங்கைமான் கோயில் விடையாத்திக்கு ஒரு செட்டு வந்தானுவப்பா பிரமாதமா இருந்துச்சி. பொம்பளையோளும் செல மாதிரி இருந்தாளுவோ. நான் விசாரிக்கிறேன்

அந்த செட்ட கொண்டாந்துடுவோம். காசுபணம் கூட கொறச்சி ஆவுமப்பா. நா பொறுப்பெடுத்தேன்னா நா பாத்துக்க மாட்டேனா?"

'பொம்பளையோ செலமாதிரி இருப்பாளுவோன்னு நீ சொல்லயிலேயே நீ பாத்துருவேன்னு எங்களுக்குத் தெரியும்'ன்னு கூட்டத்துலேந்து ஒரு குசும்பு குரல் வரும்.

"கந்தனுக்குப் புத்தி கவட்டிக்குள்ளமாரி... நா ஒரு கலையாருவத்துல சொன்னேன்டா."

உண்மையாளுமே ஜவகர் அப்பா தெய்வமனி ஒரு ரசனையான ஆளுதான். தீவிர முருகபக்தரும் கூட. காலை எழுந்திருச்சதுமே அவர் வீட்டிலிருக்கும் அந்த செகப்புகலர் டேப்பு ரெக்காடுல முருகன் பாட்ட போட்டுத்தான் பல்லு வெளக்கவே ஆரம்பிப்பார். காலையில கேட்குறதவிட அவர் சாயந்தரம் முருகன் பாட்டு கேட்குறதுதான் வினோதமா இருக்கும். வயல்ல இருந்து வந்து நல்லா குளிப்பார். நெற்றி நெறைய பட்டையப் போடுவார். அவுச்சக் கல்லய ஒரு தட்டுல வச்சிக்குவார். மாங்காவ நீட்டவாக்குல வெட்டி, மொளகா பொடி ஒரு தூவுதூவி தட்டுல இருக்கும். அவருக்கு மட்டும் தெரிந்த ரகசிய எடத்துலேந்து அந்தக் காப்பிகொட்டநிற பாட்டுல எடுத்துக்கிட்டு வந்து வச்சிட்டு, சூலமங்கலம் சகோதரிகள் பாடுன முருகன் பாட்ட போடுவார்.

**"முருகனுக்கொருநாள் திருநாள்**
**அந்த முதல்வனின் வைபவ பெருநாள்**
**கடம்பனுக்கொருநாள் திருநாள் – நல்ல**
**கார்த்திகைப் பெருநாள் ஒரு நாள்.."**

அந்த இசைக்கு தகுந்தமாதிரி தலைய ஆட்டி ஆட்டி பாட்டில்ல தண்ணிய ஊத்திக் குடிக்க ஆரம்பிப்பார். ஒக்காந்து வேடிக்கைப் பார்க்கும் எங்களுக்கு மாங்காய்த் துண்டையும் கடலையையும் எடுத்துக் கொடுப்பார்.

"ஏய் இது ஒடம்பு தெம்பு மருந்துடா. எனக்குத் தெரிந்த மூலிகை வைத்தியர்க்கிட்ட சொல்லி வாங்குனது. மூலிகையில, மான் மூத்துரத்துல கலந்து செஞ்சதுடா. மான் மூத்திரம் கெடைக்கவே கிடைக்காது. அதுக்கு காட்டுல போயி ரொம்ப செரமப்பட்டுத் தான் எடுக்கனும்."

அப்படின்னு அவரு சொல்றத ரொம்ப ஆச்சர்யமா பார்த்தபடி ஒக்காந்திருப்போம், நானும் ஜவகர் பயலும்.

"அவரு பொண்டாட்டி பேரு அம்சவள்ளி. ஏய் அம்சவள்ளி அடுப்புல அனலு கெடந்தா ஒரே ஒரு கருவாட்டுத் துண்டு சுட்டுக் கொண்டாடி.."

"ம்... இது என்ன சாக்கனக் கடையா? வெளக்கு வச்ச நேரத்துல சின்னப் புள்ளையோள ஒக்கார வச்சிக்கிட்டு அந்த மூத்துரத்தக் குடிக்காட்டி என்ன?"

ஓ.. இவரு மான் மூத்துரம்னு சொன்னது உண்மைதான் போலருக்குன்னு நாங்களும் நெனச்சிக்குவோம். இப்ப மொதப்பாட்டு முடிஞ்சு அடுத்த முருகன் பாட்டு ஆரம்பிக்கும்.

**"ஆயிரம் கோடி நிலவுகள் பூத்த**
**முகமாயிது**
**அந்த ஆதிசிவன் பிள்ளை மேனி**
**முழுவதும் திருநீரு**
**ஆனவ சூரனைக் கீறி கிழித்த வேலோடு**
**அங்கே**
**அய்யன் அமர்ந்த இடம் திருச்செந்தூரு."**

குவார்ட்டரு கட்டிங்கா மாறி இருக்கும்.

"குடிக்கிறதுதா குடிக்கிற சும்மா குடிக்க வேண்டியது தானே.. அது என்ன சாமி பாட்ட வேற போட்டுக்குறே..? அந்த முருகனுக்கே இது அடுக்குமா.."

"இவ வேற மொணமொணன்னு ஒரு பாட்டு கூட கேட்க வுடமாட்டா..?"

"ம்.. எங்கையாவது சத்திரம் சாவடில போயி ஒக்காந்து கேட்க வேண்டியதுதானே..? இதுவென்ன வூடா? கூத்தாடி மடமா...?"

"ஏ மத்தவன் மாதிரி ரோட்டுல குடிச்சிட்டு விழுந்து வேட்டி அவுந்தா கெடக்குறேன். அப்படியாடி நா? மரியாதையா வூட்டுல உட்கார்ந்து குடிக்கிறேன்."

"ஆமா.. ரொம்ப மரியாதைக்காரன்தா போவியா.. பன்னிக்குட்டிக்கு பன்னீர்செல்வமுனு பேருவச்ச மாதிரி.."

"அவ கெடக்குறா.. நா பாடுறேன் கேளுங்கடா..!"

"சின்னக்குட்டி நாத்துனா சில்லறைய மாத்துனா

குன்னக்குடி போற வண்டியில குடும்பம் முழுசு ஏத்துனா..”

என்று அவரு பாடத் துவங்குவார். தலைய ஆட்டி ஆட்டிப் பாடையில வேர்வையில நனைஞ்ச அவரு தலைமுடி நெற்றியில் ஆடுவது அவ்வளவு அழகாய் இருக்கும்.

“உன்னுடைய வேலொன்று உறுதுணையாய் வருகிறது

கும்மிருட்டுப் பாதையில கோடாகத் தெரிகிறது

வருகிறது துணையாய் வருகிறது...

இப்ப கட்டிங் சிட்டிங்காயிருக்கும்.

“இந்த சாமிபாட்ட நிப்பாட்டிட்டுக் குடி, இல்ல வேலு வராது. வெளக்கமாறுதான் திண்ணைக்கு வரும். ஆமா சொல்லிப்புட்டேன்.”

“அம்சு கோவமாயிட்டா கொஞ்ச நேரம் பாட்ட நிப்பாட்டும்பார். செத்த நேரத்துக்கெல்லாம் குடிச்சிட்டுத்தான சாமி பாட்ட போடக்கூடாது. அதான் முடிச்சிட்டோமே...”ன்னு மறுபடியும் போடுவார்.

**“உன்னைத்தான் பாட வந்தேன்**
**வண்ணமயில் வேல்முருகா**
**உனைகண்டு மறந்து விட்டேன் என்ன**
**சொல்லி பாடுவதோ...**
**என்ன சொல்லிப் பாடுவதோ...”**

இந்தப் பாட்டு அம்சவள்ளி அத்தைக்குப் பிடித்துவிட்டது போலிருந்தது உள்ளே இருந்து எந்தவிதமான சத்தமும் வரவில்லை.

அறுப்பறுத்தக் கோடைகாலத்துல கோவில் திருவிழாவுல நாடகம் போடுறது, தெரு நடுவுல தெரக்கட்டி சினிமா போடுறது, சைக்கிள் சுத்துறதுன்னு ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சி வருசாவருசம் ஊரில் நடக்கும். புதுசா யாரையும் அனுமதிக்கிறது இல்லை. பல வருசமா ஒரே குழுவினர்தான் திரும்ப திரும்ப வந்து நடத்துவாவோ. பங்குனி மாசக் கடைசியில வந்து ஊர் முக்கியஸ்தரான சிங்கப்பூராரிடம் அனுமதி வாங்குவாவோ. அவங்க தாத்தா காலத்திலிருந்தே சிங்கப்பூருக்கு போக்குவரத்தா இருந்தவுங்க. பச்சை பெல்ட்டு. கோடாலி தைலம். பூப்போட்ட சிங்கப்பூர் கைலின்னு அவுங்க வீட்டுல மட்டும்தா பாக்க முடியும். வல பனியனும், பூப்போட்ட கைலியோடுதான் அவரு எப்பவும் இருப்பார்.

நாடகம் போடுறவங்க, சைக்கிள் சுத்த வர்றவுங்க எல்லாம் சிங்கப்பூராரிடம் தான் அனுமதி கேட்கனும்.

“எத்தனை நாளுப்பா இருப்பிய..?”

“சனங்க கூட்டம் வர்றதப் பொறுத்துய்யா. சைக்கிள் சுத்துறத பத்தி என்னதா செட்டுகட்டி பாட்டு போட்டாலும், சுத்துப்பட்டு சனங்களுக்கு தெரியவே நாலுநாளாயிடும். அந்தாண்ட ஆறுலேந்து பத்துநாள் வரைக்கும் இருப்போம் அய்யா.”

“ம்... சரி சரி... தெடல சுத்தம் பண்ணுங்க. அதுவரைக்கும் நம்ம வூட்டுல எல்லோரும் சாப்புடுங்க. டெண்ட்டு கட்டி சைக்கிள் சுத்த ஆரம்பிச்சதும், வீட்டுக்கு ஒரு நா பிரகாரம் எத்தனை நா இருக்கியளோ அதுவர சாப்பாடு கொடுக்கச் சொல்றேன்.”

“அது எங்களுக்கு தெரியாதைய்யா... வீட்டுக்கு ஒரு நாளுன்னு எங்களுக்கு சாப்பாடு கொடுத்திட்டு, கடைசி நா எல்லோருக்கும் துண்டு போர்த்தி, மால மரியாதப் பண்ணி சோளம், நெல்லு, வாழைத்தாரு, மரவள்ளிக் கெழங்குன்னு இந்த ஊரு சனம் காட்டுற பாசத்துக்கு அடிமையாயி தான்ய்யா பங்குனி பொறந்தா டாண்ணு உடியாரோம்.”

தெடல சுத்தம் பண்ணி சைக்கிள் சுத்துறது ஆரம்பிக்கிற முன்னாடி எல்லாருக்கிட்டேயும் பேசிக்கிட்டு இருப்பாங்க. ஆத்துல வந்து குளிப்பாங்க. அதுல சைக்கிள் சுத்தறதுல ஒருத்தரு செகப்பா, சுருட்ட முடியா அப்ப ஓகோன்னு ஓடுன ஒருதலை ராகம் நாயகன் மாதிரி இருப்பார்.

“எப்புடின்ன சைக்கிளுல எறங்காம சுத்துறீங்க?”

“அதுதானே எங்க பொழப்பு”

“சாப்பாடு, தண்ணியெல்லாம் சைக்கிளுல இருந்தே குடிப்பீங்க. பாத்துருக்கோம். ஒன்னுக்கு வெளிக்கு எல்லாம் எப்படி போவீங்க..”

“அது தொழில் ரகசியம்..”முன்னு சிரிப்பார்.

ஆத்துக்கு குளிக்க வருவார். ஆம்பளப் படித்துறை, பொம்பளப் படித்துறை ரெண்டும் பக்கத்துலேயே இருக்கும், என்பதால் தேங்காய்ப் பூத்துண்டு கட்டிக்கொண்டு குளிக்கும் அந்த அண்ணனை ஆவலுடன் பார்ப்பாக செறுவயசு பொண்ணுங்க. அமைதிக்குப் பெயர்தான் சாந்தி பாடலை மாத்திப் பாடுவார்.

***அமைதிக்குப் பெயர்தான் வசந்தி – உன்***
***அழகினில் ஏதடி வசந்தி***
***நீ போட்ட சோப்பை நான் போட்டு***
***குளிப்பேன் வசந்தி***
***நீ குளித்த ஆற்றில் நான் குளிக்க***
***வந்தேன் வசந்தி.***

"ஏய் எம்பேரு எப்புடிடி அவருக்குத் தெரியும்.."

"நாந்தான் சொன்னேன்.."

"ம்க்கும்.. ஒன்ன யாரு சொல்லச் சொன்னது?"

வெக்கமும் பெருமையும் தண்ணீரும் சொட்ட சொட்ட துவைத்த துணிகளைத் தோளில் அள்ளிப்போட்டுக் கொண்டு ஓடியது வசந்தியக்கா.

ஏய்.. மூணு சாமிப்பாட்டு முடிஞ்சி சினிமாப் பாட்டு ஆரம்பிச்சிட்டாங்கடா, ஆளுன்னு.. நா, ஜவகர், வசந்தியக்கா இன்னும் நாலஞ்சி தெரு சனங்க எல்லாம் ஓட்டமும் நடையுமா தெடலுக்குப் போனோம். ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதில்தான் சுகம்.. சுகம்.. என்று சௌந்தரராசன் பாடிக் கொண்டிருந்தார். தனியா ஒரு கயறு... இடுப்பு ஒசரத்துக்கு ஒரு கயறு வட்டமா கட்டியிருக்கும். யாரும் சட்டுன்னு உள்ளே புகுந்து போகாதபடி. மையத்துல ஒரு கம்பு ஊணி வாழைத்தண்டு லைட்டுன்னு சொல்ற ட்யூப் லைட் கட்டி இருக்கும். பச்சை, மஞ்சள்னு அதுல சுத்துன ஜிகினா தாள்கள் வெள்ள வெளிச்சத்த கலர் கலரா மாத்தி இருந்தது, ஏதோ எங்களால முடிஞ்சது என்பதுபோல. புஸ்... புஸ்னு மூச்சுவிட்டபடி ஈசல் பூச்சிகளுடன் பேசிக்கொண்டிருந்தது ரெண்டு, மூன்று பெட்ரோமாஸ் வெளிச்சங்கள்.

சிங்கப்பூரார், தெய்வமணி சித்தப்பா மாதிரி ஊர் முக்கியஸ்தர்கள் மட்டும் பெஞ்சிலேயோ, நாற்காலியிலோ குந்தி இருந்தாங்க. சில வயசான சனங்க கீழேயே குந்திக்கிட்டு மறைக்குதுன்னு முனுமுனுத்திச்சிவோ. கயித்துக்கு அந்தாண்ட எல்லோரும் ஒரேயடியா குந்துக்கப்பா.. ஒக்காந்து இருக்கறதுவோளுக்கு மறைக்குல்லனு, அரிக்கிற பொறங்கால குனிஞ்சி சொறியாம, இன்னொரு மண்ணு நறநறப்புள்ள உள்ளங்காலால ஒணக்கைய தேச்சபடி சவுண்டு வுட்டார் சிங்கப்பூராரு.

பாம்பை முழுங்கிவிட்டு திரும்ப வாய்க்குள் கைவிட்டு முழு பாம்பையும் எடுப்பது, மேலும், பத்துரூபாய் நோட்டை மண்மேட்டில் சொருகி வைத்து சைக்கிளில் அமர்ந்தபடியே உடம்பை வளைத்து கண் இமைகளால் எடுத்துவிட்டு சைக்கிளை நிமிர்த்தி அவர் சீட்டில் ஸ்டைலாக உட்காருவதை ஆச்சர்யத்துடன் பார்த்து கூட்டம் ஆர்ப்பரித்துக் கைத்தட்டும். இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சாகசம் செய்து காட்டுவார்.

சைக்கிள் சுற்றுவது முடிகிற கடைசி ரெண்டுநாள்தான் உச்சகட்ட சாகசம், நடக்கும். ஒரு நாற்பது அடி உயரத்திற்கு பெஞ்சை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்குவார்கள். உச்சியின் மீதுள்ள பெஞ்சின் மீது ரெண்டு சோடா பாட்டிலை வைத்து அந்தப் பாட்டிலின் மீது சைக்கிளை வைத்து அந்த சைக்கிள் மீது நின்று சாகசம் செய்வார். எந்தப் பிடிமானமும் இன்றி சைக்கிள் மீது நின்று கூட்டத்தினரைப் பார்த்து குனிந்து கும்பிடும்போது கீழே அமர்ந்திருக்கும் நமக்கு வயிற்றில் திக்... திக்... என்று இருக்கும். கூட்டத்தில் ஒரு ஊசி விழுந்தால் கூட கேட்கும் அளவு கூட்டம் அமைதியிலும் ஆச்சர்யத்திலும் உறைந்து போய் இருக்கையில்,

***"உள்ளம் உருகுதையா***
***உன்னடி காண்கையிலே***
***அள்ளி அணைத்திடவே***
***எனக்கோர் ஆசை பெருகுதைய்யா..!"***

என்ற முருகன் பாடல் கூட்டத்தினரின் இறுக்கத்தையும் உருக்கத்தையும் அதிகப்படுத்தும்.

இன்னைக்கு சைக்கிள் சுத்துறது கடைசி நா. மரணக்குழியில் இறங்குவது.

சிங்கப்பூர்ல இருந்து கொண்டு வந்த பூப்போட்ட கைலி எங்கே? பீரோவுலதா இருந்துச்சி பாருங்க... அவசரத்துல தேடுனா கிடைக்காது. நீங்க போங்க நா பார்த்து வைக்கிறேன்னுச்சி சிங்கப்பூரார் சம்சாரம்.

ஒரு பொருள் வச்ச எடத்துல இருக்காது இந்த வூட்டுல... எரிச்ச மயிறாவுதுன்னு முனகியபடியே மரணக்குழி பார்க்க கிளம்புனாரு சிங்கப்பூராரு.

ரெண்டாளு ஒசரத்துக்கு பள்ளம் வெட்டி சைக்கிள் சுத்துன அண்ணன் உள்ளே எறங்குவார். பின்பு உள்ளே முழுவதும் மண்ணைப் போட்டு மூடி விடுவார்கள். ரெண்டு மணி நேரத்துக்கு மேல் அவர் உள்ளே இருப்பார், அந்த நேரத்தில் மட்டும்,

"தரைமேல் பிறக்க வைத்தான் – எங்களைத்

தண்ணீரில் மிதக்க வைத்தான்..."

என்பது போன்ற சோகப்பாடல்கள் ஒலிக்கும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்பு யாரு பெத்த பிள்ளையோ ஏதும் ஒன்னு கெடக்க ஒன்னு ஆயிடப் போவுது தோண்டி எடுங்கன்னு கூட்டம் பதட்டப்படத் தொடங்கும். இதற்காகக் காத்திருந்தது போல் தோண்டி எடுத்து தண்ணிக் கொடுத்து இயல்பு நிலைக்கு அவரும் வருவார்.

மற்ற நாளை விட அன்றைக்கு கூட்டம் அதிகமாய் இருக்கும். வசூலும் கடுசாய் இருக்கும். மரணக்குழியில் இருந்து மேலே வந்த அந்த அண்ணன் துணி மாத்திக் கொண்டு வந்தார்.

பார்த்துக்கொண்டிருந்த சிங்கப்பூராருக்குத் தூக்கிவாரிப் போட்டது.

வீட்டுல அவர் தேடுன காப்பிக்கொட்டை நிற பூப்போட்ட கைலி மாதிரியே இருந்தது அவர் கட்டியிருந்தக் கைலியும். இத வூட்டுல வந்து சம்சாரத்துக்கிட்ட சொன்னார்.

"அட நீங்க ஒன்னு... ஒலகத்துல அதுமாதிரி ஒரு கைலிதான் இருக்கா? நீங்க அதே நெனப்பா போயி குந்தியிருப்பீங்க. இருட்டுல அப்படி தெரிஞ்சி இருக்கும்."

சம்சாரம் பேச்சுல சமாதானம் ஆனார் சிங்கப்பூரார். சைக்கிள் சுத்துற சனங்களும் ஊரைக் காலிப் பண்ணிப் போனார்கள். அந்த பூப்போட்ட கைலி காணாமல் போன மாதிரியே, சிங்கப்பூராரின் கடைக் குட்டிப் பொண்ணு வசந்தியும் காணாமல் போனிச்சி.

●

---

கவிதை

# வெறிச்சோடிய வேலங்குடி

இப்போதெல்லாம்
அடைமழையை அறிவிக்கும்
தவளைக் குரல்களைப் போல
முதல்நாளே வந்துவிடும்
பொங்கல் வாசத்தை
என் மூக்கு
நுகர மறுக்கிறது.

கருப்பஞ்சக்கையைக்
கண்டாலே கசக்கிறது.

பனிவிழும் ஓசை கேட்கும்
வைகறையில்
ஊர்வம்பு பேசியவாறே
கோலத்திற்கு
வண்ணம் தீட்டும் உறவுகள்
ஊருக்கு வருவதில்லை!

தாவணி உடுத்தி
பொங்கல் கிண்டிய
அக்காக்கள் எல்லாம்
கணவன் வீட்டில்
இருந்தபடி
முடித்துக்கொண்டார்கள்
''ஹேப்பி பொங்கல்'
குறுஞ்செய்தி அனுப்பியதோடு...

ஓடி விளையாட
உடனிருந்தவர்கள்
படிப்புக்காக
வெளியூரிலிருக்க
வெறிச்சோடி கிடக்கிறது
வேலங்குடி.

வீட்டு வாசலில்
சொப்பு வைத்து
விளையாடும்
வாண்டுகளிடம்
'அப்போதெல்லாம்
நாங்கள்...'
என்று சொல்லித்
தேற்றிக்கொள்கிறேன் நான்.

**தமிழ் நறுமுகை**

# அம்ரா பக்கங்கள்

திருச்சி ஏப்ரல் மாதம் 13 ஆம் தேதி. 1910 ஆம் ஆண்டு. காந்தியடிகள் அறைகூவலை ஏற்று தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து நூற்றுக்கு மேலானவர்கள் திரண்டனர்.

இராஜாஜி தலைமை எற்க உப்பு சத்தியாகிரகம் செய்ய புறப்பட்டது அந்தக் குழு. சென்றடைய வேண்டிய இடம் வேதாரண்யம்!

அவர்களுக்கு வழி எங்கும் தங்குமிடம் உட்பட எல்லா ஏற்பாடுகளையும் கருத்துடன் கவனித்துக்கொண்டவர் வேதரத்தினம் பிள்ளை. அவருடைய நிர்வாகத்திறனை மெச்சி காந்திய நண்பர்கள் அவருக்கு அன்புடன் சர்தார் என்னும் பட்டத்தைப் பின்னர் அளித்தனர். சர்தார் என்றால் தலைவர் என்று பொருள்!

சந்தியாகிரகிகளின் ஊர்வலத்தைக் குலைக்கவேண்டும் என்கிற நோக்கில் தஞ் சாவூர் மாவட்ட நீதிபதியாகப் பணிபுரிந்த ஜே.ஏ.தார்ன் என்னும் ஆங்கிலேய அதிகாரி, அவர்களுக்கு உணவு கொடுப்போருக்கும். தங்க வைப்போருக்கும் கடும் தண்டனை வழங்கப்படும் என அறிவித்தார்.

தடையை மீறி உணவளித்ததற்காக திருத்துறைப்பூண்டி நகருக்கருகில் இருந்த தென்பாதி நாயுடு சத்திரத்தின் தர்மகர்த்தா கைது செய்யப்பட்டார். வேதரத்தினம் பிள்ளை ஊர்மக்களின் உதவியை நாடினார் தண்டனைக்கு அஞ்சினாலும் சத்தியாகிரகத் தொண்டர்கள் மீது பொதுமக்கள் பரிவு கொண்டிருந்தனர். வழியில் மரக்கிளைகளில் யாருமறியாதபடி சாப்பாட்டுப்பைகளைத் தொங்கவைத்து தொண்டர்களே எடுத்து உண்ணும்படி செய்யத் தொடங்கினர்.

இதைக் கேள்விப்பட்ட அவ்வூரைச் சேர்ந்த ஆங்கிலேய நீதிபதி 90 வயது நிரம்பிய வேதரத்தினம் பிள்ளையின் தந்தை அப்பாக்குட்டிப் பிள்ளையிடம் நேரில் வந்து உங்க பிள்ளையை இப்படி எல்லாம் செய்யச் சொல்லாதீங்க ஒதுங்கிப் போகச் சொல்லுங்க இல்லாவிட்டால் சொத்துக்கள் ஜப்தி செய்யப்படுவதோடு அவர் கைதும் செய்யப்படுவார் என்று தெரிவித்தார். அதற்கு அவர் சொன்னார் ‘என் மகன் வேதரத்தினம் உங்களிடம் மண்டியிட்டு மன்னிப்பு கேட்பதிலும் அவன் சிறைக்குச் செல்வதையே நான் விரும்புவேன்”

எல்லாத் தடைகளையும் கடந்து 23.04.1930 அன்று வேதாரண்யத்தை அடைந்தது சந்தியாக்கிரகக் குழு அவர்களுக்கு யாரும் இடமளிக்கக்கூடாது என்கிற தடை இருந்ததால் காவியாகக் கிடந்த ஒரு மனையை வாடகைக்கு எடுத்து அவசரமாக கீற்றுக்கொட்டகை போட்டு தங்குவதற்கான வசதியைச் செய்து கொடுத்தார் வேதரத்தினம். ஒரு வாரகாலம் அங்கேயே தங்கிய தொண்டர்கள் சுதந்திரப்பிரச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டார்கள்.

20.04.1910 அன்று அதிகாலையில் ராஜாஜியும் மூன்று தொண்டர்களும் மட்டும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று அகஸ்தியம்பள்ளி என்னுமிடத்தில் உப்பெடுத்து கைதானார்கள். இப்படி ஒவ்வொரு நாளும் மூவராகவோ, நால்வராகவோ சென்று உப்பெடுத்து தொடர்ந்து கைதானார்கள். வேதரத்தினத்துக்குச் சொந்தமான உப்பளங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

வேதாரண்யத்தில் இவர் குடும்பத்துக்கு மிகவும் வேண்டிய நாவிதர் ஒருவர் இருந்தார். பெயர் வைரப்பன். காந்தியிடமும் வேதரத்தினம் பிள்ளையிடமும் அபார நேசமுடையவர். போலீஸ்காரர்கள் முதலாளி வேதரத்தினத்தை விலங்கிட்டுத் தெருவோடு இழுத்துச் சென்ற காட்சியைக்

கண்டு இவர் பதறி ஆத்திரம் கொண்டு இனி எந்தப் போலீஸ்காரருக்கும் சவரம் செய்வதில்லை என்று சபதம் எடுத்துக் கொண்டார்.

உப்பு போராட்டத்திற்காக வெளியூர் போலீஸ் பலர் அங்கு வந்திருந்ததால் யார் என்று தெரியாமல் சாதாரண உடையில் வந்திருந்த ஒரு போலீஸ்காரருக்கு இவர் முகச் சவரம் செய்யத் தொடங்கி முகத்தில் சோப்புப் போட்டு பாதி சவரம் முடித்துவிட்ட நிலையில் அவர் போலீஸ் என்பது தெரியவந்ததும், வேலையை அப்படியே போட்டுவிட்டு இனி நம்மால் செய்ய முடியாது என்று எழுந்துவிட்டார்.

போலீஸ்காரர் விடவில்லை. இவரை இழுத்துக் கொண்டு போய் நீதிபதியிடம் நிறுத்தி நியாயம் கேட்டார். நீதிபதி வைரப்பனிடம் ''போய் இவருக்கு மீதி சவரத்தையும் செய்து முடித்துவிட்டுப் போ'' என்றார். வைரப்பன், அவர் மேஜை முன்பு சென்று "ஐயா அது நம்மால முடியாதுங்கள். ஐயா வேணும்னா செஞ்சு விட்டுடுங்க'' என்று சொல்லிக் கொண்டே சவரப்பெட்டியை அவர் மேஜை மீது வைத்துவிட்டார்.

கேட்க வேண்டுமா. அவருக்கு வந்த கோபத்தை? ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதித்தார். அதோடு போயிற்றா இது? இல்லை இந்த நிகழ்ச்சி பற்றி சாத்தான்குளம் என்ற ஊரில் நடந்த பொதுக்கூட்டத்தில் சர்தார் வேதரத்தினம் சொல்லிய போது கூட்டத்தில் ஒரே சிரிப்பு கும்மாளம், எகத்தாளம். கைதட்டி ஆரவாரம் செய்தனர். மக்கள் அப்போது தன் காரில் அந்தப் பக்கம் வந்த அவ்வூர் நீதிபதிக்கு வந்ததே கோபம். மறுநாள் பிள்ளையின் இந்தப் பேச்சுக்காக ஆறு மாத சிறை தண்டனை கொடுத்தார் ஒரு நிகழ்ச்சிக்கு இரண்டு இடத்தில் தண்டனை என்ன கோமாளித்தனம்!

பெரும் செல்வந்தரான வேதரத்தினம் சிறையில் அடைக்கப்பட்டார். சொத்துக்கள் பறிமுதலாயின. அவர் குடும்பம் சோற்றுக்கும் சிரமப்பட வேண்டிய நிலை. தங்கக் கிண்ணத்தில் பால் சோறு சாப்பிட்ட குழந்தை பழ சோற்றுக்கு அழுதது கண்டு அக்கம்பக்கத்தார் கண்ணீர் சிந்தினர். அவர் மனைவி பதினைந்து மைலில் இருந்த அவரது ஊருக்குச் செல்ல பஸ்சுக்குக் காசில்லாமல் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நடந்து சென்ற கொடுமையும் நடந்தது.

வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக நிகழ்ச்சியின் வழியாக தமிழகமெங்கும் வேதரத்தினத்தின் புகழ் பரவியது. நேரில் சென்று காந்தியடிகளைப் பார்த்தார். இராட்டையில் நூல்நூற்பதை ஒவ்வொரு மனிதரும் தம் கடமையாகக் கருதுங்கள். கதராடைகள் அணியுங்கள் என்று அவர் கூறியதை கேட்ட வேதரத்தினம் பிள்ளை ஊருக்குத் திரும்பியபோது கதர் வேட்டியும் கதர்ச்சட்டையும் அணிந்த புதிய மனிதராக வந்தார். தன் மனைவிக்கும் கதர்ப்புடவைகள் வாங்கிவந்து அணிந்துகொள்ளும்படி செய்தார்.

1621ஆம் ஆண்டில் காந்தியடிகள் மதுரைக்கு வந்திருந்தார். நகருக்கு வரும் வழியில் உழவர்களைக் கண்ட காந்தி அன்றிரவே இனிமேல் மிக எளிமையான முறையில் உழவர்களைப்போலவே உடுத்தவேண்டும் என முடிவெடுத்தார். மறுநாள் காலையில் சட்டையையும் தலைப்பாகையையும் களைந்துவிட்டு இடுப்பு வேட்டியோடும், மேலே போர்த்திய துண்டோடும் மக்கள் முன்னிலையில் தோன்றி உரையாற்றினார். தன் ஆடை மாற்றத்துக்கான காரணத்தை அவர் அந்த மேடையிலேயே அறிவித்தார். அந்தச் செய்தி பத்திரிகைகளில் மறுநாளே வெளியாகி மக்களிடையே பரவியது அதை இளைஞரான வேதரத்தினமும் படித்தார். அன்றுமுதல் அவரும் சட்டை அணிவதைக் துறந்து உடலை மறைக்கத் தேவையான ஒரு கதர்த்துண்டையும் வேட்டியையும் மட்டுமே அணியத் தொடங்கினார். காந்தியைப்போலவே வாழ்நாள் முழுதும் அந்தக் கோலத்திலேயே வாழ்ந்தார்.

பழைய குளங்களை ஆழப்படுத்துதல், சாலைகளைச் சரிசெய்தல், கள்ளுண்ணாமையைப் பற்றியும் சுகாதாரத்தின் அவசியத்தைப் பற்றியும் எடுத்துரைத்தல், தாழ்த்தப்பட்டோர்

மேம்பாடு என எல்லாவிதமான செயல்களிலும் வேதரத்தினம் ஈடுபட்டு உழைத்தார்.

ஒருமுறை திருத்துறைப்பூண்டியில் வேதரத்தினமே கள்ளுக்கடையின் முன்னால் நின்று ஒருவார காலமாக தொடர்ந்து கள்ளுண்ண வேண்டாம் என மக்களிடம் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். அதைக்கண்டு வெகுண்டெழுந்த கள்ளுக்கடைக்காரர் கள்ளுப்பானையை எடுத்து வந்து யாரும் எதிர்பாராத தருணத்தில் வேதரத்தினத்தின் தலையில் போட்டு உடைத்தார். மேலும் வாய் நிறைய அடக்கி வைத்திருந்த வெற்றிலை பாக்கு எச்சிலை அவர் மீது ஆத்திரத்துடன் உமிழ்ந்தார்.

அனைத்து அவமரியாதைகளையும் புன்னகையோடு ஏற்றுக்கொண்ட வேதரத்தினம் விற்கவேண்டாம் என மீண்டும் மீண்டும் மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.

தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டுக்காக வேதரத்தினம் நிர்மாண ஊழியர் முகாம்களை ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஊரிலும் நடத்தி வந்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பது அல்லது நூறு ஊழியர்களோடு காலை நாலரை மணிக்கெல்லாம் புறப்பட்டு சேரிப்பகுதிகளுக்குச் செல்வார்.

முதலில் அங்கங்கே சிதறிக்கிடக்கும் குப்பைக்கூளங்களை அகற்றி தொலைவான இடத்துக்குக் கொண்டு சென்று குழி வெட்டிப் போட்டு மூடப்படும். பிறகு சாக்கடைகளைத் திருத்தி, வழிந்து பரவாதபடி செய்யப்படும். அனைவரையும் ஒன்றுகூட்டி தூய்மை பற்றியும் கல்வியின் அவசியம் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்படும். பிறகு அங்கேயே யாரேனும் ஒருவருடைய வீட்டில் சமைக்கச் செய்து அனைவரும் ஒன்றிணைந்து உணவு உண்பார்கள்.

வேதரத்தினம் தன் தனிப்பட்ட முயற்சியின் விளைவாக திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் ஏராளமான ஊர்களில் நிலச்சுவான்தார்களிடமிருந்து பல மனைகளையும் நிலங்களையும் அவற்றை தாழ்த்தப்பட்டோர்களுக்கு வழங்கினார். ஒருமுறை கடும்புயலில் சிக்கி வேதாரணயத்துக்கு அருகிலிருந்த வடகட்டளை என்னும் ஊரில் எண்ணற்ற தாழ்த்தப்பட்டோர் வீடுவாசல்களை இழந்து தவித்தார்கள். உடனே வேதரத்தினம் சென்னையில் உள்ள இராமகிருஷ்ண மடத்துடன் தொடர்புகொண்டு அவர்களுடைய உதவியால் இருநூறு வீடுகள் கொண்ட இராமகிருஷ்ணாபுரம் என்னும் குடியிருப்பையே உருவாக்கி அளிக்கும்படி செய்தார்.

வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் வேதரத்தினத்துடன் கலந்து கொண்டவர்களில் ஒருவர் தலையூரைச் சேர்ந்த நாராயணசாமி ஐயர். வேதரத் தினத்தைப்போலவே காந்தியடிகள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறைக்குச் சென்றவர். தாழ்த்தப்பட்டோருக்கான சேவையே தலையாய சேவை என்னும் காந்தியடிகளின் சொற்களை ஏற்றுத் தனக்குச் சொந்தமாக இருந்த ஒவ்வொரு நிலத்தையும் விற்று தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டுக்காகச் செலவு செய்தார். இறுதியில் அவர் குடியிருந்த வீடு ஒன்றுதான் எஞ்சியது. அதையும் விற்று அந்தப் பணத்தையும் தாழ்த்தப்பட்டோர் சேவை நிதிக்கு அளித்தார்.

பொருளனைத்தையும் இழந்ததால் வயது முதிர்ந்த காலத்தில் கடுமையான வறுமையில் வாடினார். அவருக்கு கமலா, சாரதா என இரு பெண்கள் இருந்தனர். 1945ஆம் ஆண்டில் ஒருநாள் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து வேதரத்தினத்தைச் சந்தித்தார். தம் இறுதிக்காலம் நெருங்கி விட்டதாகவும் தம் இரு மகள்களையும் அவரிடம் ஒப்படைப்பதாகவும் இனி அவரே அவர்களுக்கு தாயும் தந்தையுமாக இருந்து காப்பாற்ற வேண்டுமென கேட்டுக்கொண்டார். அக்கணமே அவர்கள் மூவருக்கும் வசிக்க இடமளித்து ஆதரவு நல்கினார் வேதரத்தினம்.

காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களில் ஒன்றான ஆதாரக்கல்வித்

திட்டத்தைப் பரவலாக்கும் முயற்சிகள் தேசமெங்கும் நடைபெற்ற நேரம் அது. அதன் அடிப்படையில் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் ஓர் ஆதாரப் பயிற்சிப்பள்ளி தொடங்கப்பட்டது. பெண்களுக்கான ஆசிரியைப் பயிற்சி அங்கு வழங்கப்பட்டது. கமலாவையும் சாரதாவையும் அப்பள்ளியில் உடனடியாகச் சேர்த்துவிட்டார் வேதரத்தினம். இவர்களோடு இருபத்தியாறு பெண்கள் அப்பள்ளியில் பயிற்சி பெற்றனர். பயிற்சி முடிந்ததும் அவர்கள் அனைவருக்கும் காந்தியடிகளே வந்திருந்து சான்றிதழ் வழங்கி ஆசியளித்தார்.

கமலாவிடமும், சாரதாவிடமும் "அடுத்து என்ன செய்ய நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார் வேதரத்தினம். அவர்கள் சிறிதும் தயங்காமல் "நீங்களே ஓர் ஆதாரப்பள்ளியைத் தொடங்குங்கள் நாங்கள் அங்கு பணிபுரிகிறோம்'' என்று பதில் சொன்னார்கள்.

இதன் விளைவாக இரண்டு ஓலைக்குடில்களுடன் அந்த ஆண்டிலேயே கஸ்தூர்பா ஆதாரப்பள்ளி உருவானது. கமலாவும்சாரதாவும் அங்கு ஆசிரியைகளாக பணிபுரிந்தனர். அக்கம்பக்கத்தில் இருந்த தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்குச் சென்று சிறுவர் சிறுமியரை அழைத்து வந்து பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தனர்.

குருகுலத்துக்கான செலவு கொஞ்சம்கொஞ்சமாக அதிகரித்தபடியே இருந்தது. தொடக்கத்தில் தன் கையிருப்புத் தொகையையெல்லாம் எடுத்துச் செலவு செய்தார் வேதரத்தினம். தமக்குச் சொந்தமான நிலத்தில் விளையும் நெல்லையும் தானியங்களையும் குருகுலத்துக்கே அளிக்கத் தொடங்கினார்.

செலவு மேலும் கூடியபோது நெருங்கிய நண்பர்களிடமிருந்து ஓரளவு நன்கொடையைப் பெற்று சமாளித்தார். கஸ்தூர்பா காந்தி நிதி டிரஸ்டின் உதவியை நாடுமாறு நண்பர்கள் வேதரத்தினத்துக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

வேறு வழியின்றி கஸ்தூர்பா ஆதாரப் பள்ளிக்கு உதவுமாறு காந்தியடிகளுக்குக் கடிதம் எழுதினார். அவர் ''பள்ளிக்கூடம் இயங்கும் வேதாரண்யத்தில் தந்தி அலுவலகம் இருக்கிறது. இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட ஊரில்தான் தந்தி அலுவலகம் அமைக்கப்பட்டிருக்கும். அதன் அடிப்படையில் வேதாரண்யத்தை கிராமமாகக் கருத வழியில்லை. கிராமத்தில் இல்லாத பள்ளிக்கு கஸ்தூர்பா நிதியிலிருந்து பண உதவி அளிக்க முடியாத நிலையில் இருக்கிறோம்'' என்று காந்தியடிகளிடமிருந்து பதில் வந்தது.

அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிய வேதரத்தினத்துக்கு சுதேசா கிருபளானி பள்ளியை வேதாரண் யத்துக்குவெளியே ஒருகிராமத்துக்கு மாற்றும் படி ஒரு யோசனையை வழங்கினார்.

வேதாரண்யத்தை அடுத்த மகாராஜபுரம் என்னும் கிராமத்தில் வேதரத்தினத்துக்குச் சொந்தமான ஒரு நிலம் இருந்தது.

நிர்மாண ஊழியர்கள் முகாமுக்காக அந்நிலத்தில் போடப்பட்டிருந்த கீற்றுக்கொட்டகைகள் கூட பிரிக்கப்படாமல் அப்படியே இருந்தன. சுதேசா கிருபளானியின் யோசனையின்படி ஆதாரப்பள்ளியை அக்குடில்களுக்கு உடனடியாக மாற்றினார் வேதரத்தினம். ஆதாரப் பள்ளியில் ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் சேர்ந்தே படித்து வந்தனர்.

பள்ளிக்கூடம் இருக்கும் இடத்துக்கே விதிகளைச் சுட்டிக்காட்டிய காந்தியடிகள் நாளைக்கு "இது பெண் குழந்தைகள் படிக்கும் பள்ளியல்ல. ஆண் குழந்தைகளும் இருக்கிறார்களே" என வேறொரு விதியைச் சுட்டிக்காட்டிவிட இடமளித்து விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையோடு செயல்பட்டார் வேதரத்தினம்.

பெண்குழந்தைகளையும் ஆசிரியை களையும் மட்டும் புதிய இடத்துக்கு மாற்றி 'கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்' என்றும் பழைய பள்ளிக்கு 'தாயுமானவர் வித்யாலயம்' என்றும் பெயர் சூட்டினார். நல்ல வேளையாக இந்த மாற்றங்களைச் செய்த பிறகு காந்தியடிகளிடமிருந்து எந்த மறுப்பும் எழவில்லை. குருகுலம் இயங்கத்

தேவையான நிதி உதவியும் கிடைத்தது. தொடக்கப்பள்ளியாக இருந்த குருகுலம் மெல்ல மெல்ல உயர்நிலைப்பள்ளியாக வளர்ச்சியடைந்தது.

எல்லோருக்கும் உணவும் உடையும் உறைவிடமும் கொடுத்து ஆதரவோடு அணைத்துக்கொண்டது. குருகுலம் புயல் சீற்றத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு ஒவ்வொரு குடிலையும் கட்டடமாக மாற்றினார் வேதரத்தினம்.

உணவுப்பஞ்சம் தலைவிரித்தாடிய காலகட்டத்தில் கைக்குத்தல் அரிசி என்னும் திட்டத்தை தாய்மார்களிடம் அறிமுகம் செய்தார் வேதரத்தினம். மேலும் மக்களுக்கு அரிசி கிடைக்க வேண்டி தலைஞாயிறிலிருந்து படகு மூலம் அரிசி தருவித்து கூட்டுறவு முறையில் விற்பதற்கு முயற்சி எடுத்தார்.

வேதரத்தினம் செய்த நல்ல–அசாதாரண செயல்பாடுகள் அவருக்கு பொதுத்தளத்தில் நிறைய எதிரிகளை உருவாக்கித் தந்தது. அதன் விளைவு எதிரிகள் ஓர் ஆளைப் பிடித்து, அவனுக்கு ஒரு துப்பாக்கியும், பணமும் கொடுத்து வேதரத்தினத்தை எப்படியாவது முடித்துவிடு என்று சொல்லி அனுப்பினார்கள். எப்படி எங்கே அந்தக் கொலையை நிகழ்த்துவது என்கிற பயிற்சியையும் அளித்தனர்.

காந்தியடிகள் மறைந்து பத்து நாடகளுக்குப் பிறகு அவருடைய அஸ்தியை நாடெங்கும் தெளித்தார்கள். அன்றைய தினம் வேதாரணயத்தில் காந்தியடிகளுக்காக இரங்கல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கூட்டத்தில் வேதரத்தினம் உரையாற்றும்போது அவரைக் கொல்லவேண்டும் என்பது திட்டம்.

அனைவரும் எதிர்பார்த்தப்படி வேதரத்தினம் பேசத் தொடங்கினார். அவருக்கு அருகிலேயே அவரைக் கொல்ல வந்தவரும் அமர்ந்திருந்தார். காந்தியடிகள் சுடப்பட்ட செய்தியை அறிந்ததிலிருந்து துயரே உருவாக நடமாடிக் கொண்டிருந்தார் வேதரத்தினம்.

தன் வாழ்க்கையை தகவமைத்த அந்த மாபெரும் மனிதரின் இழப்பை அவரால் தாங்கிக்கொள்ளவே இயலவில்லை. மேடையில் பேசத் தொடங்கியதும் அவர் விழிகளிலிருந்து கண்ணீர் பெருகி வழிந்தது. கேட்டவர்களையெல்லாம் அந்தப் பேச்சு உருக்கியது.

திடலில் கூடியிருந்த அனைவரும் கண்கலங்கினார்கள். அவரைக் கொல்ல வந்தவனையும் வேதரத்தினத்தின் உரை நெகிழ வைத்துவிட்டது. தாம் அவரைக் கொல்ல வந்திருக்கிறோம் என்பதே அவருக்கு மறந்துவிட்டது. புதியதொரு மனிதனாகவே அவர் மாறிவிட்டார். துப்பாக்கியிடம் அவர் கை போகவே இல்லை. இரங்கல் கூட்டம் முடிந்ததும் அவர் தன் வீட்டுக்கு சென்று வேதரத்தினத்துக்கு நீண்டதொரு கடிதத்தை எழுதினார்.

அதையே மீண்டும் பிரதியெடுத்து முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கு அனுப்பி வைத்தார். அக்கடிதத்தின் இறுதிப்பகுதியில் “அவரைக் கொல்ல என்னை அனுப்பியவர்கள் அவரைக் கொல்ல வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறார்கள். அவருக்கு தகுந்த பாதுகாப்பளித்து காப்பாற்ற வேண்டியது அரசின் கடமை” என்று கூடுதலாக இரண்டு வரிகளையும் எழுதி அனுப்பி வைத்தார்.

மறுநாள் காலை வேதரத்தினம் கடிதத்தைப் படித்து விஷயத்தைத் தெரிந்துகொண்டார். ஆனாலும் யாரிடமும் இதைப்பற்றித் தெரிவிக்கவில்லை. ஆனால் தனக்கு வந்த கடிதத்தைப் படித்த முதலமைச்சர் பதற்றத்தோடு உடனடியாக ஒரு மெய்க்காப்பாளரை நியமித்து அவரிடம் அனுப்பி வைத்தார். அவர் வந்து சேர்ந்த பிறகுதான் மற்றவர்களுக்கு விஷயம் புரிந்தது.

மெய்க்காவலர் எப்போதும் துணைக்கு வருவதை அவர் விரும்பவில்லை என்றாராம், தன்னோடு இருந்தவர்களின் அன்புக்கட்டளைக்குக் கட்டுப்பட்டு அந்த ஏற்பாட்டுக்கு உடன்பட்டார்.

அடுத்த ஆண்டில் மன்னார்குடிக்கு அருகில் இருக்கும் தெற்கு நாணலூரில் ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திவிட்டு இரவில் திரும்பி வரும் வேளையில் ஒரு பெரிய கூட்டம் அவருடைய

வாகனத்தை வழிமறித்து நிறுத்தியது. கூட்டம் வாகனத்தின் விளக்கை உடைத்து சுக்குநூறாக்கிவிட எங்கும் இருள் சூழ்ந்தது.

மெய்க்காப்பாளர் தன்னிடமிருந்த துப்பாக்கியை எடுத்தபோது வேதரத்தினம் அவரைத் தடுத்து நிறுத்தினார். மறுகணமே கதவைத் திறந்துகொண்டு தலையில் துண்டு போட்டுக்கொண்டு கூட்டத்திடையில் புகுந்து பக்கத்தில் இருந்த காட்டுக்குள் புகுந்துவிட்டார். கலவரத்தின் சத்தத்தைக் கேட்டு ஓடிவந்த அடுத்த ஊர்மக்கள் வந்து அவரைக் காப்பாற்றினார்கள்.

அவர் வந்த வாகனம் வாய்க்காலோரம் உருட்டிவிடப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. அவர் புகார் அளிக்காதபோதும் காவல்துறையினரே முன்வந்து வழக்கு பதிந்து விசாரணை நிகழ்த்தினர். தன்னைக் கொல்ல வந்தவர்கள் யாரென தெரிந்தபோதும் வேதரத்தினம் யாரையும் இறுதிவரைக்கும் காட்டிக்கொடுக்க விரும்பவில்லை. இருட்டில் யார் முகமும் சரியாகத் தெரியவில்லை என்று பொதுவாகச் சொல்லி, வெளியேறி விட்டார்.

இவர் சென்னை சட்டசபைக்கு 1952இல் மன்னார்குடி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். 1957இல் திருத்துறைப்பூண்டி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். 1961இல் சட்டசபை நடந்து கொண்டிருந்தபோது இவர் பேசிக் கொண்டிருக்கும்போதே மாரடைப்பு வந்து உடல்நலம் கெட்டு இறந்துபோனார். இவரை வேதாரண்யம் கொண்டு வரப்பட்டு கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலத்தில் இறுதி அஞ்சலி செய்யப்பட்டது. இவரது சமாதியை இன்றும் இங்கு பல்லாயிரக்கணக்கானோர் சென்று, பார்த்து, வழிபட்டு, மரியாதை செய்கின்றனர்.

கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலத்தின் நிறுவனர் சர்தார் வேதரத்தினத்தின் நூற்றாண்டு விழாவும் சுதந்திர தின பொன்விழாவும் ஒரே ஆண்டில் 1997இல் நடந்தது. 1897ஆம் ஆண்டு பிப்ரவரி 25ஆம் தேதி வேதாரண்யத்தில் பிறந்தவர் சர்தார் வேதரத்தினம்.

1944ஆம் ஆண்டு கஸ்தூர்பா இறந்த பின் கஸ்தூர்பா தேசிய நினைவு நிதி திரட்டுவதில் பங்குகொண்ட வேதரத்தினம் பிள்ளை இந்த நிதியின் தஞ்சாவூர், திருச்சி மாவட்டப் பிரதிநிதியாகச் செயல்பட்டு, இம்மாவட்டங்களில் பல பெண்கள் குழந்தைகள் நல மையங்களையும் மகப்பேறு மருத்துவமனைகளையும் நிறுவினார்.

இதன் தொடர்ச்சியாக கஸ்தூர்பா கன்யா குருகுலத்தை 1946ஆம் ஆண்டு நிறுவினார்.

சர்தார் வேதரத்தினத்தின் மறைவுக்குப் பிறகு அவரது புதல்வர் அப்பாக்குட்டி கன்யா குருகுலம் மற்றும் தாயுமானவர் வித்யாலங்களைக் கவனித்து வந்தார்.

இந்நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவிகள் தாம் கற்ற கல்வியால் தாமே சம்பாதிக்க முடியும் என்று திறமையோடு என்று வெளியேறுகிறார்களோ அன்றுதான் எனக்கு நிம்மதி ஏற்படும். அதுவரை அதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டே இருப்பேன் என்று உறுதியுடன் செயல்பட்டார் அப்பாகுட்டி. இந்திய அரசு 1989ஆம் ஆண்டு அவருக்கு பத்மஸ்ரீ பட்டம் வழங்கி கௌரவித்தது.

பெண்களுக்குக் கல்வி அளித்து அவர்களைத் தன்னம்பிக்கை உள்ளவர்களாக்குவதற்குத் தொடர்ந்து பாடுபட்டு வருவதற்காக கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலத்துக்கு 1996ஆம் ஆண்டுக்கான இந்திய சுழற்சங்க விருது வழங்கப்பட்டது.

பாராட்டுப் பத்திரத்துடன் ரூ.1லட்சமும் கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலத்துக்கு வழங்கப்பட்டது. சர்வதேச சுழற்சங்கத்தின் தலைவர் இவ்விருதை சென்னையில் 1996ஆம் ஆண்டு குருகுலத்தின் அறங்காவலரும் சர்தாரின் பேரனுமான ஜூனியர் அ.வேதரத்தினத்திடம் வழங்கினார்.

குருகுலத்தில் படிக்கும் ஆதரவற்ற நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் கல்விச் செலவை ஏற்றுக் கொள்ள விரும்புகிறவர்களுக்குப் பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

இத்திட்டத்தில் செலுத்தப்படும் நிதி நிரந்தர வைப்பு நிதியாக வங்கிகளில்

செலுத்தப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகைமூலம்பெண்குழந்தைகளின் கல்விச்செலவு ஈடுகட்டப்படுகிறது. ஒரு பெண் கல்வி முடித்து, வேலைக்குப் போனபின் அந்த வட்டி வேறொரு பெண்ணுக்கு வழங்கப்படும்.

ஜப்பானில் உள்ள நிப்பான் வேதாந்த சபையின் மூலம் பல நன்கொடையாளர்கள் தலா ஆயிரம் டாலர்கள் அனுப்பி, நமது பெண் குழந்தைகளின் கல்விக்கு உதவி வருகிறார்கள்.

ஆதரவற்ற பெண்களுக்கு நிழல் தருகிறது வேதாரண்யம் கஸ்தூர்பா கன்யா குருகுலம். பெண் கல்விக்கு எதிர்ப்பு நிலவிய காலத்தில் நிறுவப்பட்ட இந்தப் பள்ளி பல நூறு பெண்களின் வாழ்க்கைக்குப் பாதை அமைத்துக் கொடுத்துள்ளது.

பெண்களை வெளியில் அனுப்பாமல் வீட்டுக்குள் பூட்டி வைத்திருந்த காலத்தில் கிராமம் கிராமமாகச் சென்று சர்தார் பெண் குழந்தைகளை அழைத்து வந்து கல்விக்கண் திறக்க உதவினார்.

அவர்களுக்கு உணவு, உடைகள், புத்தகங்கள், தங்கும் வசதி ஆகியவற்றை இலவசமாக வழங்கினார். தொடக்கப் பள்ளியாகத் தொடங்கிய பள்ளி இப்போது மேல் நிலைப்பள்ளியாகத் திகழ்கிறது.

தாழ்த்தப்பட்டவர்கள் என்போர், குறிப்பாக கீழத் தஞ்சை மாவட்டத்தில் இருப்போர் பின்தங்கிய நிலையில் இருந்த நிலையை மாற்றி இன்று அவர்களுக்குக் கல்வி அறிவு புகட்டி, தன்னம்பிக்கையை அளித்து, சமூகத்தில் பெரும் அந்தஸ்த்து உள்ளவர்களாக மாற்றியதில் இந்த குருகுலத்துக்குப் பெரும் பங்கு உண்டு.

இங்கு புத்தகப் படிப்பு மட்டுமல்லாமல், தொழிற் கல்வி, ஊதுபத்தி தயாரிப்பு, சோப்பு தயாரிப்பு, அச்சுக் கோத்தல், அச்சு அடித்தல், மின்னணுசாதனங்கள், வானொலி தொலைக்காட்சி பெட்டிகள் தயாரித்தல், தையற்கலைப் பயிற்சி, சித்த மருத்துவ மருத்துவக்கூடம் ஆகிய பல துறைகளில் இங்கு பயிற்சி பெறும் பெண்கள் சமூகத்தில் யாருக்கும் சளைத்தவர் அல்ல என்பதை இன்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திரப் போராட்டத்தில் செய்த தியாகத்துக்காக அரசாங்கம் கொடுத்த 10 ஏக்கர் நிலத்தைத் தன் சொந்தத்துக்கு எடுத்துக் கொள்ளாமல் மகாராஜபுரம் எனும் இடத்தில் 15 ஏக்கர் சேர்த்து இந்த குருகுலம் விரிவடைந்து இப்போது காணப்படுகிறது.

உடல் நலம் குறைந்தால் தங்குவதற்கு ‘ஆரோக்கிய சாலை’ மருத்துவ உதவிகள் உடனுக்குடன் கிடைக்கின்ற வசதி இங்கு உண்டு.

இங்குள்ள நவீன சமையல் கூடத்தைப் பார்த்து வியந்து போவார்கள். சுகாதார முறையோடு ஆயிரக்கணக்கானோருக்கு ஒரே நேரத்தில் வரிசையில் உணவு பரிமாறப்படும் அழகை உலகத்தார் பார்த்து வியந்து போகிறார்கள். ஒரு போட்டி. கூச்சல், சந்தடி எதுவுமின்றி அமைதிச் சூழலில் ஆயிரக்கணக்கான மாணவிகள் உணவு உண்ணும் காட்சி காணுதற்கரியது.

இந்தச் சாதனைகள் எனும் ஆல விருட்சத்திற்கு ஒரு சிறிய விதை சர்தார் வேதரத்தினம் எனும் காந்தியவாதி. அதை தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தி வந்தவர் அப்பாகுட்டி. இன்று அவருடைய புதல்வர்கள் மிகச்சிறப்பாக இதனை நடத்தி வருகிறார்கள்.

**சோடாவும் தமிழ் சினிமாவும்**

‘சபாபதி’ படத்தில் ஒரு காட்சி. இப்படத்தில் எம்ஜிஆர் தன் குருவாக வரித்த காளி என்.ரத்தினம் வேலைக்காரர். அவரை சோடா ஒன்றை உடைத்து எடுத்து வா என்பார் டிஆர் ராமச்சந்திரன். ஒரு சோடா பாட்டிலை சுக்குநாறாக உடைத்து ஒரு தட்டில் வைத்து எடுத்துவந்து இந்தாப்பா நீ கேட்ட சோடா என்பார் காளி என்.ரத்தினம். இந்தக் காட்சிக்கு தியேட்டரே குலுங்கிச் சிரித்தது அந்தக் காலத்தில்.

‘தில்லானா மோகனாம்பாள்’ படத்தில் ஆச்சி மனோரமா சோடாவை ‘ஜோடா’ என்று நீட்டி முழக்கி அழைப்பதைப் படமாக்கி நம்மை ரசிக்க வைத்தார் இயக்குனர் ஏ.பி நாகராஜன்.

கோலி சோடா என்ற பெயரில் இரண்டு திரைப்படங்கள் வெளியாகியிருக்கிறது. முதல் படம் 2014ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்தத் திரைப்படத்தை விஜய் மில்டன் இயக்கினார். 2018இல் மீண்டும் அவரே கோலிசோடா–2 என்ற பெயரில் ஒரு திரைப்படத்தை இயக்கி வெளியிட்டார்.

தமிழ் சினிமாவுக்கும் சோடாவுக்கும் இப்படி நெருங்கிய சம்பந்தமுண்டு.

அந்தக் காலத்தில் சினிமா தியேட்டர் இடைவேளைகளில் 'சோடா கலர்', என்று கூவிக்கொண்டு நம்மிடம் மரப்பெட்டிகளில் அடுக்கிய சோடா, கலர் பானங்களை விற்க வருவோரை நாம் பார்த்திருப்போம்.

இப்போதெல்லாம் யாரும் நம்மைத் தேடி வருவதில்லை. நாம் தான் வெளியே கடைகளில் வாங்கி அருந்த வேண்டும். அதுவும் பன்னாட்டு நிறுவனங்களின் பெப்சி, கோக் குளிர் பானங்கள் அதுவும் உண்மை விலையை விடப் பல மடங்கு அதிகமாக இருக்கும். வேறு வழியின்றி வாங்கி அருந்துவோம்.

காரணம் தண்ணீர் போத்தலைக் கூட தியேட்டருக்குக் கொண்டு வர அனுமதிக்காமல்,தீவிரவாதிகள் போல நம்மைப் பரிசோதனை செய்து தான் உள்ளேயே விடுவார்கள். வேறு வழி?

தாகத்திற்கு அருந்தித்தான் தீர வேண்டுமானால், வாங்கித்தான் ஆகவேண்டும்!

நான் பேசப்போவது ஆரம்பகால சினிமாவோடு சோடாவுக்கு உள்ள தொடர்பை பற்றித்தான். இன்றைக்கும் விற்பனை ஆகி வருகிற வின்சென்ட் கலர் பானங்கள் ஆரம்பித்தவர் யார் தெரியுமா? சாமிக்கண்ணு வின்சென்ட்!

இவர் தான் முதன்முதலில் திரைப்படம் காட்டும் புரோஜக்டர் கருவி வாங்கி. தமிழ்நாடு பூரா திரைப்படங்களைத் திரையிட்டவர்... திரையரங்குகளை முதலில் ஆரம்பித்தவர்... படம் எடுத்தவர் பின்னாளில் வின்சென்ட் சோடா கம்பெனியும் ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப பேசும்படக்காலத்தில் நடிகர் பட்டாளங்களைக் கூட்டிக்கொண்டு போய் கல்கத்தா, கோலாப்பூர் பம்பாய் நகரங்களில் தான் படமெடுத்து வந்தார்கள். அந்த நேரத்தில் சினிமா தியேட்டர் அதிபர் ஏ.நாராயணன் சென்னை சேத்துப்பட்டில் சீனிவாசா சினிடோன் என்ற முதல் சவுண்ட் ஸ்டூடியோவை தொடங்கினார்.இதன் பின் தண்டையார்பேட்டையில் 'ஜெயவாணி சினிடோன், அடையாறில் 'மீனாட்சி சினிடோன்' ஆரம்பிக்கப்பட்டது.

நான்காவதாக சென்னைக்கு வெளியே ஒரு சவுண்ட் ஸ்டுடியோ கட்டப்பட்டது. அதைக் கட்டியவர் வஜ்ரவேலு முதலியார். வேலூர் அருகே சத்துவாச்சேரியைச் சேர்ந்த இவர் அந்தக் காலத்தில் எசென்ஸ் கடையும் சோடா பேக்டரியும் நடத்தி வந்தார். (இப்போதும் சென்னை



சென்ட்ரல் பக்கத்தில் உள்ள வால்டாக்ஸ் ரோட்டில் இவரது வஜ்ரவேலு முதலியார் எசெனஸ் கடை இயங்கி வருகிறது)

அன்றைய சென்னை சினிமா தியேட்டர்களுக்கு சோடா விநியோகம் செய்து வந்தார் இவர். ஏகப்பட்ட லாபம்.

தன்னை பெரியாளாக்கிய சினிமாவுக்கு ஏதாவது செய்ய எண்ணினார். விளைவு? தத்துவாச்சேரியில் சுந்தர பாரதி என்ற பெயரில் சினிமா ஸ்டூடியோ கட்டினார். படமெடுப்பவர்களுக்குத் தகவல் சொல்லி அனுப்பினார்.

ஒருவரும் திரும்பிப் பார்க்கவில்லை.

வெறுத்துப் போனவர் தானே ஒரு படக்குழுவை உருவாக்கினார். சதி அகல்யா படத்தை எடுத்தார்.

மாயவரம் பட்டம்மாளை அகலிகையாக, பாலசுப்ரமணியத்தை கௌதம முனிவராக நடிக்க வைத்தார்.

படப்பிடிப்பு பாதி முடிந்த நிலையில் படம் பிடிக்கப்பட்ட காட்சிகள் லேபிள் கழுவிப் பார்க்கப்பட்டது சவுண்ட் (ஒலிக்கலவை) சினிமாட்டோகிராப் சரியில்லை. ரஷ் பார்த்த முதலியார் நொந்து போனார்.

சரியில்லாத டெக்னீசியன்களை விரட்டி விட்டு, புதியவர்களை நாடினார். அவர்களோ வேலூர் வரை வர மறுத்து விட்டனர். கஷ்டப்பட்டது போதும் என ஸ்டுடியோவை இழுத்து மூடி விட்டார்.

சோடா தொழிலையும் எசென்ஸ் கடையையும் விரிவாக செய்ய ஆரம்பித்து விட்டார். இப்படியாக சென்னைக்கு வெளியே துவங்கப்பட்ட முதல் ஸ்டுடியோ மூடுவிழா கண்டது!

பிறகு சென்னைக்கு வெளியே சேலத்தில் 'மாடர்ன் தியேட்டர்ஸ்' என்ற பெயரில் டி ஆர் சுந்தரம் திரைப்படம் தயாரிக்கும் நிறுவனம் துவங்கியதும், அதன் முதல் படமாக 'சதி அகல்யா'வே எடுக்கப்பட்டு வெற்றி கண்டதும் தனிக்கதை. ●

---

கவிதை

## தூது

வெட்சிப் பூச்சூடி
களமாடி
வெற்றி பூ பறித்து
படகேறி
விரைந்து வருகிறான் நெய்தலன்.

விழுப்புண்களில்
குருதி.

அழுந்த அணைத்து
முத்தங்களால் நனைக்கிறாள்
தாழைமடல் தலைவி.

பெருக்கெடுத்து
ததும்புகிறது காதல்.

கனிந்து குலை தள்ளும்
முதிர்ந்த ஈச்சத்தில்
தனித்தாடுகிறது
தூக்கணாங்குருவி கூடு.

ஊரார் அறிந்தவற்றை
உற்றாருக்குச் சொல்லிவிடு
உப்பளக்காற்றே..!

## தவிப்பு

நிலாக்காலப் பொழுதில்
கைத்தலம் பற்றி
வியர்த்த நுதலில்
முத்தமிட்டான்.

மயங்கின கண்கள்
விம்மியது பெருமூச்சு
தெறித்தன கைவளை
மூர்ச்சையானது காற்று.

வெளுத்தது
கொவ்வை செவ்விதழ்
துளிர்த்தது
சொட்டு சொட்டாய்
தேன் துளி..!

உயிரின் முடிச்சு
அவிழ அவிழ
மலர்ந்த பெண்மை முழுதும் அவன் வாசம்.

கனவைப் போல காணாமல் போனான்.

இளங்காலை குருவின்
ஒற்றைக் குரலாய்
நான்.

**கருப்பி** ●

சிறுகதை

# பூதத்தாள்வார்

## நெய்வேலி பாரதிக்குமார்



மீனம்பட்டி என்று இந்த ஊருக்கு ஏன் பெயர் வந்தது என்று திருமால் யோசித்துப் பார்த்தார். ஒன்றும் புரிபடவில்லை வெளியில் எட்டிப் பார்த்தபொழுது மணி பத்தரைக்கே கானல் நீர் வெய்யிலில் மின்னுவது தெரிந்தது. ஏரியோ குளமோ குட்டையோ இல்லாத ஊர் இது. தேங்கும் மழைநீர் கூட வெயிலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் காற்றில் ஆவியாகிப் பறந்துவிடும். பேய் வெயிலடிக்கும் ஊர். வெய்யில் ஏற ஏற உடம்பின் வெப்பம் கூடும். மேலே படிந்திருக்கும் வெடி மருந்துக்கும் தரையில் குவிக்கப்பட்டிருக்கும் வெடி மருந்துக்கும் அவ்வளவாக ஆகாது. ஒரு சிறு பொறியின் சீற்றத்தில் பற்றிக்கொள்ளும் தீவிரத்துடிப்புடன் இருக்கும். அதற்குள் எத்தனை கிலோ மருந்தைக் கலக்க முடியுமோ அத்தனை கிலோ கலந்துவிட்டு வெளியேறிவிட வேண்டும்.

அவர்களது பூர்வீக வீடு பூதப்பாண்டியில் இருந்தது. நாகர்கோவிலில் இருந்து பத்து கிமீ தூரத்தில் பூதப்பாணடி இருக்கிறது. தென்னையும் வாழையும் அந்த ஊருக்கு பச்சை வண்ணத்தையும் குளிர்ச்சியையும் ஏற்றி இருப்பது மேலே சில்லெனப்படும் காற்றில் உணர முடியும். பாட்டி வீடு பள்ளிக்கூடக காலத்தில் விடுமுறைச் சரணாலயம். பெரியப்பா பிள்ளைகள், சித்தப்பா பிள்ளைகள் என வீடு அதகளமாக இருக்கும். எல்லாம் பத்து பனிரெண்டு வயது வரைதான். அப்பா வேலைபார்தத அரிசி ஆலை முதலாளியின் குடும்ப வாரிசுகளின் சொத்துப் பிரச்சினை காரணமாக மூடப்பட்ட பின்னர் வயிற்றுப்பாட்டுக்காக சிவகாசிக்கு அவர்களது குடும்பம் இடம் பெயர்ந்தாயிற்று.

முன் நெற்றியில் வடியும் வியர்வையை அருகில் வைத்திருந்த காகிதத்துண்டால் மிகக் கவனமாக துடைத்துக் கொண்டார். ஒரு சொட்டு வியாவை நழுவி உதட்டின் மீது பட்டுவிட்டால் போச்சு. வெடி உப்பு பொட்டாசியம் நைட்ரேட 999 பவுடர் கலவை வாய்க்குள் போய்விடும். அவர் பார்க்கிற பிழைப்புக்கு தாகமெடுத்தால் தண்ணீர்கூட குடிக்க முடியாது.

தன்னுருவம் எப்படி இருக்கிறது என்று எதிரில் இருப்பவரைப் பார்த்துதான தெரிந்து கொள்ள வேண்டும். எதிரே இடுப்பில் அவரைப்போலவே ட்ரவுசருடன் இருதயராஜ் குனிந்தத் தலை நிமிராமல் பவுடரைக் கலந்து தனியே பிரித்து வைத்துக் கொண்டிருந்தார். அவரது உடல் முழுக்க வெடிமருந்துக் கலவை அலுமினிய பெயின்ட் அடிக்கப்பட்டது போல வெண்ணிறத்தில் காட்சியளித்தது. கண்கள், உதடுகள் தவிர உடம்பின் சகல பாகமும் அலுமினியத்தூள் போர்த்தியிருந்தது.

ஒரே இடத்திலதான் வேலை என்றாலும் கெமிக்கல் ரூமில் (வேதியல் அறை) ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள முடியாது. வெடிக்கடைகளில் மிகவும் இளக்காரமாக கருதப்படும் பிஜிலி வெடிகளுக்குத்தான் வேதியல் அறையில் பெரும்பாடு படவேண்டும்.

வேதியல் துறை அளவில் பத்துக்கு பதினைந்துதான் இருக்கும். ஆனாலும் அந்த அறைக்கு நான்கு வாசல்கள் நான்கு கதவுகள் கதவுகளுக்குப் பக்கத்தில் அமாந்துதான் வெடிமருந்து கலக்க வேண்டும். அப்பொழுதுதான ஏதேனும் அசம்பாவிதம் என்றால் எழுந்து அப்படியே ஓட வசதியாக இருக்கும். ஒவ்வொரு வெடி நிறுவனத்திலும் வருடத்துக்கு ஒரு முறையோ அல்லது இரண்டு வருடத்துக்கு ஒரு முறையோ ஏதாவது விபத்து நடக்கும். சிலசமயம் பொருள் சேதாரம் மட்டும் இருக்கும். சில சமயம் உயிர்ப்பலியும் நடக்கும் .

இருதயராஜின் மூக்கின் அருகே ஒரு வியர்வைக்கோடு நகர்ந்து உதட்டை நோக்கி விரைந்துக் கொண்டிருந்தது. வேலையின் மும்முரத்தில் கவனிக்காமல் இருதயராஜ் மருந்துக் கலவையில் கைகளை அளைந்து கொண்டிருந்தார். வாயைத் திறந்தால் பவுடரின் தூசி வாய்க்குள் போய்விடும். கைகளை தரையில் வேகமாகத் தட்டினார். திருமால் நல்லவேளையாக நிமிர்ந்து பார்த்தார். இருதயராஜ் மூக்கின் அருகே கைவைத்து சைகைக் காட்டினார் திருமால். சட்டென காகிதத்துண்டை எடுத்து வேகமாகத் துடைத்தார் இருதயம். அப்பாடி என்று தலையை ஆட்டி மகிழ்ச்சியைப் புலப்படுத்தினார் திருமால்.

ஒரு ஊமையைப்போல சைகையில்தான் அங்கு ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள முடியும். கண்களை அகலமாகக் கூட விரித்து பெருமகிழ்ச்சியை தெரிவிக்க முடியாது. தலையை ஒரு குறிப்பிட்ட வேகத்துக்கு மேலே ஆட்டவும் முடியாது. ஆனால் மிகக்கூரிய கேட்கும் திறன் இருக்க வேண்டும். சிறுபொறியின் ஒலியைக் கவனித்துக் கேட்டுவிட்டால் அசம்பாவிதம் எதுவும் நிகழ்வதற்குள் தப்பி ஓடிவிடலாம்.

அங்கிருக்கும் எட்டு மணிநேரமும் மனம்தான் அவர்களுக்கு உற்ற நண்பன். மனைவி பிள்ளைகளிடம் பேசுவதைக் காட்டிலும் அதிகம் மனதோடுதான் பேசி இருக்கிறார் திருமால். மனம் நகைச்சுவையாக எதையும் அசை போட்டுவிடக்கூடாது என்பதால் இளமைக்காலத்தை நினைவில் கொண்டுவராமல் கவனமாக இருப்பார். அவரது இளமைக்காலம் கேலியும் கலாட்டாக்களும் நிரம்பியது. நினைத்துப் பார்த்தால் ஒவ்வொரு நிகழ்ச்சியும் குபீரென சிரிக்க வைத்துவிடும்.

தன்னை அறியாமல் சிரித்துவிட்டால் உதடுகள் மூடும் போது வெடிமருந்தும் உள்ளே போய்விடும். மனம் குதூகலிக்கும் எந்த நிகழ்ச்சியும் மனக்கண்ணுக்கு வராமல் சுவனமாகத் தடை செய்துவிடுவார் திருமால். கடனை எப்படி அடைப்பது, வரும் தீபாவளிக்கு யாரிடம் கந்துவட்டிக்கு பணம் வாங்குவது என்று மிகவும் கவலையுடன் போய்விடும். முகத்திலிருந்து ஒரு தீர்வும் கிடைக்காது என்றாலும் புன்னகை போய்விடும். முகத்திலிருந்து சிரிப்பதால் வாய் திறக்கும் அபாயத்திலிருந்து தற்காலிகமாகத் தப்பிவிடலாம்.

வீட்டுக்கு மகளும் இரண்டு வயது பேத்தியும் இன்று மதியம் வருகிறார்கள். வள்ளியை கட்டிக்கொடுத்த காலத்தில் இருந்து சென்னைவாசி ஆகிவிட்டாள். மாப்பிள்ளைக்கு கிண்டியில் வேலை. எப்பொழுதோ ஒரு முறைதான். மகளையும் பேத்தியையும் பார்க்க முடியும். கடைசியாக போன ஆகஸ்ட்டில் பார்த்தது. இப்பொழுது செப்டம்பர் மாதம். கிட்டத்தட்ட பதினோரு மாதம் ஆகிவிட்டது. இன்று சனிக்கிழமை வாரச்சம்பளத்தை முதலாளி போட்டுவிடுவார். அதிலெல்லாம் எப்பொழுதும் குறைவைப்பதே இல்லை தாணுமலை முதலாளி. அதனால்தான் வேறு கம்பெனிக்கு அத்தனை சுலபத்தில் இங்கிருந்து யாரும் போக மாட்டார்கள்.

வள்ளி வருகிறாள் என்பதால் இன்னிக்கு பெருமாளுக்கு தளியல் போடுவதாக ஜெயம் சொல்லி இருந்தாள். அரை நாள் லீவு போட்டுவிட்டு வர முடியுமா என்று எப்பொழுதும் கேட்கிற கேள்வியை கேட்டுவைத்தாள் ஜெயம். அவளுக்கே

தெரியும் அது சாத்தியமில்லை என்று. எப்பொழும் சனிக்கிழமை மாலையில்தான் முதலாளி சம்பளக் கவருடன் வருவார். அதை விட்டால் திங்கட்கிழமை மாலை ஆகிவிடும். வார தண்டல்காரன் ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே வீட்டுக்கு வந்து வாகனத்தின் ஒலியை காது கிழியும்படி அழுத்தி சப்தமிடுவான். அது அவனது தந்திரமிக்க பாவனை. பக்கத்தில் உள்ளவர்களுக்குத் தெரியும்படி ஒலிக்க வைத்தால் அவமானம் தாங்க முடியாமல் பணத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிடுவார்கள் என்றுதான் அவனது வாகனத்தின் பிளிறும் ஒலியை அலறச் செய்வான்.

''என்னிக்கு மத்தியான சாப்பாடு சாப்பிட்டேன். இன்னிக்கு சாப்பிட. வள்ளி வந்தப்புறம் நீங்க கும்பிடுங்க. ராத்திரிக்கு வந்து சாப்பிட்டுக்கறேன் என்று சொல்லி விட்டுத்தான் வேலைக்கு வந்திருந்தார் திருமால்.

மேலே ஒட்டியிருக்கும் வெடிமருந்தை சுத்தமாகக் கழுவ வேண்டும் என்றால் தேங்காய் எண்ணையை சலும்ப உடலில் தடவி சோப்பு போட்டுத் தேய்த்துக் குளிக்க வேண்டும். நிர்வாகம் வேலை நோம் முடிந்த பிறகு இரண்டையும் கொடுத்துவிடும். ஆனால் அதற்குப் பிறகு கெமிக்கல் அறைக்குள் அவர் அனுமதி இல்லை. அடுத்த செட் ஆள் வந்துவிடுவார். கம்பெனியில் அதிக சம்பளம். கெமிக்கல் ரூமில் மருந்து கலப்பவர்களுக்குத்தான். பாதி நாள் சம்பளம் போனால் கையைக் கடிக்கும் என்பதால் மதியம் சாப்பிட கெமிக்கல் அறையை விட்டு வெளியே வருவதில்லை.

தாகமெடுத்தால் தண்ணீர் குடிக்க வேண்டுமே என்பதற்காகத்தான் காலை உணவை காரமாக சாப்பிட மாட்டார் திருமால். பழைய சோற்றைக் கூட நீராகாரத்தை இறுத்து வெறும் சாதத்தை மட்டும் உருட்டி சாப்பிட்டுவிட்டு வந்துவிடுவார். தண்ணீர் ஆகாரம் ஒண்ணுக்கும் போகவேண்டும். தவிர்க்க முடியாத சமயத்தில் கைகளை மட்டும் எண்ணை மற்றும் சோப்பு போட்டு கழிவிட்டுக் கழிவறை சென்று வருவார்.

ஞாயிற்றுக்கிழமையில் கூட மதியம் அவர் சாப்பிடுவதில்லை. எவ்வளவு வற்புறுத்தினாலும் ''வேணாம் ஜெயம் பழகிட்டா அப்புறம் கெமிக்கல் ரூமிலேயும் பசிக்க ஆரம்பிச்சிடும்'' என்று மறுத்துவிடுவார். அவரைப் பொறுத்தவரையிலும் மதியம் மிஞ்சிய சாம்பார்தான் இரவு சாப்பிடும்போது அவர் ருசிக்கும் சாம்பாராக இருக்கும்.

பேத்திக்கு சோன்பப்படி கேக் என்றால் ரொம்பப் பிடிக்கும். வள்ளிக்கு சோளக்கதிர் என்றால் இஷ்டம். வேகவைத்து கொடுத்தால் நினைப்பு வரும்போதெல்லாம அடுப்பங்கரைக்குப் போய் சாப்பிடுவாள். மனதுக்குள் குறுகுறுப்பு நிரம்பி அவரது கண்களில் கொப்பளித்தது. ஆர்வம் மிகுதியாகி விரலால் வெடி மருந்து மீது

"இன்றைக்கு சம்பளம் உண்டுதானே ? என்று எழுதிக் கேட்டார்.

பதிலுக்கு இருதயராஜ் 'ஆமாம். ரவி லெதர் பையை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார்' என்று எழுதினார்.

அவர்களைப் பொறுத்தவரை அதுதான் சமிக்ஞை, மேனேஜா ரவி சனிக்கிழமை காலை பெரிய லெதர் பையை எடுத்துக் கொண்டு கம்பெனி ஜீப்பில் கிளம்பிவிட்டால் அன்றைக்கு சம்பளம் உறுதி. அதன் பிறகு ஊரிலிருந்து வரும் விருந்தாளிகள் தின்பண்டம் வாங்கி வருவார்களே என்று பிள்ளைகள் பார்த்துக் கொண்டு இருப்பது போல ஆவலோடு பையோடு வரும் ரவிக்காக வாசல்படியை பார்த்தபடியே வேலை செய்வார்கள். பெரும்பாலும் இது தவறுவதே இல்லை. மற்ற சில கம்பெனிகளில் திங்கட்கிழமையோ சமயத்தில் செவ்வாய்க்கிழமை வரை கூட தாமதமாகும்.

உடம்பெல்லாம் நமநமவென்று அரித்தது. ஆசைத் தீர சொரிந்தால் நகக்கண்களில் மருந்து ஏறிவிடும். அருலிருந்த காகித அடுக்கில் இருந்து இன்னொரு காகிததுண்டை எடுத்து அரிக்கிற இடத்தில் எல்லாம் தேய்த்தார் திருமால். ஃபேன் கூட இல்லாத ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்ட அறை என்பதால் வெய்யிலின் சூடு உடம்பெங்கும்

பரவி தோல் முழுகக நெருப்பு பரவுவது போல எரிந்தது. வெளிக்காற்று வேகமாக வீசினால் கூட மருந்துத் தூள் பறக்க ஆரம்பித்துவிடும். இதில எப்படி ஃபேன் போடமுடியும். மேனேஜர் ரவி அறையில் மட்டும் இரண்டு ஃபேன்கள் உண்டு. ஒன்று தலைக்கு மேலே சுழலும். இன்னொன்று டேபிள் ஃபேன்.

கெமிக்கல் ரூமில் இருந்து வெளியே வந்து குளித்துவிட்டு ஏதாவது சந்தேகம் கேட்பது போல ரவி ரூமில் சிறிது நேரம் நிற்பார் திருமால். அப்பொழுது கிடைக்கும் ஃபேன் காற்று அமிர்தமாக இருக்கும்.

தண்ணீர் குடிக்காமல் இருந்து பழகியதில் காலைக்கடன் கழிப்பது இடுப்புக்கு கீழே ஒரு யுத்தம் நடத்துவது போல இருக்கும். அன்று நல்லபடியாக வெளியே போய்விட்டால் அன்றைய தினம் பிரச்சினை இல்லாமல் போய்விடும் என்று நினைத்துக்கொள்வார் திருமால். நிர்வாகம் வாழைப்பழங்களை வேலை முடிந்ததும் தருவார்கள். உடல் வெப்பத்தைத் தணிக்கத்தான் என்றாலும் வயிற்றுப் பிரச்சினைகளும் இல்லாமல் இருக்கும். ஆனால் எத்தனை நாள்தான் இப்படி தண்ணீர் குடிக்காமல் பகல் பொழுதைக் கழிப்பது?

"திருமால்" என்ற அழகரின் குரல் கேட்டது. வாசல்படித் தாண்டி உள்ளே வரமாட்டார்கள். எட்டி நின்றே குரல் கொடுப்பார்கள். மருந்தின் நெடி பழக்கம் இல்லாத சிலருக்கு மூச்சடைக்கும்.

திருமால் எழுந்து காகிதத் துண்டுகளில் கைகளைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

"உன் பொண்ணு ஊரிலேர்ந்து வந்திருக்காம். ஊர்லேர்ந்து வந்து இறங்கி வீட்டுக்கு உள்ள போன உடனே உங்க சம்மந்தியோட அண்ணார் காஞ்சிபுரத்துல இறந்துட்டதா தகவல் வந்திருக்கு. அதான் அவங்க உடனே கிளம்பறாங்கலாம். உன்கிட்ட சொல்ல சொல்றாங்க"

இப்ப அவங்க எங்க? என்பது போல சைகைக் காட்டி கேட்டார் திருமால்.

"ஆபீஸ் ரூம்ல இருக்காங்க ஆட்டோ வெயிட்டிங்கல இருக்கு. உங்க சம்சாரம் கூட வந்திருக்காங்க ரெண்டரை மணி பஸ்சுக்கு வரச் சொல்லித் தகவலாம். காஞ்சிபுரத்திலோந்து பதினஞ்சு கிலோமீட்டர் உள்ளே போகணுமாம் அவங்க சொந்தக்காரவங்க அங்க வந்து கூட்டிக்கிறதா ஃபோன் பண்ணியிருக்காங்க. அதனால அவசரமா கிளம்பறேன்னு சொல்றாங்க"

குளிச்சிட்டு வந்துடறேன்னு சொல்லுங்க என்று ஜாடைக் காட்டினார்.

"என்னப்பா பேசறே சிவகாசியிலேர்ந்து காஞ்சிபுரம் பஸ் ரெண்டரை மணிக்கு இப்பவே மணி ஒண்ணே முக்கால் இங்கேர்ந்து சிவகாசிக்குப் போக ஆட்டோதான்னாலும் எப்படியும் கால் மணி நேரம் ஆகும் அவங்க காலுல வென்னித்தண்ணி ஊத்துனாப்புல நிக்கறாங்க... இப்ப நீ குளிக்க ஆரம்பிச்சா

மருந்தெல்லாம் போக ஒரு மணிநேரம் ஆயிடும்

உள்ளே வரச் சொல்லுங்களேன் குழந்தையைப் பாக்கணும்

"கைக்குழந்தையா இருக்கு மருந்து வாடையிலே நமக்கே நிக்க முடியலை.

உனக்கு என்ன கிறுக்கு பிடிச்சிருக்கா?

வெடிவிபத்து என்றால் பரவாமல் இருக்க, அந்த அறைக்கு வெளியே காம்பவுண்ட சுவர் உண்டு. அதைத்தாணடி வந்து நின்று பார்த்தார். பட்டாசு கம்பிவேலிக்கு வெளியே மண்சாலை தெளிவாகத் தெரிந்தது. அந்தச் சாலையைக் காட்டி அங்கே வரச்சொன்னார் திருமால். அவசரமாக அழகர் ஆபீஸ் ரூம் நோக்கி நடந்தார். ரவி வெளியே சென்றிருந்தால் எல்லாவற்றுக்கும் அழகர்தான் பொறுப்பு. காம்பவுண்ட் சுவரில் ஒரு காந்தக்கல் பாதிக்கப்பட்டிருக்கும். அறைக்குள் வரும்முன் அதில் சிறிது நேரம் கைகளை வைத்துக் கொண்டு நின்றால் மனம் அமைதி கொள்ளும். உடல் வெப்பம் குறையும்.

இரண்டு நிமிடத்தில் ஆட்டோ அந்த சாலையில் வந்து நின்றது. திருமால் வேலியை நோக்கி நடந்து சென்றார்.

ஆட்டோவிலிருந்து ஜெயலட்சுமிதான முதலில இறங்கினாள். உள்ளிருந்து எட்டிப்பார்த்த வள்ளி தனியாக தயக்கத்துடன் இறங்கினாள்.

''குழந்தை எங்கம்மா?''

அதன்பிறகுதான் வள்ளி குழந்தையை ஆட்டோவிலிருந்து வெளியே தூக்கி வந்தாள்.

''நேரமாச்சுப்பா.. பஸ்சை விட்டா அப்புறம் ரொம்ப லேட்டாயிடும். நாத்தனார் காஞ்சிபுரம் பஸ் ஸ்டான்ட்ல வந்து கூப்பிட்டுக்கறேன்னு இருக்காங்க. இதுக்கே பாதி ராத்திரி ஆயிடும். தனியா போகணும்"

ஆமா சென்னையிலேர்ந்து தனியா அனுப்பறாங்க. எப்ப கேட்டாலும் மாப்பிள்ளைக்கு லீவு இல்லைன்னு சொல்றே என்று நினைத்துக் கொண்டார். சொல்ல முடியவில்லை.

ஜெயலட்சுமியைப் பார்த்து தளியல் போட்டாச்சா – என்று சாமி கும்பிடுவது போல சைகைக் காட்டினார்.

"எங்க போடறது உள்ளே நுழையும்போதே சாவு சேதி... போன் வந்ததிலேர்ந்து பறக்குறா. எனக்கு பாதி சமையல்தான் முடிஞ்சுது. மோர் போட்டு சாப்பிட்டுட்டு கிளம்பியாச்சு. அடுத்த வாரம் பாத்துக்கலாம் அதான் பூதத்தாள்வார் உங்களைப் பார்த்தாச்சே..."

இத்தனை வருட தாம்பதயத்தில் ஒரு முறை கூட ஜெயலட்சுமி ஆலைக்கு வந்ததுமில்லை. இந்தக் கோலத்தில் பார்த்ததுமில்லை. அவள் கண்களில் ஓரம் நீர்த்துளி போலத் தெரிந்தது. புரியவில்லை அழுதாளா? இல்லை வியர்வைத்துளியா என்று புரியவில்லை.

பேத்தி வள்ளியின் தோளில் படுத்து அந்தப்பக்கம் தலையை வைத்திருந்தாள். அவள் தலையை தன் இரு கைகளாலும் வள்ளி அழுத்திப பிடித்திருந்தது போல இருந்தது.

பிள்ளையைத் திருப்பி முகத்தை காமிம்மா –

''இல்லைப்பா தெருவிலே ஒருமுறை இது மாதிரி பவுடர் எல்லாம் பூசிக்கிட்டு வேஷம் போட்டுட்டு ஒரு பூம் பூம் மாட்டுக்காரன் வந்தான். அவனைப் பார்த்துட்டு ஒரே அழுகை. அன்னிக்கு ராத்திரி ஜுரம் வந்துடுச்சுப்பா. இப்படி உன்னைப் பார்த்தா பயந்துடப்போறா உடம்புக்கு வந்துட்டா அப்புறம் நான்தான் கஷ்டப்படணும்...

ஒருகணம் தன்னுடலை தானே முழுமையாகப் பார்த்தார். வெய்யில் தாங்காமல் வியர்வை ஆறாகப் பெருகி உடலெங்கும் நீர்க்கோடுகள் இறங்கின. நெற்றி வியாவையைத் துடைக்கவும் மறந்து வள்ளியையே பார்த்தார்.

''நீ காஞ்சிபுரம் எல்லாம் வரவேணாம்பா. மாமனாருக்கு ஒண்ணுவிட்ட அண்ணன்தான். ஏதாச்சும் செய்யனுமனா நானே செஞ்சுக்கறேன் அப்ப கிளம்பட்டுமா?''

தொண்டைக்குள் திரண்டு வந்த துக்கத்தை எச்சில் கூட்டி விழுங்கி அடக்கினார். வாய்விட்டு அழுதால் கண்ணீர் திரண்டு வந்து உதடுகளுக்குள் நிரம்பிவிடும் என்று அஞ்சி ஐடம் மாதிரி நின்று கொண்டிருந்தார். அவரது தவிப்பைக் கவனிக்கவும் நேரமின்றி சட்டென ஆட்டோவுக்குள் ஏறினாள் வள்ளி. மிகுந்த தயக்கத்துடன் பின்னால் சென்று ஏறிக்கொண்டாள் ஜெயலட்சுமி.

மீண்டும் ஒருமுறை தன்னுடலை முழுவதுமாகப் பார்த்தார். வெடிக்காமலே அதன் வீரியம் பரவி சத்தமில்லாமலே புகைந்தது போல இருந்தது. காம்பவுண்ட சுவரில் பதிக்கப்பட்டிருந்த காந்தக்கல்லின் மீது கைகளை ஊன்றியபடி அப்படியே நின்றார் உடலின் வெப்பம் குறைவதாகத் தெரியவில்லை.

குளிக்கறியா? இல்லை.. அப்படியே பிஜிலி வெடிக்கு திரி கிள்ளி வச்சிடறியா?

எதற்காகவும் சிரிக்காமல் எந்தத் துக்கத்துக்காகவும் அழாமல் மனதின் உரையாடல்களோடு வாழும் ஞானத்தை வெடிமருந்து கற்றுத் தந்திருப்பதாகவே உணர்ந்தார் திருமால்.

மிச்ச நேரத்தை வீணடிக்க விரும்பாமல் பிஜிலி வெடிகளுக்கான வட்டுக்களை எடுத்து திரிகளை வைக்கத் தொடங்கினார்.

●

# அப்பா நாத்திகர்

## பாலகுமரன் பரிதி

அப்பா கடவுள் மறுப்பாளர் சாமி கும்பிட மாட்டார். பூஜை, விரதம், பரிகாரம், ஜோதிடம் ஜாதகம் எதிலும் நம்பிக்கை அற்றவர். எனக்கு ஜாதகமே எழுதவில்லை.



அப்பா சாமி கும்பிட மாட்டார். ஆனால் அம்மா சாமி கும்பிடுவதைத் தடுக்க மாட்டார். என்னிடம் கூட நாத்திகம் குறித்து கடவுள் மறுப்பு குறித்து அதிகம் பேசியதில்லை. அது அவரவர் உரிமை என்பதில் அவர் தெளிவாக இருந்தார்.

நான் கூட சிறுவயதில் சிறுவயது இல்லை ஒன்பதாவது படிக்கும் வரை சாமி கும்பிட்டுக்கிட்டு இருந்தேன். கிருஸ்தவ பள்ளி என்பதால் இயேசு மீது கரிசனம் அதிகம் இருந்தது.

பிறகு ஏதோ மாற்றம் எனக்கு நம்பிக்கை இல்லாமல் போனது. அதன் பிறகு சாமி கும்பிடுவது இல்லை. ஆனால் யாரவது அன்பாக கொடுக்கும் திருநீற்றை அவர்கள் முன்னாள பூசிக்கொள்வேன் அவர்கள் மகிழ்ச்சிக்காக. அப்பா திருநீரு பூசமாட்டார். ஆனால் கோயில் பிரசாதம் சாப்பிடுவார்.

"சாமி எப்படிடா சாப்பிடும்? நாமதான் சாப்பிடணும்" என்பார்.

அப்பாசிலநேரங்களில் படுக்கையிலிருந்து எழுந்து சோம்பல் முறிக்கும்போது அப்பா, முருகா சண்முகா வடிவேலா ஞானபண்டிதா எனச் சொல்வார்.

"டயடா இருக்குன்னு சோம்பல் முறிக்கிறிங்க. இதைச் சொல்லி முடிக்கவே டயாடா ஆயிடுவிங்க போலயே" என நான் சொல்லி சிரிப்பேன்.

ஒருநாள் நான் வீட்டில் தனியாக இருந்தபோது வெள்ளை அங்கி அணிந்த ஒருவர் வீட்டு வாசலிலிருந்து சார் என அழைத்தார் நான் வாசலுக்குப் போனேன்.

'அவர் வருகிறார்' என்றார்.

யாரென கேட்டேன்

'இயேசு வருகிறார்' என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

இப்படி இருக்கும் உலகம் இப்படி மாறப்போகிறது என ஏதேதோ படத்தைக் காட்டினார்.

நான் பதிலேதும் பேசாமல் வீட்டில் யாரும் இல்லை என்று சொல்லிட்டு வீட்டிற்குள் சென்று விட்டேன்.

இரண்டு வாரங்கள் கழித்து அதே வெள்ளை அங்கி ஆள் வந்தார்.

அப்பாவிடம் 'அவர் வருகிறார்' என்ற அதே வசனத்தை சொன்னார்.

அப்பா சாவகாசமாக நான் வெளியில் போறேன். நாளைக்கு வரச் சொல்லுங்க என்று சொல்லிவிட்டு பைக்கை எடுத்து புறப்பட்டார். வெள்ளை அங்கி ஆள் சிறிது நேரம் யோசித்துவிட்டு அடுத்த வீட்டுக்குச் சென்றார். எங்கள் குடியிருப்புப் பகுதியில் ஒரு விநாயகர் கோயில் அமைந்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு விநாயகர் சதுர்த்தியன்று விநாயகர் ஊர்வலம் நடத்த முடிவெடுத்தனர். நிதி வசூல் செய்ய ஆரம்பித்தனர்.

டொனேஷன் நோட்டுடன் ஒருவர் வீட்டுக்கு வந்தார். அப்பாவுக்கு தெரிந்தவர் தான் இருவருக்கும் பரஸ்பரம் நலம் விசாரிப்புகள் நடந்தன. சிறிது நேரம் கழித்து அப்பா.

''என்ன விஷயமா வந்திருக்கீங்க?'' என்று கேட்டார்.

''இல்ல சார் விநாயகர் சதுர்த்தி அன்னைக்கு விநாயகர் ஊர்வலம் வைக்கலாம்னு இருக்கோம். அதுக்குதான் டொனேஷன் வாங்க வந்திருக்கேன்'' என்றார்.

விநாயகர் ஊர்வலம்னா புரியலையே? எனத் திரும்பிக் கேட்டார் அப்பா.

''அதில்ல சார். கோயில் இருக்குற, விநாயகர பல்லக்குல வச்சி தெருவ சுத்தி வருவோம். உங்க வீட்டு வாசல்லயே நீங்க அர்ச்சனை பண்ணி விநாயகரை கும்பிட்டுக்கலாம்'' என்றார்.

'அப்பா கோபப்படவில்லை. அது இல்ல சார் விநாயகரை பார்க்கிறதா இருந்தா நானே கோயிலுக்கே வந்து பார்க்கிறேன். விநாயகர்லாம் என வீட்டு வாசலுக்கு வர வேண்டாம் என வந்தவரை பார்த்து வணங்கினார். அவர் எதுவும் பேசாமல் எழுந்து சென்றார்.'

பல்லக்கு என்றதும் அப்பா கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

'பல்லக்கு தூக்குபவர்களுக்குதான் தெரியும் கடவுளின் கனம் என்னவென்று. நீங்களும் உங்கள் மனதிலிருந்து கடவுளை இறக்கி வையிங்கள் சற்று இளைப்பாறுங்கள்'

கடவுளை இளைப்பாறுதலுக்கான இடமாக அனைவரும் கருதும்போது, அப்பாவோ கடவுளை இறக்கி வைத்துவிட்டு இளைப்பாறச் சொல்கிறார்.

நான் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். வகுப்பாசிரியரிடம் டியூசன் படித்தேன். அந்த ஆசிரியர் வீட்டு மொட்டைமாடியில் மாலை வேளைகளில் டியூசன் நடக்கும். இருட்டிய பிறகு மாணவர்களை எல்லாம் அருகில் அமரவைத்து ஜபம் செய்து அனுப்பி வைப்பார். அந்த ஆசிரியர் அனைத்தும் மாணவர்களும் சென்று விடுவார்கள். அப்பா வருவதற்கு நான் காத்திருப்பேன். அப்பா வந்து என்னை அனழத்துச் செல்வார்.

ஒரு நாள் ஆசிரியர் ஜெபம் செய்து கொண்டிருந்தபோது அப்பா மாடிக்கு வந்து விட்டார். ஏதோ பாடம் நடத்துகிறார் என்று படியிலேயே நின்றுவிட்டார். மாணவர்கள் கலைந்து சென்றனர்.

''அப்பா கேட்டார் என்னடா சாரு இருட்டுல உட்கார வச்சு பாடம் நடத்துராரு''

''பாடம் இல்லப்பா ஜெபம் பண்ணினார்'' எனறேன்

விருவிருவென மாடி ஏறிய அப்பா 'சாமியாட' ஆரம்பித்தார். அந்த ஆசிரியர் வெலவெலத்துப் போனார்

மறுநாள் பயந்துகொண்டே பள்ளிக்குச் சென்றேன். வகுப்பாசிரியரிடம் வேற இவர் சண்டை போட்டு விட்டாரே என ஒரே குழப்பமாக இருந்தது. வகுப்பு தொடங்கியது அந்த ஆசிரியர் என்னருகில் வந்து பாலா அப்பா ஒன்னும் சொல்லலையே? என கேட்டார். எதற்கு அப்படி கேட்டார் என்று அப்போது எனக்கு புரியவில்லை.

எங்கள் வீட்டில் அமாவாசை விரதம், புரட்டாசி விரதம் என்று எதுவுமில்லை. ஆனால் அப்பா மறைவுக்குப் பிறகு அம்மா கண்டிப்பாகச் சொல்லி விட்டார் அமாவாசை விரதம் உண்டு என. அனைத்தையும் மறுத்து வாழ்ந்த அப்பாவிற்கு அமாவாசை விரதம் எனக்கு முரணாக தெரிகிறது.

இப்போது என் மனைவி சாமி கும்பிடுகிறாள். ஐந்து வயது மகன் திருநீற்றை பட்டையாக அடித்துக்கொள்கிறான். அப்பாவை போலவே நானும் எதையும் தடுப்பதில்லை. ஒருநாள் என் மகனுக்கும் கடவுள் குறித்த புரிதல் வரும். அன்று அவன் விரும்பும் வழியில் செல்லட்டும் பகுத்து அறிவதுதானே பகுத்தறிவு...!

●

# சுவர்

## நிழலி, பெரம்பலூர்

சிறை சூழ்ந்திருக்கும் சுவர்களைப் போல ஒவ்வொரு வீட்டையும் கழுத்துயர சுவர் சூழ்ந்திருந்தது. அழகிற்கென பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகளும், சுவர் கட்டைகளில் மண்சட்டி படர்ந்திருந்த குட்டிப் பூக்களும் சுவர்களின் வனப்பை மெருகேற்றிக் கொண்டிருந்தன.

சல்லிகள் பொருத்திய வேலைப் பாடுகளும், சிலை வடிவிலான வேலைபாடுகளுமென ஒவ்வொரு வீட்டின் சுவர்களும் வெவ்வேறு அழகியலில் காட்சியளித்தன.

பக்கத்து வீட்டிற்கு பலகாரம் கொடுக்க சுவரின் இரும்புக் கதவுகள் திறந்து சுற்றி வளைத்து வரும் உறவுகளின் நீளத்தை அந்த சுவர்கள் அளந்துகொண்டிருந்தன.

''பூனக்கெழவி வீட்டு சந்துக்குள்ள போனா பக்கத்து தெரு மதினா மவ வீடு ஒரெட்டுல வந்துடும்.. ஓடிப்போயி கொஞ்ச உறமோரு வாங்கிட்டு வா தாயினு'' வீட்டுக்கு வந்த பேரக் குழந்தையிடம் தடம் சொல்லும் போது அந்த சுவர் அங்கே இருந்ததில்லை.

ஓடி ஒரு நிமிடத்திற்குள் வீடு வந்திடும் குழந்தை இப்போது இரண்டு தெரு கடந்தே செல்லவேண்டும் உறமோருக்காக..

ஒவ்வொரு வீட்டின் இடை வெளிக்குள்ளும் ஊசியா நூலா என்று விளையாடும் குழந்தைகளின் விளையாட்டு போலவே, ஒரு கை நீட்டும் அளவிருக்கும் சந்தில் ஓராயிரம் பட்டாம் பூச்சிகளென சாயங்காலம் தொடங்கி இரவு வரை குழந்தைகள் கண்ணாம்பூச்சி விளையாடி கொண்டிருந்தனர். ஓடிப்பிடித்து விளையாடுபவர்களை பிடிக்க முடியாமல் ஓரியாட்டம் போடும் அம்மாக்களுக்கு அந்த சந்துகளே பெரும் மைதானமாகி இருக்கும்.

குச்சியை எடுத்துக்கொண்டு விரட்டியடிக்கும் கரங்களில் அகப்படாமல் அத்தை வீட்டு சந்திற்குள் நுழைந்து பெரியம்மா வீட்டு சந்துக்குள் வெளிவரும் முயல்குட்டிகளைப் பிடிக்க முடியாமல்

''தோ நின்னுடு சின்னகுட்டி.. நீ நின்னுட்டா உன்னய அடிக்க மாட்டேன்.. அம்மாவால ஓட முடியல.. இதோ குச்சிய கீழ போட்டுட்டேன்.. " என்று குச்சியை பின் பக்கம் ஒளித்துக்கொண்டு மூச்சிரைக்கும் அம்மாவுக்கு சந்தின் குறுகலே சமாதானங்களை செய்திடும்

"சாவுக்கு போயிட்டு வந்தியா..

போ போ ! சந்து வழியா பின்னால கொல்லைக்கு போயி தலைக்கு தண்ணி ஊத்திக்க.. துணிய அவுத்து நனைச்சி ஓரமா வையி...'' என்று சொல்லும் கிழவிக்கு சந்துக்குள் தீட்டுகள் பட்டுப்போகும்.

வெயில் கொளுத்திக்கொண்டிருக்கும் வேளையில் கொட்டாங்குச்சியில் மண் நிரப்பி சோறாக்கும் குழந்தைகளின் கூடாரமாக நிழல் கொடுத்து நிற்கும் அந்த சந்துகளில் சொப்புச் சாமான் கனவுகள் உருண்டோடும்.

''சண்டையிட்டு கொண்ட பக்கத்து வீட்டு உறவுகளின் சமாதானப் புறாவாக பறந்துகொண்டிருக்கும் அவர்கள் வீட்டு குழந்தைகளை எதிர்ப்பில்லாமல் கட்டியணைத்துக்கொள்ளும் இரு வீட்டிற்கும் இடையேயான சந்திற்கு வெள்ளை நிறம் இருந்திருக்கிறது''.

"இந்தாங்க உங்க வீட்டு கோழி எங்கூட்டு சந்துல வந்து முட்டயிட்டுருக்கு. புடிச்சி அட வைக்க எடம் பாத்து அடைய வையி'' என்று கரிசனமாக பேசும் செல்லாத்தாவின் சந்திற்குள் ஆயிரம் கோழிக்குஞ்சுகள் அடை பொரித்திருக்கும்.

மழைக்காலத்தின் குளிருக்கு இதமாக மண்ணைத் தோண்டி உடல் சூடாக்கி சுருண்டுகொள்ள வாகான இடமாக சந்தின் உட்பரப்பை தனதாக்கிக் கொள்ளும் தெரு நாய்களின் வீடாகும் போது, கூரை ஒழுகி சொட்டும் தண்ணீரும் காற்றில் கரையும். இந்த சுவர்களால் அழிக்கப்பட்ட அவைகளின் இருப்பிடம் தேடி ஊரெல்லாம் திரிந்துகொண்டிருக்கும் நாய்களுக்கு மழைக்காலங்களே மரணித்திருந்தன...

*தொலைந்து போன கோலி குண்டுகள் சந்தின் முனையில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தன...*

*கயிற்றின் பிடியிலிருந்து விடுபட்ட பம்பரங்கள் தெறித்து சந்துக்குள் சுற்றிக்கொண்டிருந்தன...*

*பாண்டி விளையாடி செதுக்கிய சில்லிகள் உடைப்பட்டு அந்த சந்துக்குள் தெறித்து விழும்...*

*கோகோ விளையாடுகையில் கோ விட்டு தள்ளிவிடும் பெண்கள் சில சமயம் சந்துக்குள் புரண்டு விழுவர்...*

*கில்லி அடித்த கிட்டிப்புல் சந்தின் மறுபக்கம் பறந்தோடும்..*

*ஒரு ஊருல ஆயா வடைசுடும், கதைகள் சந்தின் மறுபக்கம் தாண்டி பக்கத்து வீட்டு குழந்தையையும் தூங்க வைக்கும்.*

*குழந்தைகளின் அத்தனை விளையாட்டிற்கும் நடுவராகும் சந்திற்கு இன்னொரு குழந்தை முகம் இருந்தது. இப்படி எல்லாவற்றையும் கடந்து உருவானது இந்த சுவர்கள்..*

*''எவடி அவ என்னூட்டு சந்து வழியா போறவ..'' என்ற ஒற்றைப் பொறாமையில் தனதாக்கிக்கொள்ள எழுந்தவைகள்தான் இந்த சுவர்கள்.*

*''ஆத்தா அவ தலைக்கு குளிச்சிருக்கா.. நம்ம வூட்டு சந்து வழியால போறா.. தீட்டுக்காரி ஒரு எடமா இருந்தாதானே''*

*''இந்த கொலவானுங்க வேற பொழுதினிக்கும் ஓடாடி கிட்டு.. நிம்மதியா செத்த தல சாய முடியுதா..''*

*''சந்துல வேலி அடைச்சாதான் சரிபட்டு வரும் .. அத்தாதண்டி சால இருக்குறப்ப இங்கனயேதான் ஓடுறாளுங்க ஒடியாறாளுங்க''*

*''எந்த சக்காளத்தி மவனு தெரியல.. என்னூட்டு சந்துல மூத்திரம் பேயுறாளுவ.. சந்து பக்கம் போக முடியுதா! நாத்தம் கொடல புடுங்குது''*

*''ராத்திரி எவளோ ராக்காயி வூட்டு சந்துல நின்னு எவங்கிட்டேயோ பேசிட்டு இருந்தாளாமே...''*

*''அந்த சந்துகுள்ளதான் பூச்சாண்டி ஒளிஞ்சிருக்கான்.. நீ சோறு தின்னல உன்னய வந்து தூக்கிட்டுப் போயிடு வான்..''*

*ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையாக அந்த சந்துகளை தனதாக்கிக் கொண்டிருந்தனர். ஊரின் ஒட்டுமொத்த சந்துக்குள்ளும் ஒரு நெடுங்கதை நீண்டு கொண்டே இருந்தது.*

*அதன் இருளுக்குள் நிழலாடி மறையும் அத்தனை மனிதர்களுக்கும் சந்தின் உயிர் ஒளி ஒன்று பூத்திருந்தது.*

*சுவர்களுக்கு மத்தியில் காணமால் இருக்கும் அந்த சந்துகளை இப்போது அவர்கள் யாரும் தேடவில்லை.*

*தாயம் விளையாடும் இரும்புக் கட்டைகளின் கணீர் ஒலி கேட்டு சந்துக்குள் நுழைந்து,*

*காய் நகர்த்தும் முன்னே "நானும் வெளையாட வரேன் அத்தாச்சி''*

*என்று சொல்லும் வயசுப்பெண்களின் ஓட்டமும் நடையும் காலில்லாமல் முடங்கி கிடக்க, எழும்பியிருந்த சுவர்களின் கற்களிடையே அந்த சந்துகள் பெருமூச்சிட்டு உருமியது.*

*" குட்டிமா.. எங்க வீட்டுக்கு விளையாட வரியா..'' என்று சுவரில் தொற்றிக்கொண்டு கேட்கும் எதிர்வீட்டு மணியிடம் "உங்க வீட்டு கதவுதான் பூட்டியிருக்கே'' என்று சொல்லும் குட்டிமாவின் பதிலுக்கு வாய்விட்டு சிரிக்கும் சந்துகள்,*

*யாருக்கும் தெரியாமல் சில சமயம் ஏங்கி தவித்தது. நொடிக்கொரு முறை எட்டிப்பார்த்துக்கொண்டு, "ஏட்டி உங்கூட்டில என்ன சோறாக்குறவ.. எம்புருசன் வூட்டுல இல்ல.. பொசாயதான் வருவாரு.. நாவொண்டி தா .. கொஞ்ச கொழம்பு கொடுடி" என்று சொல்லும் அக்காவிற்கு சுடச்சுட குழம்பு கொடுக்கும் போது சந்தெல்லாம் பருப்பின் மணம் படிந்திருக்கும்.*

*சுவர்களுக்கு இடையில் யாருமற்று இருக்கிறார்கள் இப்போது. என்றேனும் ஒருநாள் சந்தித்துக்கொள்ளும்போது, சிறு புன்னகை ஒன்றை உதிர்த்து விட்டு செல்லும் அவர்களை இன்னும் தூரமாக்கியது அந்த அழகிய சுவர்கள்.*

‘‘வூட்ட சுத்திச் செவுரு எடுக்க போறோம்.. எல்லா கொள்ளிக்கண்ணும் எங்கூட்டு மேல தான் இருக்கு... எம்புள்ள அரும்பாடுபட்டு கட்டிருக்கான்..செலவோட செலவா சொவறெடுத்துடலாமுனு எம்மவந்தான் சொன்னான்.. " என்று பெருமையடித்துக்கொண்டவளை பின் தொடர்ந்தே ஒவ்வொரு வீட்டின் சுற்றுச்சுவரும் மடமடவென வளர்ந்தது.

சந்துகளின் சந்ததிகள் சுவர்களின் அடியில் நசுங்கி கடைசி மூச்சை பிடித்தபடி வேரறுந்திருந்தது.

‘‘எப்படியோ சுவர் எழுப்பியாச்சி...’’ என்று தன்னை ஆசுவாசப்படுத்தி ஊரின் ஒவ்வொரு திசையிலும் சிறைச்சாலையின் ஒவ்வொரு அறையென தொக்கி நின்றிருந்த சுவர்கள் எல்லாம் தங்களின் நிறம் மறந்து இருளின் வண்ணத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன.

அந்தக் காலத்தின் கதை பேசும் ஒன்றிரண்டு பெரியவர்கள் மட்டும் சுவர்களுக்கிடையே நின்றுகொண்டு கதை பேசிக்கொண்டிருக்க அவர்களின் கதைசொல்லியாக மாறியிருந்த சந்தின் குறுகிய பாதைகள் அவர்களின் அகண்ட நினைவாக மாறியிருந்தது.

யாரேனும் எதையேனும் செய்து கொண்டிருக்கட்டும்... கடந்து செல்லும் சுவர்களுக்குள் ஆன்மாவை அடைத்து வைத்திருக்கும் சந்துகளின் பேரொலி இனி அந்த சுவர்களுக்கு மட்டுமே சொந்தமானது.

●

கவிதை

# அம்மை

துரத்திய துன்பங்களை
தூரத்துக்குத் தள்ளி
வறுமை விரட்டிய
எங்கள் குடும்பத்தை
வாழ வைத்தவள் நீ...

வெற்றுக் கால்களில்
காடு மேடுகளில்
கடந்து சென்றன
உன் கால்கள் அன்று.
அதனால்தான்
என் கால்கள்
மேட்டில் மட்டுமே
நடந்து செல்கின்றன இன்று.

இரவிக்கை அணியாத
உன் உடம்பு
கொடுத்த உழைப்புதான்
எனது முழுக்கை சட்டையும்
முழங்கால் சட்டையும்.

ஒரு சிரங்கை
எண்ணெய் ஊற்றி
நீ வைத்த புளிச்சாறு
என்றைக்கும் எனக்கு
கனிச்சாறு!

பிஞ்சைக்குச் சென்று
திரும்பும் மாலைகளில்
பயத்தங் காய்களை
பங்கிட்டுக் கொடுத்து
எங்கள் வாய்பார்த்து
உன் வயிறு நிறையும்..!
எங்களுக்கென்று
எல்லாம் தந்தவள்
உனக்கென்று
ஒன்றும் கேட்டதில்லை..

தேயாமல்
என்னை அழைத்த குரல்
ஓயாமல்
என் செவிகளில் நிற்கிறது!

நீலநிறக் கோடம்பாக்கச்
சேலை கட்டிய
பாட்டிகளைப் பார்க்கும் போதெல்லாம்
உன் முகத்தையே தேடுகிறது
என் மனசு.

நீ அழுது
எங்களை சிரிக்க வைத்தாய்...
இப்போது
நாங்கள் அழுகிறோம்
நீ சிரிக்கிறாய் புகைப்படத்தில்...!

**கோ.பூமாரி**

●

கவிதை

# இடங்காண்கோட்டை சிவக்குமாரின் தெறிப்புகள்.

ஓநாய்கள் ஒன்றுசேர்ந்து
ஊளையிடுகின்றன
அமைதி.. அமைதி.. என்று

கொழுத்தவர்களுக்குத்
தாலாட்டு
இளைத்தவனின் ஒப்பாரி

வெள்ளாட்டுக் கூட்டத்துக்கு
வெறிநாய்கள் காவல்
ஈழ முகாம்கள்

அமைதிப் புத்தனுக்குப்
படையல்
தமிழர்களின் தலைக்கறி

செத்த பிறகு
சோறு அனுப்பும்
ஐ.நா அவை

பணக்காரர் பந்தியில்
பரிமாறப்படுகிறது
ஏழைகளின் ஏற்றம்

அரசியல் குழிபறிப்புக் கூட்டம்
உணர்வை மழித்துவிட்டு
மீசையை முறுக்கச் சொல்லும்

மட்டைப்பந்தில்
நடக்கிறது
மடையனாக்கும் வணிகம்

குரல்வளை நெரித்த பின்பு
உலகம் சொல்கிறது
தமிழர்கள் மூச்சுவிடுகிறார்கள்

இலங்கையாண்ட இனத்தை
எங்கேயாவது போ என்பது
கோத்தபயலின் கோணங்கித்தனம்

காவலர்கள் இனம் காக்கக்
காவடியெடுக்கிறார்கள்
தில்லிக்கு..

தில்லிக்காக இங்கே
தலைகீழ்த் தவம்
குரங்குப் பிறவி

ஏறிச்சென்றால் எழுவது புல்
மாறி மாறி மண்டியிட்டால்
மாபெரும் தலைவன்

காட்டி ..... கூட்டி .....
பிழைப்பது
அரசியலில் வெற்றி

உள்ளூரில் திருடுபவன்
ஊரையே திருடுவது
தலைமைக்கான தகுதி

ஒருமுறை கொடுத்துவிட்டு
ஓராயிரம் முறை திருடுவது
மக்களாட்சி மரபு

ஆட்சியின் மாட்சி
கல்லறையிலும்
சில்லறை பொறுக்கும்

ஆயுதம் விற்றுவிட்டு
அமைதி பேசுகிறது
பணந்தின்னிக் கழுகு

உழைத்ததைப் பிடுங்கித் தின்னும்
உலகப் பெரும் போக்கிரி
வல்லரசு

திருடியவனைக் காக்கும்
திருத்தமான முறைக்குப் பெயர்
சட்டம்

இழந்தது மீட்பவனைத்
தீவிரவாதி என்கிறது
வல்லாதிக்கம்

பிடுங்கியதைக் கொடுத்துப்
பிச்சை கேட்டால்
கிடைக்கிறது பதவி

திருடர்கள் நடத்தும்
திறந்தவெளி நாடகம்
தேர்தல்

ஏய்ப்பவர்களுக்கும்
ஏமாளிகளுக்குமான திருநாள்
தேர்தல் நாள்

●

# அப்பாயி !

நாவலாபுரத்துலருந்து
நாலு ஈய சட்டியோட
பொழைக்க வந்த தாத்தா
மாட்டுத்தரவு மளிக ஏவாரம்னு எதையும்
விட்டுவைக்கவில்லை

அப்பாயி அதுக்கும்
மேல ... எதையாவது
நேம்பி புடைத்துக்
கொண்டேதானிருப்பாள்
இட்டிலி சுட்டு விற்பாள்
களை வெட்டப் போவாள்

எம்பாட்டன் குடுத்து
வச்சவன்தான்
எல்லாத்துக்கும்
"எவ்வே" தான்
பொன்னம்மான்னு
பேர் சொல்லிக்
கூப்பிட்டு பார்த்ததே
இல்லை யாரும் ..

எட்டுப் புள்ளயிலே
ஏழுக்கு கொற ஆயுசு
தப்புனது எங்கப்பன்
மட்டும்தான்

தம்பி மவதான்னாலும்
அம்மாவை அப்பாயி
எந்நேரமும் ஏவுரிஞ்சு
கிட்டேதான் கெடப்பாள்

ஆனா சாமத்துல
கண்ணு முழிச்சி புள்ளதாச்சி
அம்மாவுக்கு பெருஞ்சீரவம்
அரச்சுக் கொடுப்பாள்

மல்லாக்கப் படுத்துகிட்டு
மாருலப் போட்டுக்கிட்டு
எட்டி ஒதைடா என்பாள்
ஏங்குலசாமி நீதான்டா என்பாள்

மூக்குல வாய வச்சு
நெஞ்சு சளிய நேக்கா
உறிஞ்செடுப்பாள்
வெரலி மஞ்சள நல்ல
வெளக்குல காட்டி நல்லா
இழுக்கச் சொல்வாள்

சனிக்கெழம தவறாம
எண்ணெ தேச்சி
குளிக்க வைப்பாள்

கண்ணுல ரெண்டு
சொட்டு விட்டு
முழிச்சுப் பார்க்கச்
சொல்லும் போது
ஆவுசம் வந்தாலும்,
பழைய சோத்துக்குப் பதிலா அப்பாயி
சுட்டுத் தரும் இட்டிலியில்
அப்பாயி வாசமடிக்கும்

அப்பாயி செத்தபோது
"எவ்வே" என்று
பெருங்குரலெடுத்து
அழுது ஓய்ந்த தாத்தா அதன் பிறகு
யாரிடமும்
பேசவே இல்லை !

**மோ**



# சாதல் இயல்பு

## சின்னப்பயல்

பிறப்பை கொண்டாடி மகிழ்கிறோம் நாம். ஆனால் இறப்பை…? மரணத்தை…? பிறப்பை ஏற்றுக் கொள்ளும் மனம், மரணத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. மரணமும் இயல்பானதே! விதை தளிராவதும், தளிர் துளிராவதும், துளிர் கொழுந்தாவதும், கொழுந்து இலையாவதும், இலை பழுப்பாவதும், பழுப்பு சருகாவதும்தானே சமூக இயங்கியல். இதனை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியதை தவிர வேறு என்ன வழி இருக்கிறது நமக்கு.

மரணம் ஒருநாள் மட்டும் நிகழ்வதில்லை. அது ஒவ்வொரு நாளும் நமக்குள் நிகழ்கிறது என்கிறது குண்டலகேசி.

**பாளையாம் தன்மை செத்தும்**
**பாலனாம் தன்மை செத்தும்**
**காளையாம் தன்மை செத்தும்**
**காமுறும் இளமை செத்தும்**
**மீளும் இவ் இயல்பும் இன்னே**
**மேல்வரும் மூப்பும் ஆகி**
**நாளும்நாள் சாகின்றாமால்**
**நமக்கு நாம் அழாதது என்னோ"**

இங்கு எதுவும் நிரந்தரமில்லை. ஒரு பருவம் செத்து மறு பருவம் துளிர்க்கிறது. அப்போதெல்லாம் அழாமல், உடலை விட்டு உயிர் பிரியும்போது அழுகின்றோமே இது என்ன புதுமை என்று வினவுகிறார் நாதகுத்தனார்.

அந்தக்காலத் துறவிகள் எல்லாவற்றையும் துறந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் அந்தக்காலத் துறவிகள். அதற்கு பட்டினத்தார் வாழ்வு துறவிகளுக்கான படிப்பினை. எல்லா உறவுகளையும் எளிதில் துறந்த பட்டினத்தாரால் கூட அவ்வளவு எளிதில் துறக்க முடியாதது அம்மாவின் அன்பு. அம்மாவின் அன்பை எவரால்தான் துறக்க முடியும்? அத்தகைய சக்தி எவருக்குத்தான் உண்டு. பட்டினத்தார் துறவுவாழ்வு மேற்கொண்டபோது அன்னையிடம், அவர் இறக்கும் தருவாயில் நான் வந்து சேர்வேன் என்று சத்தியம் செய்து இருந்தார். அவ்வாறே வந்தும் சேர்ந்தார். வந்தவரின் கைகளில் வாய்க்கரிசியைக் கொடுத்துப் போடச் சொல்கின்றனர்.

பெருங்குரலெடுக்கிறார் பட்டினத்தார்,

**"அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு**
**வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் ருசியுள்ள**
**தேனே திரவியமே செல்வத் திரவியப் பூமானே**
**மகனே என அழைத்த வாய்க்கு."**

என்கிறார்.

காணுகின்ற காட்சிகள் யாவும் இன்பமயமானது பாரதிக்கு. உலகம் யாவையும் இங்கு இனிது என்பவர் அவர்.

**"ஆண் நன்று, பெண் இனிது**
**குழந்தை இன்பம்**
**இளமை இனிது, முதுமை நன்று**
**உயிர் நன்று சாதல் இனிது"**



என்று சொன்ன பாரதியின் சாதல் இனிதாகவா இருந்தது. 38 வயதில் அந்த மாகவிஞனை திருவல்லிக்கேணி யானைக்கு அல்லவா தின்னக் கொடுத்தோம். பாரதிக்கு 38. நம்முடைய பட்டுக்கோட்டையை 29 வயதில் அல்லவா காலன் வாரி எடுத்துக் கொண்டான். திருமணமான இரண்டு ஆண்டுக்குள்,

ஐந்து மாதக் கைக்குழந்தையையும், தமிழ் கூறும் நல்லுலகையும் தவிக்கவிட்டல்லவா போய் சேர்ந்தார். தன்னுடைய இரங்கற் கவிதையில் புலம்பி அழுவாரே கண்ணதாசன்.

**“கல்யாண சுந்தரனே**
**ஓர் கண்ணியனே**
**ஓர் பொழுதும்**
**பொல்லாங்கு செய்யாத**
**புண்ணியனே..**
**சாவது உலகியற்கை**
**சாவதற்கும் நீதியுண்டு..”**

என்று நீதியில்லாத சாவு பட்டுக்கோட்டைக்கு வாய்த்ததை எண்ணி புலம்புவார் கண்ணதாசன்.

எதனையும் கோட்பாட்டின்படி பகுத்தறிவுகண் கொண்டு பார்க்கும் தந்தை பெரியாரால் கூட அத்தகைய மரணத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தன்னுடைய மனைவி நாகம்மையார் இறந்தபோது பெரியார் எழுதியது கண்ணீர் காவியம். பெரியார் எழுதுகிறார்,

“அதென்னவென்றால் நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும் நான் பொதுநல சேவையில் ஈடுபட்டபிறகு பொதுநலக் காரியங்களுக்கும் சிறப்பாகச் சுயமரியாதை இயக்கத்தினருக்குமே பயன்படுத்தி வந்தேன் என்பதுதான். நாகம்மாள், நான் காங்கிரசில் இருக்கும்போதும் மறியல் விசயங்களிலும், வைக்கம் சத்தியாக்கிரக விசயத்திலும் சுயமரியாதை இயக்கத்திலும் ஒத்துழைத்து வந்ததும் உலகம் அறிந்ததாகும்.



ஆகவே, நாகம்மாள் மறைந்தது எனக்கொரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா! ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா! இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா! உணர்ச்சி போயிற் றென்று சொல்லட்டுமா! எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா! எதுவும் விளங்கவில்லையே..! என்கிறார் தந்தை பெரியார்.

நமக்கும் எதுவும் விளங்கவில்லை. அத்தகைய முகம் கொடுக்க முடியாத ஒரு மரணம்தான் கண்ணாமூச்சி அச்சகத்தார், பத்திரிக்கையாளர், பன்முக ஆளுமையுள்ள கவிஞர் விடாரண்யத்தின் வாழ்வினையர் வி.மீனாட்சி அம்மாளின் மரணம். மகள் பெங்களூருவில், மகன் அமெரிக்காவில். கி. விடாரண்யம் மீனாட்சி இணையர் இருவரும் இன்பமாகவே வாழ்ந்து வந்தனர். ஐந்தாம் வகுப்பிற்கு மேல் தாண்டாத மீனாட்சி அம்மாளுக்கு தேவாரமும், திருவாசகமும், திருப்புகழும் அத்துப்படி. பாரதிதாசனின் குடும்பவிளக்கு தலைவியாய் சுற்றம் பேணும் பண்பு காத்தவர். விடாரண்யத்தின் மூத்த சகோதரர் சிறுநீரகம் அறுவை சிகிச்சையின்போது தன் கணவரை உறுப்புக் கொடை செய்யச் சொன்னவர். சன், கேம்ப், அமெரிக்கா, ஹெல்ப் என்ற நான்கு வார்த்தைகளை வைத்துக்கொண்டு தன்னந்தனியாக அமெரிக்கா சென்று வந்த துணிச்சல் மிக்கவர்.

விடாரண்யத்தின் இலக்கிய, இதழியல், அரசியல் செயல்பாடுகளுக்கு பின்புலமாக இருந்து இயக்கியவர். ஆதலால் விடாரண்யம் இயங்கியவர். சென்ற ஞாயிறு 4.2.2024. மரணம் சில பேருக்கு பூனையைப் போல பதுங்கி பதுங்கி வரும். சிலருக்கு மோட்டார் சைக்கிளைப் போல விரைந்து வரும். இரண்டாவது முதலில் வந்தது மீனாட்சி அம்மாளுக்கு.

செய்தி கிடைத்தவுடன் மணவூருக்கு ஓடினோம் நானும் நண்பர் தமிழ்ச்செல்வனும். கலங்கி நின்றவரின் கைகளைப் பிடித்து நாங்கள் ஆறுதல் சொன்னபோது, கண்ணாமூச்சி ஏன் தாமதமாகிறது, விரைந்து முடிங்க என்று அவர் சொன்னதுதான் வியப்பின் உச்சம். ஆறுதலோ தேறுதலோ சொல்ல வார்த்தைகள் இல்லை எங்களுக்கு. விடாரண்யத்தின் கலை இலக்கிய இயங்குதலே அவருக்கான ஆறுதலாகட்டும். சாதல் இயல்பு. பாரதி வேண்டுமானால் சாதல் இனிது என்று சொல்லலாம். அவர் மாகவி. அப்படித்தான் சொல்வார். ஆனால் நாம்? பேசுவோம். ●

# வாழ்த்தி மகிழ்கிறோம்...




VCRG IN

HOTEL
**CHURCH PARK**

FEEL THE OCEAN

Free wifi | Amble car parking | Cooking facility | 24hours Hot water | 24hours power Backup

☎ 04365 - 263300

+91 94895 63300, +91 98425 67037

No. 126/14 Thonithurai road, Velankanni, Nagapattinam - 611111


Siva
தொழில்நுட்பமே
எங்கள் சிறப்பம்சம்
உங்கள் இல்ல
நிகழ்வுகளை துல்லியமாக
பதிவு செய்திட
சிவா
வீடியோஸ்
டிஜிட்டல் ஸ்டுடியோ
& லேசர் கலர் லேப்
மன்னார்குடி
செல் : 93440 10195 - 92620 74795
OUT DOOR PHOTOGRAPHY
WEDDING VIDEOGRAPHY
SPOT MIXING & YOU TUBE LIVE
WALL LED DISPLAY